மிருசுவில் தமிழ்தாசனின்

நான்காவது வெளியீடாக

# காகிதக் கப்பல்கள்

## சிறுகதைத் தொகுப்பு

29.01.2017

திரு.மி

திரு.மிருசுவில் தமிழ்தாசனின்.

# காகிதக் கப்பல்கள்

சிறுகதைத் தொகுப்பு

சமர்ப்பணம்

என்னை ஆளாக்கி வளர்த்த என்
அன்னை தந்தையர்க்கு இம்மலர்
சமர்ப்பணம்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : காகிதக் கப்பல்கள் |
| ஆசிரியர் | : திரு.மிருசுவில் தமிழ்தாசன். |
| முதற் பதிப்பு | : 2017 தை |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | : 104 + VIII |
| அளவு | : A 5 |
| விலை | : 200/= |
| கணினி வடிவமைப்பு | : சக்தி பதிப்பகம் |
| அச்சுப் பதிப்பு | : சக்தி பதிப்பகம்,<br>ஏகாம்பரம் வீதி,<br>மீசாலை கிழக்கு,<br>மீசாலை. |
| அச்சிடப்பட்ட பிரதிகள் | : 350 |

I.S.B.N - 978-955-42283-1-3

## அணிந்துரை

## பன்முக ஆளுமையாளர் தமிழ்த்தாசன்

"எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் எத்தனையோ காட்சிகளைப் பார்க்கிறோம். பல்வேறுவிதமான மனிதர்களைச் சந்திக்கிறோம். இன்பம், துன்பம், மகிழ்ச்சி, வெறுப்பு, கோபம் முதலான பல உணர்வுகளையும் தரக்கூடிய சம்பவங்களைக் கடந்து வருகிறோம். அநியாயங்கள், அக்கிரமங்கள், மனதை நெருடும் செயல்கள் எனப் பலவற்றையும் ஜீரணித்துக் கொள்கிறோம்".

பார்த்ததோடு எங்கள் பணி முடிந்துவிடுகிறது. தொடரும் வாழ்வை எதிர்கொண்டு எங்கள் பயணம் தொடர்கிறது. அதனால்தான் எங்கள் வாழ்வும் - எதிர்கால சந்ததிக்குப் பயனற்றதாகி முடிந்து போகின்றது.

இந்த வரையறைக்குள் அடக்கப்பட முடியாதவர் நண்பர் மிருசுவில் தமிழ்த்தாசன் அவர்கள். ஏனெனில் அவர் ஒரு சிறந்த கதாசிரியர். தன் நெஞ்சத்து நெருடல்களை, சமூகத்தில் காணும் அவலங்களை, அடுத்தவர் படும் துயரங்களை, அதர்மக் கோளாறுகளை, ஏமாற்று வித்தைகளை, இழிவு தரும் பண்பாட்டுக் கூறுகளைக் காணும் போது, கொதிக்கும் இயல்பு அவருக்கு இருக்கிறது. அந்த இயல்பான அவருக்கேயுரிய பண்புதான் - இன்று அவரை எழுதுகோல் தூக்கி எழுத்துழவு நடத்த வைத்திருக்கிறது.

இருபத்தைந்து முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே இவரது சமூக நீதிக் கண்ணோட்டத்தை நான் தரிசனம் செய்திருக்கிறேன். கவிஞனாக, கதாசிரியனாக, நாடக நடிகராக, எழுத்தாளராக, அறிவிப்பாளராக பல்வேறு முகங்கள் தமிழ்த் தாசனுக்கு உண்டு என்பதை நான் அப்போதே உணர்ந்து கொண்டேன்.

ஆனால் நாட்டுச் சூழல்களாலும் - நம்மை வருத்திய பொருளாதார நெருக்கடிகளாலும் - அவரது எழுத்துத் திறமை முடங்கிக் கிடந்தது.

சமூகப் பார்வையும், சத்திய நோக்கும், அநீதிகளைக் கண்டு ஆர்ப்பரிக்கும் மனமும் அவருக்கு சொந்தமானவை என்பதால் - ஆயிரம் சோதனைகளுக்கு மத்தியிலும் அவர் ஒரு சிறந்த படைப்பாளியாக இன்று முகிழ்த்திருக்கிறார். காலம் உருவாக்கிய கதாசிரியர் - கதையாசிரியர் தமிழ்த்தாசன் என்பதை மகிழ்ச்சியுடன் இவ்விடத்தில் பதிவு செய்கிறேன்.

2014ம் ஆண்டு காலப்பகுதியினுள் - அவரது யதார்த்தம் என்னும் சிறுகதைத் தொகுப்பும், 2015ல் மனிதர்கள் சிறுகதைத் தொகுப்பும், "வாழ நினைத்தால் வாழலாம்" என்னும் நாவல் 2016இலும் தற்போது "காகிதக் கப்பல்கள்" என்னும் இச் சிறுகதைத் தொகுப்பும் 2017இலும் வெளிவருகின்றன என்றால் - இலங்கையைப் பொறுத்தவரை அது மிகப்பெரும் சாதனையே!

திரு.தமிழ்த்தாசன் அவர்களின் இச்சிறுகதைத் தொகுப்பு பதினைந்து சிறுகதைகளை உள்ளடக்கியது. சமூக நிகழ்வுகளைப் பதிவு செய்யும் சிறுகதைகள், கடினமான, கனத்த பல நிகழ்வுகளை நகைச்சுவையினூடே காட்ட ஆசிரியர் முற்பட்டிருக்கிறார். சமூகப் பிறழ்வுகளை, அரசியல் சார்ந்த அவலங்களை - அழகுற எடுத்துக் காட்டி - தனக்குள்ள சமூக அக்கறையை இக்கதைகளின் மூலம் திரு.தமிழ்த்தாசன் அவர்கள் வெளிக்காட்டியிருக்கின்றார்.

கதைகளில் ஆங்காங்கே கையாளப்படும் இலக்கியச் செய்திகள் - அற்புதமான உவமைகள், பழமொழிகள், சமயம் சார்ந்த சொல்லாடல்கள் என்பன ஆசிரியரின் மொழியாட்சிக்கு சான்று பகர்வதுடன் - கதைகளுக்கும் மெருகூட்டுகின்றன. மனனமாக்கி மனதிற் பதிக்க வேண்டிய அற்புதமான பல வசனங்கள் கதைகளை ஆக்கிரமித்துச் சுவையூட்டுகின்றன.

தனித்தனியே கதைகளுள் நுழைய முனைந்தால் - விமர்சனம் ஆகி நீண்டுவிடும் என்பதால் - வாசகர்களே உள்நுழைந்து நயம் சுவைக்க வேண்டுகிறேன். தனி மனிதர்கள் அல்லது தனிக் குடும்பங்கள் அல்லது தனி நிகழ்வுகளை மையமாகக் கொண்டு

இச் சிறுகதைகள் பலவும் பின்னப்பட்டிருந்தாலும் - அவை ஒட்டுமொத்த சமூகத்தையுமே திருத்த - அல்லது நல்வழிப்படுத்த உதவுகின்றன என்பதில் ஐயமில்லை.

யாழ் மண்ணில் இருந்து வெளிவரும் "உதயன்" நாளிதழ் மூலம் திரு.தமிழ்த்தாசன் அவர்கள் பிரபல்யம் பெற்றுக் கொண்டிருக்கிறார். அவரது சிறுகதைகள் பலவற்றுக்கு உதயன் களமமைத்துக் கொடுத்திருக்கிறது. "ராசியில்லா ராசா" என்னும் தமிழ்த்தாசன் எழுதும் நகைச்சுவைத் தொடர் உதயன் பத்திரிகையில் வெளிவந்து அவருக்கு மிகப் புகழைத் தேடித் தந்தது.

ஈழத்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளரும், விமர்சகருமான தேவி பரமலிங்கம் ஐயா அவர்கள் தமிழ்த்தாசனின் எழுத்துகளை வாழ்த்தி அங்கீகரித்திருக்கிறார். மற்றொரு அற்புதமான சிறுகதை எழுத்தாளர் வாழ்த்தி வரவேற்றிருக்கிறார். இது தமிழ்த்தாசன் அவர்களுக்குக் கிடைத்த அங்கீகாரங்கள். தெணியான், கே.ஆர்.டேவிற், இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன், பேராசிரியர் சண்முகலிங்கம் போன்றோரின் வாழ்த்துக்களும் கிடைக்கப்பெற்றவர்.

நிறைவாக, நண்பர் திரு.தமிழ்த்தாசன் அவர்கள் மேலும் பல ஆக்கங்களை எம் மண்ணுக்கு வழங்குதல் வேண்டும். அவர் பணி தொடர் எம்மவர்கள் ஆதரவு நல்க வேண்டும். ஆபத்தானதாக விளங்கும் நூல் வெளியீட்டுப் பணியை வென்று மேலும் ஆக்கங்களை நல்க திரு.தமிழ்த்தாசன் அவர்களுக்கு நாம் அனைவரும் கைகொடுப்போம்.

வாழ்க வளர்க!

பெரியமாவடி,
சாவகச்சேரி.

அன்புடன்,
கவிஞர் த.நாகேஸ்வரன்.



## பாசமிகு வாசகர்களுக்கு!
## ஆசிரியர் அறியத்தருவது யாதெனில்...!

எனது அன்புக்குரிய வாசக நெஞ்சங்களே!

அன்புசால் வணக்கங்கள் பல. ஆண்டுக்கொன்று என்றிருந்த எனது வெளியீடுகள் சற்று வேகமாக வலம் வந்து கொண்டிருப்பதைத் தாங்கள் உணர்ந்து கொள்வீர்கள். இந்த விரைவுக்கு வாசகர்களாகிய தங்களின் ஒத்துழைப்பே எனக்குப் பலமாகிக் கொண்டது. அந்த வகையில் கடந்த சித்திரை மாதத்திய எனது நாவல் வெளியீட்டின் ஓசை அடங்குதற்குள் மீண்டும் ஒரு சிறுகதைத் தொகுப்பினைத் தங்களின் கரங்களில் தவழ விடுவதில் மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமிதமுமடைகின்றேன்.

இலக்கியமென்பது காலத்தின் கண்ணாடி என்பார்கள். இதற்கிணங்கவே இலக்கியங்கள் சமைக்கப்பட வேண்டும். நானும் எதையாவது எழுத வேண்டுமென்பதற்காக பொருத்தமற்ற அல்லது கால நீரோட்டத்தால் அடித்துச் செல்லக் கூடிய படைப்புக்களை நான் மறந்தும்கூட படைப்பதற்கு விளைபவனல்ல. என்னுடைய படைப்புக்கள் எக்காலமும் சாகாவரம் பெற்று நீடித்து வாழ வேண்டுமென்பதில் தீராத வேட்கை கொண்டவன் நான். எனவேதான் நான் வாழ்ந்து கொண்டிருக்கும் இச்சமூகத்திலே உணரும், அனுபவிக்கும், அவ்வப்போதைய நிகழ்வுகளை என்னுடைய ஆற்றலுக்கேற்ற வகையில் சித்தரித்துக் தங்களிடம் சமர்ப்பித்துக் கொண்டிருக்கின்றேன்.

கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழியென்பது போல ஆற்றல் மிகுந்த மூத்த எழுத்தாளர்களின் எழுத்துக்களை நான் பின்பற்றி எழுதுபவனுமல்ல. அவைகளைச் சுவைப்பதுடன் நிறுத்திக் கொண்டு என்னுடைய பாணியிலேயே எனது படைப்புக்களைப் பிரசவித்துக் கொள்வேன். நல்லதோ கெட்டதோ! என்வழி தனிவழி, சட்டியிலிருப்பதுதான் அகப்பையில் வரும். என் மூளை மண்டலத்திலிருந்து பிறக்கும் சிந்தனைகள்தான் எனது எழுதுகோலில் வார்த்தைகளாக வடிவெடுக்கும். எனவே என்னுடைய படைப்புக்கள் ஓகோ ஆகா என்று பாராட்டப்பட வேண்டும் அல்லது மிகப் புகழ்

பெற்ற ஜனரஞ்சகப் படைப்புக்களாக உருவாக வேண்டுமென்பதல்ல எனது நோக்கம். எமது சமூக நடப்புக்களைத் தத்ரூபமாக்கி அவைகளின் குறை நிறைகளைக் கூறி சமூகத்தில் பாரிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பு. நானும் ஒரு சமூகப் பிராணியென்பதால் தான் எனக்கு இத்தனை கரிசனை எம் மத்தியில் காணப்படும் ஒரு சில மனிதர்களின் சில்லறைத் தனங்களைச் சல்லடை போட்டுத் தேடிப் பிடித்து அவைகளுக்கு அடிக்கோடிட்டு யதார்த்த பூர்வமாகப் படைப்புகள் செய்வதில் எனக்கு அலாதிப் பிரியம். அந்த வகையிலேதான் இன்றும் உங்கள் கரங்களிலே காகிதக் கப்பல்களென்னும் இச் சிறுகதைத் தொகுப்பினைப் பரிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

இதிலடங்கியிருக்கும் சிறுகதைகளத்தனையும் எமது தேசியப் பத்திரிகைகள் வாயிலாகப் பிரசுரமானவைகளே! இருந்தும் அவைகளைத் தரிசிக்க கிடைக்காதவர்களுக்கு இது ஒரு வாய்ப்பாக அமையுமல்லவா!

நாடறிந்த கவிஞரும், நல்லதொரு தமிழ் ஆசானும், வல்லதொரு பேச்சாளனுமாகிய கவிஞர் நாகேஸ்வரனின் அணிந்துரை வாய்த்திருப்பது இந்நூலுக்குப் பலம் சேர்க்குமென்பது எனது திடமான நம்பிக்கை. கூடவே அன்னாருக்கு எனது இதயபூர்வமான நன்றிகளையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். மேலும் வளர்ந்து வரும் மீசாலை சத்தி பதிப்பகத்தினரின் கடினமுயற்சியும் இந்நூல் அழகாக வடிவமைக்கப்பட்டமைக்கு ஒரு காரணமாகும். எனவே சக்தி பதிப்பகத்தினரின் சக்தி மிகு உரிமையாளர் தம்பி சந்திரசேகரம் அஜன் அவர்களுக்கும் எனது மனம் கனிந்த நன்றி களைச் சமர்ப்பிக்கின்றேன்.

இதே போல் இந்த வெளியீட்டுக்கு என் வளர்ச்சிமீது அக்கறை கொண்ட சில அனுசரணையாளர்களுக்கும் நன்றி கூறி எனது இந்த நான்காவது வெளியீட்டின் வெற்றிக்கு வாசகர்களாகிய உங்களின் தயவையும் வேண்டி விடைபெறுகின்றேன்.

நன்றி

17, பன்றிக்கேணி வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

அன்புடன்,
மிருசுவில் தமிழ்தாசன்

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| 01. சூழ்நிலைக் கைதிகள் | 1 |
| 02. கேள்விச் செவியர் | 6 |
| 03. தன்னினம் | 14 |
| 04. பாவங்கள் உறங்காது | 21 |
| 05. குருட்டு வாழ்க்கை | 25 |
| 06. ஐயர் கடைத்தோசை | 32 |
| 07. ஒருவனுக்கு ஒருத்தி | 39 |
| 08. நாய் வால்கள் | 46 |
| 09. குடும்ப வாழ்க்கை | 58 |
| 10. காகிதக் கப்பல்கள் | 64 |
| 11. நம்பிக்கைகள் | 73 |
| 12. பபாக்கா | 79 |
| 13. குரங்குமனம் | 85 |
| 14. தாமரை இலைத் தண்ணீர் | 89 |
| 15. கடவுளே கைவிட்டால் | 97 |

# 01

## சூழ்நிலைக் கைதிகள்

நீண்ட நாட்கள் இடைவெளிக்குப் பின் ஏகாம்பரத்தார் பழையபடி முருங்கையில் ஏறிவிட்டார். வழமைபோல் வீதியில் நின்று வேண்டாத வார்த்தைகளைப் பேசிச் சன்னதமாடிக் கொண்டிருந்தார். வீதியில் வருவோர் போவோரை இம்மியளவும் மதிக்காது வழியை மறித்துக் கொண்டு நின்று அடாவடி செய்து கொண்டிருக்கும் அவரை ஒரு அற்ப புழுவாக எண்ணியபடி நடந்து போனார்கள். அவர்களை வாய்க்கு வந்தபடி திட்டிக்கொண்டிருந்தார் ஏகாம்பரம்.

ஏகாம்பரத்தாருக்கு வயது எப்படியும் அறுபதுக்குக் குறையாது. குட்டையுமில்லாத நெட்டையுமில்லாத சுமாரான உயரம். நரைபாதி கறுப்பு மீதியான கேசம். எப்போதுமே அரைத்தாடியில் தோற்றமளிக்கும் முகம். ஒல்லியான உடல்வாகு, யாருடனும் வளவளாப் பேச்சுக்கள் வைத்துக் கொள்ளாதவர். தானுண்டு தன் சோலியுண்டு என்று வாழ்ந்துவரும் ஏகாம்பரத்தார் மாதமொரு தடவையோ இருதடவைகளோ அவரையுமறியாத ஒருவித மூர்க்கமான குணத்திற்கு உள்ளாகிவிடுவார். அந்த வேளைகளில் அவருடைய இயல்பான சுபாவம் முற்று முழுதாக மாறிப் பேய் பிடித்து விட்ட ஒருவன் போலவே காட்சி கொடுப்பார். அவருடைய உதட்டிலிருந்து உதிரும் வார்த்தைகளைச் சாதாரணமானவர்களால் கேட்டு ஜீரணிக்க முடியாது. அந்தளவுக்குக் கர்ண கொடூரமாயிருக்கும்.

ஏகாம்பரம் ஊரிலே ஏராளமான நிலபுலங்களுக்குச் சொந்தக்காரன். உடல் அசதி பாராது வியர்வை சிந்திக்

கடினமாக உழைப்பார். பிள்ளைகளையும் மட்டுப்படுத்தப்பட்ட கல்வியுடன் நிறுத்திவிட்டுத் தன்னுடைய வழிக்கே எடுத்துக் கொண்டார். இருந்தும் அவருடைய வாழ்க்கை வண்டி எதுவித சறுக்கலுமின்றி நிதானமாகவே ஓடிக்கொண்டிருந்தது.

“டேய் சரவணை! உனக்கு இப்ப கொஞ்சம் காசுத்தடிப்பு வந்திட்டுது போலை என்ன! உன்ரை என்னம்போரு வெளிநாட்டுப் பணத்துக்கும் கெப்பருக்கும் நான் பயமில்லை. சொல்லிப் போட்டன். நாளைக்கு விடிய எட்டுமணிக்கிடையிலை உன்ரை காணி எல்லை வேலியைத் தள்ளிப் போட்டிட வேணும். அந்த வேம்பு என்ரை காணியுக்கை தான் நிண்டது. உந்த அடாத்து வேலையொண்டும் என்னிலை வாய்க்காது. வெட்டுவன், மருமோன் எண்டும் பார்க்கமாட்டன் வெட்டுவன் சிவன் ஆணை வெட்டுவன் உன்னை.”

ஏகாம்பரத்தாரின் அக்கா மகன்தான் சரவணை என்னும் சரவணமுத்து. இருவருக்கும் அருகருகே அமைந்திருந்த தென்னங்காணியின் எல்லைதான் இந்தப் பிரச்சினைக்குரிய மையப்பொருள். இதில் அந்தச் சின்னஞ்சிறிய பெறுமதியே இல்லாத வேப்பங்கன்றையும் உள்ளடக்கி இப்போது பூதாகாரமாக்கி வலுச்சண்டைக்கிழுக்கிறார் ஏகாம்பரம். சரவணமுத்துவின் மீது பொறாமை கொண்ட நயவஞ்சகர்கள் சிலர் ஏகாம்பரத்தாருக்கு மதுவை வாங்கிக் கொடுத்து சரவணமுத்தையும் ஏகாம்பரத்தையும் பகைமைப்படுத்த முனைந்து கொண்டிருந்தனர். கொஞ்சம் மது அருந்திவிட்டாரென்றால் அவரின் வாயிலிருந்து வெளிவரும் வார்த்தைகளைக் கேட்டு ரசிக்கவும், சிரிக்கவுமே இந்த மது உபசாரம். இது மட்டுமல்ல. சரவணமுத்துவின் மீதுள்ள காழ்ப்புணர்வும் ஒரு காரணமே!

ஊரிலுள்ள பணக்காரர்களில் சிவசம்புவும் ஒருவன். இவன் யாருடனும் கண்டபடி பேசவோ பழகவோ மாட்டான். அதைவைத்து அவனை நல்லவன் என்று எடை போட்டுவிட

முடியாது. முகத்தில் சிரிப்பும் அகத்தில் விஷத்தையும் பொத்தி வைத்திருக்கும் ஒரு நச்சுப்பாம்பு.

தன்னுடைய மகன் யசோதரனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும். ஏகாம்பரத்தாரின் மகள் வேணியின் மீது ஒரு கண் சிவசம்புவிற்கு. வேணி படித்தது கொஞ்சம்தான் எனினும் மூக்கும் முளியுமாக நல்ல அழகாகவிருந்தாள். அதுமட்டுமல்ல அளிடமிருந்த ஏராளமான சொத்துக்களையும் கபளிகரம் செய்து கொள்ளலாமென்னும் வஞ்சகத் திட்டத்தில் ஏகாம்பரத்தாரிடம் பெண் கேட்டுப் பார்த்தும் பயன் எதுவுமில்லை. பிடிவாதமாக மறுத்தார் ஏகாம்பரம். அன்றிலிருந்து மனத்திற்குள் கறுவியபடியிருந்த சிவசம்பு ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரை உன்னிப்பாக காத்திருந்தான் பொருத்தமான சந்தர்ப்பத்திற்காக.

"சும்மா உப்பிடி வாயிலை வந்தபடி கதைக்காதையுங்கோ அப்பா! உங்கடை வாயை அடக்கிக் கதைச்சுப் பழகுங்கோ. எக்கணம் உங்கடை என்னம்பொரு மோட்டுக் கதையளாலை எவ்வளவு வில்லங்கங்கள் வரும்."

மனைவி மகேஸ்வரி இப்படி எத்தனை தடவைகள் புத்திமதி கூறியிருப்பாள். அவைகள் எதுவுமே செல்லக் காசுகளாகிவிடும். அவள் தான் என்ன செய்வாள் பாவம். மனிதர் போதையிலிருந்தாரென்றால் மகேஸ்வரியென்ன அந்தக் கடவுள் மகேஸ்வரன் வந்தாலும் மதிக்கவே மாட்டார். இயல்பிலேயே ஒரு பயந்தாங்கொள்ளி. அப்படிப்பட்டவர் மனிதரை வெட்டுவதென்பது நடக்கக் கூடிய காரியமா! ஒரு சண்டை சச்சரவென்றால் பயந்து காததூரம் ஓடிப்போகும் ஏகாம்பரத்தார் மதுமயக்கத்தில் உளறும் வார்த்தைகளத்தனையும் வெறும் வெற்று வேட்டுக்களே! அத்தனையும் அவரையறியாது வெளிக்கிளம்பும் வார்த்தைகளே! என்பதுதான் உண்மை.

எங்கேயோ ஒரு விதமான பதட்டக் குரல்கள் மகேஸ்வரியின் செவிகட்குள் விழுந்தன. மார்கழி மாதத்துப் பனிமூட்டம் கலையாத வைகறைப் பொழுது. அதிகாலை ஐந்து ஐந்தரை மணியிருக்கலாம். வீட்டுத் தெருப் படலைக் கண்மையில் ஏதேதோ பேச்சுக் குரல்கள் கேட்டதை மீண்டும் மகேஸ்வரி உன்னிப்பாக அவதானித்தாள்.

"சரவணமுத்துவை ஆரோ வெட்டிப் போட்டாங்களாம்".

பல குரல்கள் ஒன்று சேர்ந்து பதற்றமான சூழ்நிலையில் ஒலித்தது. மகேஸ்வரிக்குத் திக்கென்றது. ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ஏகாம்பரத்தாரையும் தட்டி எழுப்பிக் கதறியபடி சரவணமுத்துவின் வீடு நோக்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்.

சரவணமுத்துவின் படுக்கை இரத்தத்தால் தோய்ந் திருந்தது. சிறு வெட்டுக் காயங்களானாலும் ஏராளமான குருதி பெருகியிருக்க வேண்டும். சரவணமுத்து வலி தாங்க முடியாது முனகிக் கொண்டிருந்தான். அங்கே நின்றவர்களனைவரும் ஏகாம்பரத்தை ஒரு மாதிரிப் பார்த்தார்கள். அந்தப் பார்வைகளில் கேலி, கோபம், பழியுணர்வு, சந்தேகம் என்று பலதரப்பட்ட அர்த்தங்கள் பொதிந்திருந்தன. சரவணமுத்துவை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லவந்த வாகனம் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்ட கையுடன் மீண்டுமொரு வாகனம் பலத்த இரச்சலுடன் வந்து நின்றது. அது சாதாரண வாகனமல்ல. பொலிஸ் ஜீப் வண்டியென்பதை ஏகாம்பரம் உணர்ந்து கொண்டார். எதுவுமே புரியாது திகைத்துப் போய் நின்றவரின் கைகளில் விலங்கு மாட்டப்பட்டுத் தரதரவென அவரை இழுத்துச் சென்ற பொலிசார் அவரை அழைத்துச் சென்ற அந்தச் சூழ்நிலை மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டது. மகேஸ்வரி தலையலடித்துக் கதறியபடி நின்றாள்.

வரம்புகட்ட, நெல் அறுவடை செய்ய, சூடு மிதிக்கக் கூலிக்கு ஆட்களைப் பிடிக்க கடினமான இக்காலத்தில் மனிதர்களை வெட்டுவதற்கான கூலியாட்களை மிகவும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம். இந்த வரிசையிலே சரவணமுத்துவின் வெட்டுக் கைங்கரியமும் நிறைவேறியிருந்தது.

ஏகாம்பரமும் சரவணமுத்துவும் ஒரே நேரத்தில் திட்டமிட்டபடி கச்சிதமாகப் பழி வாங்கப்பட்டிருக்கின்றார்கள். அங்கிருந்தவர்களனைவரும் பயப்பீதியில் பதற்றத்தில் உறைந்து போயிருக்க ஒரேயொரு ஜீவன் மட்டும் மிக்க மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் புன்னகைத்தபடியிருந்தது. அது வேறு யாருமல்ல சிவசம்புவேதான்.

சரவணமுத்துவுக்கு உயிராபத்து எதுவும் கிடையாது. இருந்தாலும் ஏகாம்பரத்தார் சிறை செல்வது நிச்சயமாகிவிட்டது.

குற்றம் புரிந்தவன் வெளியில். குற்றமற்ற நிரபராதி சிறைக் கூண்டில். நிரபராதிகள் தண்டிக்கப்படக்கூடாது. இருந்தும் சூழ்நிலைகள் குற்றமற்றவர்களையும் குற்றவாளி யாக்கிவிடும். சூழ்நிலைக் கைதிகள் என்றால் இவர்கள்தானோ!.

* * *

02

## கேள்விச் செவியர்

காலை எழரை மணி ஊரெங்கும் நாய்களின் குரைப்பொலிகள் கேட்டுக் கொண்டிருந்தன. எல்லோர் முகங்களிலும் இனம்புரியாத பயப்பீதி.

"டேய் சுகுணன்! உன்னையல்லே அந்த வைக்கல்க் கும்பியுக்கை போய் ஒளிக்கச் சொன்னனான். எக்கணம் அவங்கள் வந்தாலும்... ஓடிப்போய் ஒளியடா!" தடியன் தம்பிராசர் சுடுகஞ்சி குடித்த நாய்போன்று செய்வதறியாது ஓடியாடி அலைந்து கொண்டிருந்தார்.

"பிள்ளையளுக்கு வைக்கல்ச் சுணை கடிக்குமெல்லே! டேய் தம்பி! சேட்டைப் போட்டுக்கொண்டுபோய் ஒளிமோனை!" தம்பிராசரின் மனைவி அற்புதம் ஒரு சேட்டை எடுத்துக் கொண்டு வந்து சுகுணனிடம் அன்புடன் கொடுத்தாள்.

"மெய்யேப்பா! எங்கை உவள் மோகனா! அவளையும் கமலியையும் கட்டிலுக்குக் கீழே ஒளிக்கச் சொல்லும். எல்லாரும் ஒரிடத்திலை சேர்ந்து ஒளிக்கிறதும் ஆபத்துத்தான் அம்பிட்டால் எல்லாரையும் ஒண்டாய்ச் சாய்ச்சுக் கொண்டு போகிடுவாங்கள். கடவுளே...!" அதிகமாகப் பயந்து போயிருந்தார் தம்பிராசர். அவருடைய பயத்திலும் நியாயமில்லாமலில்லை. அடிபட்டவனுக்குத்தானே வலியின் வேதனை புரியும். அவர் ஏற்கனவே அடிவாங்கி அனுபவப்பட்டவரல்லவா!

ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற பாரிய சுற்றிவளைப்பில் மூத்த மகன் சுகிர்தனைப் பறிகொடுத்தவர்.

இன்றுவரைக்கும் அவனைப் பற்றி எந்தவித தகவல்களுமில்லை. தங்கையின் பதினெட்டு வயது மகள் சுமதியை விசாரணைக் கென்று அழைத்துச் சென்றார்கள் இதுவரை அவளை விடுவிக்கவில்லை. இப்படியாக எத்தனை துன்பங்களை அனுபவித்த தம்பிராசர் எப்படித்தான் தைரியமாக நிற்பது!

பொழுது புலர்ந்து காலை ஏழு மணியாக முன்பே ஊர் நாய்களெல்லாம் ஒன்று சேர்ந்து குரைத்துக் கொண்டிருந்தன. அந்தக் கிராமத்தில் படித்தவர்கள், உத்தியோகத்தர்கள் என்று சொல்லப்போனால் மிகக் குறைவானவர்களே காணப்பட்டனர். விவசாயிகளும் அன்றாடம் கூலிவேலை செய்து வயிற்றைக் கழுவும் வறுமைப்பட்டவர்களுமே அதிகமாக வாழும் சின்னஞ்சிறிய கிராமம்.

"உவடமெல்லாம் பொலிசுக்காரரும் ஆமிக்காரரும் வந்து நிக்கிறாங்களப்பா. சுற்றி வளைப்பு நடக்கப்போகுதாம். எல்லாரும் உங்கடை உங்கடை வீடுகளுக்கு ஓடிப்போய் இருக்கிற பெடிபெட்டையளைக் காப்பாத்திற வழியைப் பாருங்கோ!"

மிகுந்த அவசரத்தினாலும் பயத்தினாலும் உந்தப்பட்டு நாக்கிழுக்க ஓடிக்கொண்டிருந்தான் தங்கராசன்.

இன்று முதன் முதலாக தெருவுக்குப் போனவன் இவன் ஒருவன்தான். வழமையாக விடிந்ததும் விடியாததுமான அந்த வைகறைப் பொழுதில் வேம்படிச் சந்திக்குப் போய்விடுவான். கடற்கரையில் மீன் கொள்வனவு செய்பவர்களுக்கு தரகு தம்பட்டம் பார்த்து எப்படியாவது ஒரு ஐநூறு என்றாலும் சம்பாதித்துக் கொண்டு வந்துவிடுவான்.

அப்படியானவனே இன்று உழைப்புப் பிழைப்பேதுமின்றி உயிரைக் கையில் பிடித்தபடி ஓடோடி வந்துவிட்டான் எனில் சூழ்நிலையின் தீவிரம் சற்றுப் பாரதூரமானதாகத்தானிருக்க

வேண்டும். "என்னப்பா சுப்புறுவர் ! பேந்தும் பழையபடி றவுண்ட் அப்போ? என்னம்பொண்டோ செய்யத்துவங்கீட்டிங்களாம்? உங்கை சந்தியள் ஒழுங்கையெல்லாம் ஆமியும் பொலிசும் வந்து நிக்குதாம்".

வாய்க்குள் வேப்பங்குச்சியை வைத்துக் கடித்துத் துப்பியபடி புண்ணியமூர்த்தியர் நக்கல் நளினத்துடன் கேட்டார். அவருக்கு மட்டும் பயமில்லை. காரணம் இளவயதில் பிள்ளை குட்டிகளில்லை.

"ஓம் காணும்! எனக்கு உது முந்தியே தெரியும். புது அரசாங்கம் வந்திட்டுது எண்டு உங்கை புளுகித் திரிஞ்சவை இனி என்ன செய்யப் போகினமாம்? கொஞ்ச நாள் எப்பன் நிம்மதியாயிருந்தம். இனித் துவங்கீட்டாங்கள் இருக்கிற பொடிபொட்டையளை அள்ளிக் கொண்டு போறதுக்கு. கடவுளே என்ன நடக்கப் போகுதோ! உவையை நம்பித்தானே எங்கடை சனமெல்லாம் உவைக்கு எலச்சனுக்குத் துண்டுபோட்டதுகள். பேந்தென்ன சீலம்பாய்க்கு உப்பிடி வந்து நிண்டு நம்பிக்கைத் துரோகம் செய்யுறாங்கள்!" ஆத்திரத்தில் பற்களை நறநறவென நெருடினார் சுப்புறுவர். "நல்லகாலம்! இப்ப உவன் தரகன் தங்கராசன் உந்தக் கதை சொல்லாட்டில் உது எங்கடை ஆக்கள் ஒருத்தருக்கும் தெரியவந்திருக்காது. நாங்களும் சந்திப்பக்கம் அலமலுக்கை போயிருந்தமெண்டால் அவங்கள் பாவியளிட்டை அம்பிட்டு அதிலை குந்திக்கொண்டிருக்க வேண்டி வந்திருக்கும்."

"ஓமப்பா! உந்தப் புதினங்கள் புடுங்கிறதிலை தங்கராசன் ஒரு விண்ணன்தான்."

இற்றைக்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற பெரிய சுற்றி வளைப்புக்கள், தேடுதல் நடவடிக்கைகளில் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அப்பாவிகளே அதிகமாகப் பாதிக்கப் பட்டிருந்தனர். அந்த வலியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக

இப்போதுதான் மீண்டுகொண்டிருக்கையில் இனியும் ஒரு சோதனையா? அந்த ஊரவர்களால் இதை ஜீரணிக்க முடியவில்லை. தங்களின் வயது வந்த பிள்ளைகளை முடிந்த வரையில் தலைமறைவாகச் செய்துவிட்டு அயல்வீடுகளுக்கு வந்து ஒன்றாக முடங்கிக் கொண்டனர். பெற்று வளர்த்த பிள்ளைகளைப் பறிகொடுப்பதென்பது என்ன சாதாரண விடயமா? அவர்களை எப்படிக் காப்பாற்றலாம் என்பது பற்றி ஒருவருடன் ஒருவர் கலந்தாலோசிப்பதற்காக ஒவ்வொரு பக்கத்து வீடுகளிலும் நான்கைந்து பெற்றோர்கள் ஒன்று சேர்ந்து கொண்டிருந்தனர். எல்லோர் முகங்களிலும் பயப்பீதி வழிந்துகொண்டிருந்தது. பருந்தைக் கண்டு மிரளும் கோழிக் குஞ்சுகளாகப் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தனர்.

"என்னடி பெட்டை கமலினி! எங்கையடி போட்டு வாறாய்! என்னடி! இண்டைக்குச் சுற்றி வளைப்பாம். உவன் தங்கராசன்தான் சொன்னவன். நீ அறியேல்லையே!" தன்னுடைய வீட்டிலிருந்தபடியே சிற்றம்பலத்தார் கமலினியிடம் பேச்சைக் கொடுத்தார்.

"ஓமோம் சித்தப்பா! உவன் தங்கராசன்தான் சொன்னவனெண்டு நானும் அறிஞ்சன். ஆமியும் பொலிசும் உங்கை சபாண்ணையின்ரை வீட்டுச் சந்தியிலை நிக்கிறாங்கள் உந்த நாச்சிமாராணை நான் என்ரை கண்ணாலை கண்டனான் அது எண்டால் உண்மை."

"ஓமடி பெட்டை! இல்லாட்டில் உவடத்து நாயெல்லாம் ஓடியோடி உந்தக் குலைப்புக்குலைக்குதுகளே! அதுசரி! அவங்கள் என்ன செய்து கொண்டு நிக்கிறாங்கள்? ஆரையேன், பிடிக்கிறாங்களோ!"

அது தெரியாது. ஆனால் "ஏகாம்பரத்தார் வீட்டை செம்புக்கை பச்சைத் தண்ணி வாங்கிக் குடிச்சுக்கொண்டு

நிண்டாங்கள். நான் கிட்டப் போய்த்தான் கவனிச்சன். கடவுளே! பயத்திலை மாடும் அவுக்காமல் திரும்பி ஓடிவந்திட்டன். றவுண்ட் அப்போ தெரியாது. ஆனால் அவங்கள் சந்தியிலை நிக்கிறாங்கள் அது மட்டும் உண்மை.''

இனியும் நின்று விளக்கம் கொடுத்துக் கொண்டிருக்கப் பொறுமையில்லாது ஓட்டமும் நடையுமாக விரைந்து கொண்டிருந்தாள் கமலினி.

"பார்த்தீரே காத்தார்! ஏகாம்பரத்தாற்றை பெட்டையளிட்டை தண்ணி வாங்கிக் குடிக்கிறாங்களாம். அப்ப இனி ஏகாம்பரத்தார் வீட்டுக்கு அவங்களாலை ஒரு கெடுதியும் வராது. பொய்யெண்டாற் பாருங்கோ!'' சிற்றம்பலத்தார் சொல்லி முடிப்பதற்குள், "இது காணும்தானே! பிறகென்ன... அவளவை வலு சுந்தரியள். ஒரு மாதிரிச் சிரிச்சு மயக்கி அவங்களை மருட்டி எடுத்துப் போடுவளவை. அதிலும் ஏகாம்பரத்தாற்றை அந்த இரண்டாவது பொட்டை இருக்குதெல்லே....! கடவுளே! பயங்கரச் சதுர்!'' ஏற்கனவே ஏகாம்பரம் குடும்பத்தினருடனிருந்த பழியை மனதுக்குள் தீர்த்துக் கொண்டார் கார்த்திகேசர்.

"ஏணை அம்மா! என்ரை அடையாள அட்டையைக் கண்டனியேணை? ஐயோ இவ்வளவு நாளும் கிடந்தது. இப்ப அவங்கள் வரயுக்கை கோதாரி விழுந்ததைக் காணவில்லை. டேய் பகீர்! நீ கண்டனியேடா!''

நெருப்புக்குள் கால் வைத்துவிட்ட நாய்க்கடுவன் போலத் துடித்துக் கொண்டிருந்தான் குமாரவேலரின் மூத்தவன் யசோதரன். இங்கே மட்டுமல்ல பொதுவாக இந்தக் கிராமத்து வீடுகளிலுள்ள இளைஞர்கள், யுவதிகள் எல்லோருக்குமே இப்போதைய நிலமையில் அது மிகவும் பிரதானமானதொன்றாயிருந்தது. மேசை லாச்சிகள், அலுமாரிகள், சூட்கேஸ் என்று மனம் போனபடி பதற்றத்துடன் தேடுதல்கள், கிளறுதல்கள், உதறிக்

கொட்டுதல்களெல்லாம் தாராளமாக நடந்து கொண்டிருந்தன.

யாருக்குத் தெரியும்? இப்படியொரு நல்லாட்சியில் அமைதியான சூழலில் யாரும் எதிர்பார்த்திருக்காத வில்லங்க மொன்று வருமென்று? ஒரு பக்கத்துச் சேட்டைக் கையில் கொழுவி அணிந்தபடி மறுபக்கத்தைத் தொங்கவிட்டபடி சைக்கிளில் வந்த வெறிக்குட்டி வேலாத்தை பின் சக்கரத்தில் குதிக்காலை வைத்து ஒரு சடன் பிறேக்கில் சைக்கிளை நிறுத்தினான். சிற்றம்பலத்தார் வீட்டில் குழுமியிருந்தவர் களனைவரும் ஆவலுடன் ஓடிவந்து அவனருகில் நின்றனர். வேலாத்தை சதா மதுபோதையிலே காணப்படும் ஒரு வித்தியாசமான பேர்வழி. எதற்கும் அஞ்சாதவன். எதிலும் தலையிடக்கூடிய ஓர் இரும்புத் தலையன். மெய்யேடா வேலாத்தை! விசயமொண்டு கேள்விப்பட்டியே?"

"ஓ! றவுண்ட் அப்பாம். உவன் தங்கராசன்தான் சொன்னவனாம். அதுக்கென்ன பயமே! உப்பிடி எத்தினை றவுண்ட்டப்புகளைப் பாத்திட்டம்! இனியும் பயப்பிட ஏலுமே! உண்ணானை! நம்பினால் நம்புங்கோ! நானிப்ப சந்திக்குப் போய் உவன் மயிலனிட்டை ஒரு போத்தல் பனங்கள்ளு வாங்கியடிச்சிட்டுத்தான் வருவன். இராத்திரிக் கொஞ்சம் கூடிப்போச்சுது. கள்ளடிக்காட்டில் சரிவராது. ஆமி நிண்டாலென்ன! பொலிசு நிண்டா என்ன! சிவனாணை நானிப்ப சந்திக்குப் போய்க் கள்ளுக் குடிக்காமல் வரமாட்டன்." வேலாத்தை சொன்னதைச் செய்வான் பயம் என்பது அறவே கிடையாதவன். எதைப்பற்றியும் யோசிக்க மாட்டான்.

"ஓமடா பிள்ளை வேலாத்தை! உனக்கு போறவழிக்குப் புண்ணியம் கிடைக்கும் ஒருக்கால் பார்த்துக் கொண்டு வா." யாரோ கிண்டி விட்டார்கள்.

எப்படியோ வேலாத்தை போய் விட்டான். அவன் கள்ளைக் குடித்தாலென்ன! கசிப்பைக் குடித்தாலென்ன! என்ன பிரச்சினையென்பதை வந்து விளக்கமாகச் சொல்லி விட்டான் என்றால்தான் மனதுக்கு ஓர் ஆறுதல் கிடைக்கும்.

"இஞ்சாருங்கோப்பா! விடிய வெள்ளணை எழும்பின நேரம் துவக்கம் ஒரு சாயத் தண்ணி கூடிக் குடிக்காமல் வெறு வயித்தோடை கிடந்து காயுறியள். வந்து தேத்தண்ணியைக் குடிச்சுட்டுப் போங்கோவன்."

சிற்றம்பலத்தாரின் மனைவி பரிமளம் பரிவுடன் வந்து பேசினாள்.

"எனக்குத் தேத்தண்ணியும் வேண்டாம் ஒரு பணியாரமும் வேண்டாம். கொஞ்சம் அங்காலை போப்பா! உண்ணாணைக் காத்தார்! வெக்கத்தை விட்டிட்டுச் சொல்லுறன். எனக்கு உந்தச் சுற்றிவளைப்பு எண்ட கதை கேட்டவுடனை என்னையறியாமல் பயத்திலை ஒண்டுக்குப் போட்டுதப்பா! பின்னையென்ன! உவங்கள் பாவியள் வந்தாங்களென்டால் என்ன கிழடு கட்டையளெண்டு பாப்பாங்களோ பெண் பிரசுகள் எண்டு பாப்பாங்களோ எல்லாரையும் கலக்கித் தள்ளிப் போடுவாங்களப்பா." சிற்றம்பலத்தார், தான் பயந்ததுடன் நில்லாது குழுமியிருந்தவர்கள் அனைவருக்கும் கடுக்காயில் கடும் பேதி கொடுத்தார்.

"டேய் டேய்! பங்கார்! வெறிக்குட்டி வேலாத்தை வாறான்ரா வாறான்ரா! என்னவெண்டு கேப்பம்." எல்லோர் முகங்களிலும் ஏக்கமும் கலக்கமும் ஏராளமாகப் பூசப்பட் டிருந்தன. பாவ மன்னிப்பு திரைப்படத்தில் சிவாஜி கணேசனின் விசில் ஸ்டைலில் வந்து சைக்கிளை நிறுத்தினான் ஒருவித திமிருடன். சந்திர மண்டலத்துக்குப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்ட நாய்க்குட்டி மீண்டும் திரும்பிப் பக்குவமாகப் பூமிக்கு வந்து விட்டதைப் போன்றுணர்ந்தனர் அனைவரும்.

எப்படியோ வேலாத்தை தப்பி வந்துதான் விட்டான்.

"ஏய் விசர் மனிசங்களே! அங்கை ரவுண்ட் அப்புமில்லை, ஒரு சீலம்பாயுமில்லை. சுகாதாரப் பகுதி, டெங்கு நுளம்பு பாக்கிறதுக்கெண்டு ஆமியோடையும் பொலிசோடையும் வந்து நிக்கிறாங்கள். வீடு வீடாய்ப் போய் சோதிக்கப் போறாங்களாம் உங்கடை வீடு வாசலுகளைச் சுத்தப்படுத்துங்கோ! வாறன்! இப்ப உவன் தங்கராசன்ரை குடல் எடுத்து மாலையாய்ப் போடாட்டில் நான் வேலாத்தையில்லை." கறுவியபடி சைக்கிள் பெடலை ஊன்றி மிதித்தான் வேலாத்தை. "கேள்விச் செவியன் ஊரைக் கொடுத்த கதை இது" என்று புறுபுறுத்தபடி வீட்டுக்குள் திரும்பினார் சிற்றம்பலத்தார். கூட நின்றவர்களும் பயம் தெளிந்த நிலையில் தங்கள் தங்கள் வீடுகளிற்கு விரைந்துகொண்டிருந்தனர்.

* * *

## 03

# தன்னினம்

மூன்றாவது சிகரெட்டையும் புகைத்து முடிந்துவிட்ட துஷ்யந்தன் அடுத்த சிகரெட்டைப் புகைப்பதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தான். பொதுவாக ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு சிகரெட்டுக்களையே புகைக்கும் வழக்கத்தைக் கொண்டவன் இன்று மட்டும் ஏனோ அரைமணி நேரத்துக்குள் மூன்று சிகரெட்டுக்களை மளமளவென ஊதித் தள்ளிவிட்டான். தீவிரமாக எதையாவது சிந்திக்கும் வேளைகளில் அல்லது சற்று மனம் குழம்பிய நேரங்களில் இப்படித் தொடர்ச்சியாக சிகரெட்டுக்களைப் புகைத்துத் தள்ளுவான்.

வீட்டு முற்றத்திலே கதிரையொன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். வெண் பஞ்சு மேகங்கள் மட்டும் ஒன்றையொன்று துரத்தி விளையாடிச் சல்லாபித்துக் கொண்டிருந்தன. வழமையாக வான வெளியில் ஊர்வலம் போகும் அந்த நட்சத்திரக் கூட்டங்களையும் காணோம். சந்திரனையும் பார்க்க முடியவில்லை. ஒருவேளை புங்குடுதீவில் இடம்பெற்ற அந்தக் கொடூர நிகழ்வை எண்ணிக் கலங்கி அங்கேயும் ஹர்த்தால் ஹர்த்தால் என்று...! சே!

வானம் வெறுமையாக இருந்தது. துஷ்யந்தனின் இதயத்தைப் போன்று. சரியாகப் பதினைந்து ஆண்டுகாலமாக பிரான்ஸ் நாட்டு வாழ்க்கை. இராமபிரான் பதினான்கு ஆண்டு கால வனவாசம். அதேபோலவே இவனும் பெற்றோர் உறவுகள் மொழி, கலாசாரம் எல்லாவற்றையும் துறந்து அஞ்ஞாதவாசம் செய்தவன். இப்போதுதான் மீண்டும் பிறந்த தாய் மண்ணை நோக்கி வந்திருக்கின்றான் பதினைந்து ஆண்டுகளுக்குப் பின்பு.

எத்தனை பேரிடிகள் வந்தாலும் கலங்கியறியாத ஓர் இரும்புத் தலையன் துஷ்யந்தன். எந்த விதமான வேதனை களையும் சாதனைகளாக்கக் கூடிய மாபெரும் சாணக்கியன். அப்படிப்பட்ட ஒரு வணங்காமுடி இன்று வளைந்து குலைந்து காணப்படுவது ஓர் அதிசயமான சம்பவமாகவே இருந்தது. துஷ்யந்தன் இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கும் அவலங்களுக்கெல்லாம் யார் காரணம்! சந்தேகமேயில்லை. அவனேதான் காரணம். யானை தன்னுடைய தலைக்கு மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்வது போல அவனும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் புரிந்துவிட்ட தவறுதான் இன்று அவனுடைய கழுத்தை நெரித்துக் கொண்டிருக்கின்றது. அவன் மட்டுமா! மனைவி, பிள்ளைகள் அனைவருமே ஒன்று சேர்ந்து சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே!

இராமலிங்கம் வாத்தியார் ஊருக்குள்ளே குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு பெரிய மனிதர். மூத்தவன் பிரசாந்தன் போர்க்காலத்தில் காணாமற் போனோர் பட்டியலில் இணைந்து கொண்டான். இளையவன் துஷ்யந்தனையும் அண்ணனைப் போலக் காவு கொடுக்க முடியாத சூழ்நிலையில் அறிந்தவர், தெரிந்தவர், உற்றார், உறவினர் என்று அவர்களின் கைகால்களைப் பிடித்து கெஞ்சிக் கூத்தாடி எப்படியோ துஷ்யந்தனைப் பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பியிருந்தார்.

உயரம் ஆறடிக்குச் சற்று குறைவாக இருக்கலாம். பளிச்சென்ற எலுமிச்சப் பழ நிறமேனி. ஒவ்வொன்றாக அடுக்கி வைத்தது போல வெள்ளை வெளேர்ப் பல்வரிசை, சிரித்துச் சிரித்து அவன் பேசும் மனப்பாங்கு பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும். பராசக்தி ரீச்சரின் பவித்திரா, ஓடிற்றர் ஒப்பிலாமணியின் கடைக்குட்டி ஊர்மிலா இன்னமிது போன்ற கன்னிப் பெண்கள் இவனுடைய காதலுக்காகக் கனவுலகில் மிதந்து கொண்டிருந்தவர்கள். ஆனால் அவர்களையெல்லாம் அலட்சியப்படுத்திவிட்டு பிரான்ஸுக்குப் போனவனின் வாழ்க்கைத்

துணைவியாக வந்து சந்தித்தாள் எலிசபெத்.

எலிசபெத் சற்றுக் குண்டாகவே இருந்தாள். வெள்ளைத் தோல், கறுப்புமில்லாத செம்பட்டையுமில்லாத இரண்டும் கெட்டான் நிறக் கூந்தல். அதையும் குட்டையாகவே வைத்திருந்தாள். சிரித்த முகம். சிகரெட் பிடித்துக் கறுத்துப் போயிருந்த உதடுகள். இத்தனைக்கும் வயது என்னவோ இருபதுக்குள்தான். அவன் எலிசபெத்தைக் கட்டுவதற்குக் காரணமொன்றுண்டு.

ஊரிலே நிலைமைகள் வரவர மோசமாகவேயிருந்தது. பயம்... பயம்! வீட்டிலிருந்தாலும் பயம். வெளியில் சென்றாலும் பயம். இந்தச் சூழ்நிலையில் துஷ்யந்தன் வெகு இலகுவாக பிரான்ஸுக்கு வந்து சேர்ந்துவிட்டது உண்மையிலேயே அதிசயம்தான். என்ன இருந்தாலும் அந்த நாட்டு வதிவிட உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லையே! எத்தனை விளக்கங்கள்! விசாரணைகள்! பிரஜாவுரிமை மட்டும் கிடைப்பதாயில்லை. இந்த வேளையில்தான் அவனுடைய உற்ற நண்பன் பார்த்தீபன் தெய்வம்போல உதவினான்.

எலிசபெத் ஒரு பிரான்ஸ் நாட்டுப் பெண். அவளை மணம் முடிந்து எப்படியோ பிரஜாவுரிமையைப் பெற்றுவிட்டுச் சில மாதங்கள் செல்ல அவளைக் கைகழுவிவிட வேண்டும். கறிக்குள்ளிருந்த கறிவேப்பிலையைப் போல ஆபத்துக்குக் கைகொடுத்தாள் எலிசபெத். ஆனால் விவாகரத்துக்கு மட்டும் அவள் உடன்படவில்லை. அவள் ஒரு வித்தியாசமானவளாயிருந்தாள். லட்சங்கள் ஒன்றும் அவளின் லட்சியத்தின் வலுவை எதுவும் செய்யவில்லை. கட்டிய கணவனே காலம் முழுவதும். துஷ்யந்தனை விட்டுப் பிரிய முடியாதென்று போர்க்கோலம் பூண்டாள். உண்மையைச் சொல்லப் போனால் அவனும்தான் அவளை உதறித்தள்ளிவிடக்கூடிய மனநிலையிலிருக்கவில்லை. மனதில் வஞ்சனையில்லாத அப்பாவி. சதா சிரித்துச் சிரித்து பேசும் இயல்பான சுபாவம். ஏனைய

பிரெஞ்சுப் பெண்களைப் போல அன்றி மிகவும் எளிமையாகவும் சிக்கனமாகவும் காணப்பட்ட அவள் மீது துஷ்யந்தனுக்கும் மனப்பூர்வமான பாசப்பிணைப்பு இறுக்கிக் கொண்டது. நடப்பது நடக்கட்டுமென அவளையே வாழ்க்கைத் துணையாக்கி மளமளவென்று இரண்டு ஆண் குட்டிகளையும் பெற்றுவிட்டனர்.

படுக்கையறையில் சர்சர்ரென மின்விசிறி ஓடி ஒலித்துக் கொண்டிருந்தது. ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என அதன் வேகத்தை மிக உச்சத்துக்கே இயக்கியிருந்தாள் எலிசபெத் எனினும் அதிலிருந்து மேலெழும் காற்றின் வேகம் அவளுக்குப் போதாமலேயிருந்தது. உடற் புழுக்கம் ஒரு புறம். அதனையும் விஞ்சி நின்றது மனப்புழுக்கம். அளவுக்கதிகமாக அழுது கண்கள் வீங்கியிருந்தன. தலையணையோ, போர்வையோ எதுவுமின்றிக் கையைத் தலையணையாக்கி ஒரு வெறுமையான படுக்கையிலே கிடந்து உழன்று கொண்டிருந்தாள்.

எலிசபெத்துக்கு வலது புறம் மூத்தவன் அலெக்ஸ் அரைத் தூக்கத்தில் கிடந்து புரண்டு கொண்டிருந்தான். இளையவன் றொபின் அம்மாவின் மார்பின் மீது இரண்டு கால்களையும் பரப்பியபடி பரிதாபகரமாகக் கிடந்தான். அவன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தாலும் அடிக்கொரு தடவை அவனையு மறியாமல் விம்மிக் கொண்டிருந்தான். தனக்குள்ளே நன்றாக அழுதிருப்பான் போலும். பாவம்! துஷ்யந்தன் தன் வீட்டு முற்றத்திலே தனிமையிலிருந்து மனம் குழம்பிக் கொண்டிருக்க, மனைவி ஒரு புறம் பிள்ளைகள் மறுபுறம் படுக்கையறையிலிருந்து பரிதவித்துக் கொண்டிருக்க.... துஷ்யந்தனின் குடும்பத்துக்கு யார் என்ன கேடு செய்தார்கள்! ஏன் அவர்களுக்கு இப்படியொரு நிலைமை!

தந்தை இராமலிங்கம் ஒன்றுக்கு முடியாதவராகிப் படுக்கையில் விழுந்துவிட்டார். தாய் பவளம் அவரையும் முந்தி நோயாளியாகிவிட்டார். அவர்களின் இறுதிக் காலத்தில்

அவர்களுடன் கூட இருந்து அவர்களின் கடமைகளைச் செய்வதற்குத் துஷ்யந்தனைவிட யார்தானிருக்கின்றார்கள்! எனவேதான் பிரான்ஸுக்குக் கும்பிடு போட்டுவிட்டு மனைவி பிள்ளைகளுடன் ஊருக்கு வந்து இன்றுடன் மூன்று மாதங்களாகிவிட்டன.

வேற்று மொழியை இனி வேண்டாத மொழியாக்கித் தாறுமாறான கலாசாரங்களைத் துறந்து தாய் மண் கலாசாரத்துக்குள் புகுந்து மனைவியைப் பிள்ளைகளைப் புதிய வாழ்க்கைக்கு மாற்றி ஒரு புதிய வாழ்க்கை வாழவே தாய் மண் வந்திருக்கின்றான் துஷ்யந்தன். இதைவிட இப்போதைக்கு அவனுக்கு வேறெந்த இலட்சியங்களுமிருக்கவில்லை.

துஷ்யந்தனின் தூரத்து உறவுதான் மகிந்தன். ஒரு வழியில் அவனுக்கு மைத்துனன். மகிந்தனின் வீட்டுத் திருமணத்துக்கு மனைவி பிள்ளைகளையும் உரிமையோடு அழைத்துச் சென்றிருந்தான். அங்கே போய் வந்ததிலிருந்து தான் இப்படி முழுக் குடும்பமுமே குழம்பிப் போய்விட்டது.

அலெக்ஸ்சும், றொபினும் ஊரிலே ஒரு தரமான பாடசாலையில் இணைந்து விட்டனர். பாடசாலை தரமாக இருந்தாலும் ஆசிரியர்களும் மாணவர்களும் தரம் கெட்டவர்க ளாகவே இருந்தார்கள். எடுத்ததுக்கெல்லாம் அந்தப் பரஞ்சோதி வாத்தியார் இந்தக் குழந்தைகளைப் பார்த்து பறங்கி, பறங்கி என்று ஏளனம் செய்வார். அதைப் பார்த்துச் சக வகுப்பு மாணவர்களும் அடிக்கடி அவர்களைக் கேலி செய்வது வாடிக்கையானதொரு நிகழ்வாகப் போய்விட்டது.

அலெக்சும், றொபினும் பிறப்பில் பிரெஞ்சுக்காரர்களாக இருந்தாலும் தாய்மொழியைத் துறந்து தந்தை மொழியாம் தமிழை ஓரளவுக்குப் பேசுவதற்குக் கற்றுக் கொண்டு விட்டார்கள். துஷ்யந்தனின் பகீரதப் பிரயத்தனத்தால் அவர்கள் எப்படியோ

தட்டுத்தடுமாறித் தப்பும் தவறுமாகத் தமிழைப் பேசுகின்றனர். தாய் எலிசபெத்துக்கு மட்டும் தமிழ் சுட்டுப் போட்டாலும் வராமலேயிருந்தது.

மகிந்தனின் திருமணச்சடங்கில் எலிசபெத்திற்கோ அவளின் பிள்ளைகளுக்கோ எதுவித வரவேற்போ உபசாரங்களோ கொடுக்கப்படவில்லை. துஷ்யந்தனின் உறவுகள் அவர்களைக் கிஞ்சித்தும் கணக்கெடுத்ததாயில்லை.

சாதாரணமாக எலிசபெத்தை ஊரிலே பார்ப்பவர்கள் அவளை ஒரு பொருட்டாகக் கணிப்பதேயில்லை. இருந்தாலும் பரவாயில்லை. வெள்ளைக்காரி வெள்ளைக்காரியென்று அவளை ஏதோ ஒரு வினோதப் பிறவியாகவே நோக்கினர். இவைகள் எல்லாம் பொதுவாக நடந்து கொண்டிருப்பவை. இந்த மூன்றுமாத காலங்களுக்குள் எத்தனை அவமானங்கள்! எத்தனை கேலிகள்! அத்தனையையும் சகித்துக் கொண்டிருந்தவனால் இப்போது அவைகளை ஏனோ தாங்கிக் கொள்ளமுடியவில்லை. அவர்களைத் திருமணத்துக்கு அழைத்துச் சென்ற துஷ்யந்தன் அவர்களைத் தன்னுடன் வைத்திருந்தால் வேண்டாத இத்தகைய அவமானங்களும் விபரீதங்களும் நேர்ந்திருக்காது. அவர்கள் சுயாதீனமாகத் தன்னுடைய உறவுகளுடன் பழகட்டும். அவர்களின் கூச்சசுபாவம் ஒழியட்டும் என்றுதான் துஷ்யந்தன் இப்படி நடந்திருந்தான். ஆனால் நடந்தவைகளெல்லாம் நேர் எதிர்மாறாகவேயிருந்தன.

அங்கேபட்ட அவமானங்களைச் ஜீரணிக்க முடியாது படுக்கை அறையில் அடிபட்ட பாம்பாகத் துவண்டு போயிருந்தாள் எலிசபெத், கண்ணீரும் கம்பலையுமாக பத்து வயது அலெக்சும், எட்டு வயது றொபினும் நிலைகுலைந்து சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்க மனைவி, பிள்ளைகளின் அவலங்களைப் பார்த்துச் சகித்துக் கொள்ளத் திராணியற்றவனாக வீட்டு முற்றத்தில் துஷ்யந்தன் சிகரெட்டும் கையுமாக.

இத்தனை துயரங்களும் எதற்காக? யாரால் வந்த வினை? ஏன் இப்படியெல்லாம் நடக்கின்றது? கேள்வி மேல் கேள்விகளைக் கேட்ட துஷ்யந்தனுக்குக் காலம் கடந்து விடை கிடைக்கின்றது.

ஆடு ஆட்டுடன் வாழ்வதுதான் இயல்பானது. அது மாட்டுடன் வாழப் போவது இயற்கைக்கு முரணானது. நாய் பூனையுடன் வாழ்வது பொருத்தமற்றது. காக்கையும் கிளியும் ஒன்றாகக் குடும்பம் நடத்த முடியாது. மனிதர்கள் மட்டுமென்ன நல்லதோ கெட்டதோ தன்னினத்துடன் சேர்ந்து வாழ்க்கை நடத்துவதுதான் பொருத்தப்பாடாயிருக்கும். இனத்தை விட்டு இனம் மாறினால் இந்த உலகில் இயல்பாகவோ இசைவாகவோ வாழ முடியாது. வாழவும் விடமாட்டார்கள். சிந்தனையில் துஷ்யந்தன் கண்ட உண்மை இதுதான்.

* * *

# 04

## பாவங்கள் உறங்காது

விடிந்தும் விடியாத வைகறை பொழுது. பாலையடிப் பிள்ளையார் கோவில் மணி இப்போது தான் ஒலித்தோய்ந்து காலை ஐந்து மணி என கட்டியம் கூறியது. அவசர அவசரமாகப் படுக்கையை விட்டெழுந்த அந்தோனி அரைகுறையாக முகத்தை அலம்பி விட்டு ஒரு செம்பு பச்சைத் தண்ணீரை எடுத்து மடமட எனப் பருகினான். வீட்டுத் தாழ்வாரத்துத் திண்ணைச் செத்தையில் எப்போதோ சொருகி வைத்திருந்த குறை பீடித்துண்டொன்று அவன் கண்ணில் பட்டது. மகிழ்ச்சியுடன் அதை எடுத்து அதற்குத் தீ மூட்டி இரண்டு புகையை ஆழமாக உறிஞ்சியிழுத்துக் கொண்டு சைக்கிளில் அவசரமாக ஏறினான்.

வழமைக்கு மாறாக வானம் மப்பும் மந்தாரமுமாக காட்சி கொடுத்தது. எந்த நிமிடமும் மழை பெய்யலாம் என்னும் நிலையில் வேகமாகச் சைக்கிளை ஓட்டினான். காலை ஆறு மணிக்குக் கையெழுத்துப் பதிவேட்டில் ஒப்பமிட்டாக வேண்டும். அடிக்கடி தாமதமாகக் கடைமைக்குப் போவதால் அதிகாரிகளின் கண்டனத்துக்குள்ளாகியிருந்தான். இனிமேலும் தாமதமாகப் போனால் வீண் பிரச்சினைகள் உருவாகலாம் என்பதை தீர்க்கமாக அறிந்து கொண்டதால் தான் இத்தனை அவசரப்பட்டான். வானத்திலிருந்து இரண்டொரு மழைத்துளிகள் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் வீழ்ந்து தெறிக்கத் தொடங்கின. வீதியின் ஓரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டுச் சைக்கிளிலிருந்த பையை எடுத்துத் துளாவினான். எதிர்பார்த்த கைக்குட்டை கண்ணில் பட்டது. தலையை மூடிக் கட்டிக் கொண்டான் கணப்பொழுது பெய்த சிறு மழையினால் அந்தத் தார் வீதி சாணி கரைத்துத் தெளித்துவிட்டது போன்றிருந்தது.

மீண்டும் சைக்கிளில் ஏறப்போன அந்தோனி இப்போதுதான் கவனித்தான். வீதியின் மறுபுறத்தில் யாரோ ஒருவர் மல்லாக்கப் படுத்திருப்பது போன்றிருந்தது. அவசரமாக அவரை அணுகினான். உடலில் ஆங்காங்கே இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. முகத்தை அடையாளம் காண முடியாதவாறு புழுதி பரவிக் கிடந்தது. வயது நாற்பது நாற்பத்தைந்துக்குக் குறையாது. அவருக்கு அருகில் அவருடைய சைக்கிளாக இருக்கலாம். அநாதவராகச் சரிந்து போய் கிடந்தது. அந்தோனி விடயத்தை ஊகித்துக் கொண்டான். வாகன விபத்தில் சிக்கியிருக்கிறார். சம்பந்தப்பட்ட வாகனம் ஓடித்தப்பி விட்டது.

அதிகாலை வேளை என்பதால் அந்த வீதியில் வாகனப் போக்குவரத்துக்களோ சன நடமாட்டங்களோ அந்தளவுக் கிருக்கவில்லை. அது மட்டுமல்ல இந்த மனிதன் விபத்துக் குள்ளாயிருந்த இடம் சாதாரணமாக வீதியில் போவோர் வருவோருக்குத் தெரியாத வகையில் சற்று மறை வாகவேயிருந்தது.

"கடவுளே! வாய்க்கு ருசியாய் ஒரு கோழி காய்ச்சி ஒரு போத்தல் சாரயமும் எடுத்துச் சந்தோஷமாய்த் தீண்டு குடிச்சு எத்தனை நாளாய் போச்சுது. இண்டைக்கெண்டாலும் ஒரு போத்தலும் உடைச்சு ஒரு நல்ல ஊர்ச்சேவலும் வாங்கி இரவுக்கு கொஞ்சம் சந்தோஷமாயிருக்க வேணும்"

ஏனோ! அந்தோனி ஆசைகளை வளர்த்து வாயைச் சப்புக் கொட்டிக் கொண்டான். உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த அந்த மனிதனின் உணர்வுகள் படிப்படியாகக் குறைந்து கொண்டு போய்க்கொண்டிருந்தன. அந்தோனியைப் பார்த்துக் கெஞ்சுவது போன்றிருந்தது அவரின் பார்வை. இதயக் கூட்டிலிருந்து வெளிக் கிளம்பிய மூச்சுக்களின் வீரியம் தளர்வது போலத் தெரிந்தது. இன்னும் மிஞ்சிப் போனால் ஒரு பத்து நிமிடங்களில் ஒருவருடைய கண்ணிலும் படவில்லையென்றால் மனிதர் சிவனே என்று சிவலோகம் போய்ச்சேர்ந்து விடுவார்.

அந்தோனி எண்ணிக் கொண்டான். எப்பேர்ப்பட்ட அனுபவசாலியவன்.

"உவன் கிறிஸ்தோப்பரும் என்னோடை போட்டிபோட வெளிக்கிட்டிட்டான் பாவம்! அக்காவின்ரை பெடியன் எண்டு நான் தொழில் பழக்கிவிட இப்ப என்ரை வேலையிலை மண் அள்ளிப் போட நிக்குது நாய். சத்துராதிக்குக் கத்தி பிடிக்கிற வளமே தெரியாது. பாப்பம்! இனி மேல் ஒரு கேஸ் கூடக் குடுக்கமாட்டான். ஏலுமெண்டால் செய்து பாக்கட்டும். பொறுக்கி" மனதுக்குள் கறுவியபடி சைக்கிளை வேகமாக மிதித்தான். நீண்ட நாள்களுக்குப் பின்பு அந்தோனியின் மனதில் நம்பிக்கை மொட்டுக்கள் அரும்பிக் கொண்டிருந்தன.

வைத்தியசாலை வளாகம் சற்றுப் பரபரப்பாக காணப்பட்டது. பெண்கள், குழந்தைகளின் கூக்குரல்கள். அந்தப் பகுதியையே அதிரவைத்தன. துப்பரவுப் பணிகளை முடித்துக் கொண்ட அந்தோனி எதுவும் தெரியாதவனாக அந்த இடத்தில் மெல்ல நடமாடிப் பார்த்தான். விடயம் உறுதியாகிவிட்டது. ஆண்டவருக்கு நன்றி கூறிப் "பிதா சுதன்" போட்டுக் கொண்டான்.

"வசதியான பாட்டி. எப்படியும் மூவாயிரம் எண்டாலும் வாங்க வேணும். இல்லாட்டில் என்ரை தேவையள் ஒண்டுக்கும் காணாது வாங்கத்தான் வேணும்"

திட்டங்களைக் கச்சிதமாக ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த அந்தோனிக்கு இன்னுமொரு அச்சுறுத்தல் இல்லாமலில்லை. இதற்குள் கிறிஸ்தோப்பர் நுழைந்துவிட்டான் என்றால் ஆயிரம் ரூபாவுக்கே சம்மதித்து விடுவான். அவனுடைய பிரசன்னமில்லாமல் பார்த்துக் கொள்வதும் அந்த பாரிய பிரச்சினையும் அந்தோனியைப் பயமுறுத்திக் கொண்டுதானிருந்தது.

அந்தோனி அந்த வைத்தியசாலையின் துப்பரவுப் பணியாளர். அதில் கிடைக்கும் வருமானம் போதாதபடியால் விபத்துக்கள், திடீர்ச் சாவுகள் காரணமாக இறந்தவர்களின்

சடலங்களை வெட்டிப் பரிசோதனைக்குக் கொடுப்பதை தனது தொழிலாக்கி கொண்டான். அவன் ஒரு 'கட்டர்.'

இன்று விபத்திலறந்தவரை அந்தோனி நினைத்திருந்தால் காப்பாற்றியிருக்க முடிந்திருக்கும். ஆனால் அவன் காப்பாற்ற வில்லை. காப்பாற்றியிருந்தால் இன்று இந்த மேலதிகச் சம்பாத்தியம் எப்படிக் கிடைக்கும். ஒருவனுடைய வீழ்ச்சி தான் அடுத்தவனுக்கு உயர்ச்சியாகின்றது. ஒருவன் தோல்வியுற்றால் தானே அடுத்தவன் வெற்றியாளனாகின்றான். ஒரு உயிர் போக வேண்டும். அந்த உடலத்தைக் கீறிக் கிழிக்க வேண்டும். அப்போது தான் அந்தோனி வீட்டில் மதுபானம் இறைச்சி வகைகள் என்று ஒரே கொண்டாட்டமாக இருக்கும். அடுத்தவனின் திண்டாட்டத்தைப் பற்றி அவன் சிந்திப்பதேயில்லை.

ஒரு போத்தல் சாராயம் பெரியதொரு முற்றி விளைந்த நாட்டுச் சேவல் மற்றும் வேண்டிய வீட்டுப் பொருள்களுடன் அந்தோனி தனது வீட்டை நோக்கி விரைந்து கொண்டிருந்தான்.

ஆஸ்பத்திரிச் சூழலிலே அழுகுரல்கள் ஓய்ந்த பாடில்லை. இறந்தவரின் குடும்ப உறவுகள் மிகவும் நொந்து போயிருந்தனர்.

ஆலடிச் சந்திக்குச் சற்று அப்பால் ஏதோ விபரீதம் நடந்து விட்டது போலும். ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். வீதியோரம் நான்கைந்து வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. வெள்ளைத் தொப்பியில் போக்குவரத்துப் பொலிஸார் ஓடித்திரிய நடு வீதியில் இரத்தக் குளத்தில் புதைந்து சிதைந்து போயிருந்தான் அந்தோனி. பையிலிருந்த சாராயப் போத்தல் சுக்கு நூறாகிக் கிடந்தது. இனி கிறிஸ்தோபர் தான் அந்தோனியின் பிணத்தை வெட்டப் போகிறான். இனிப் பிணவறையின் முடிசூடா மன்னனும் அவனே..

* * *

05

## குருட்டு வாழ்க்கை

அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிவப்பு நிற மின் குமிழ்கள் மங்கிய வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன. மின் விசிறிகள் வேகமாகச் சுழன்றடித்து இதமான காற்றைத் துப்பிக்கொண்டிருந்தன.

இரவு ஒன்பது மணிக்கு மேலாகியும் கனகசுந்தரம் அந்த இடத்தை விட்டு நகர்வதாயில்லை. நன்றாகப் போதை ஏறிவிட்டது. இருந்தாலும் இன்னும் ஒரு 'பெக்' பருகித்தான் போகவேண்டுமென்று அவரின் உள்மனம் சொல்லிக்கொண்டது.

"என்ன கண்டறியாத வாழ்க்கை! குடும்பமும் மண்ணாங் கட்டியும்" தன்னையுமறியமாது சலித்துக் கொண்டார் கனகசுந்தரம்.

பருகிவிட்டு வைத்திருந்த வெற்றுச் சாராயப் போத்தல், எஞ்சிப்போயிருந்த சொற்பமான கொக்கோ கோலா, முழுவதுமே தீர்ந்து போயிருந்த முட்டை வறுவல் பிளேற் என்று எல்லாமே அவர் முன்னால் பரந்து கிடந்தன. இன்று மட்டும் கணிசமான பணத்தைக் காலியாக்கியிருந்தார். நினைக்கும்போது அவரையு மறியாது பெருமூச்சொன்று பிரசவமாகி மறைந்தோடியது.

கனகசுந்தரத்தின் முன்னிருக்கையில் அமர்ந்திருக்கும் இருவர், அளவுக்கு மீறிய மதுபோதையால் ஏதோ வாக்குவாதப் பட்டுக்கொண்டிருந்தனர். பக்கத்தில் மொட்டைத் தலையன் ஒருவன் பலத்த சத்தமிட்டு ஓங்காளித்துக் குடித்த எல்லா

வற்றையும் வாந்தியாகக் கக்கிக்கொண்டிருந்தான். பார்க்க வயிற்றைக் குமட்டிக்கொண்டுவர மிகவும் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டார். மறுபுறத்தில் பழைய சினிமாப் பாடல்களைப் பச்சைப் பிழையாகக் கத்திக் கொண்டிருந்தான் ஒரு வயோதிபன்.

இவைகள் எல்லாவற்றையும் பார்க்கப் பார்க்க கனகசுந்தரத்துக்குச் சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை. ஒழுக்கமில்லாத அறிவிலிகளும், மூடர்களும், கயவர்களும் வந்துபோகும் இந்த நரக மதுபான விடுதிக்குள் அவரும் வந்து போக வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டதை எண்ண எண்ண அந்தப் போதை நிலையிலும் அடக்க முடியாது அழவேண்டும் போன்றிருந்தது அவருக்கு.

துட்டனைக் கண்டால் தூர விலகி, கண்ணியமானவர்கள், கல்விமான்கள், ஒழுக்க சீலர்களுடன் பழகி அவர்களையே தனது வாழ்க்கையின் வழிகாட்டிகளாக எண்ணி வாழ்ந்த கனகசுந்தரம் இன்று காட்டுமிராண்டிகளுடனும், கயவர்களுடனும் குடிகாரர்களுடனும் ஒன்றாய் அமர்ந்திருந்து ஒன்றாக மதுவருந்தித் தன்னுடைய மதிப்பான வாழ்க்கையை மண்ணாக்கிக் கொண்டிருக்கின்றார்.

'மது நிம்மதியைக் கொடுக்கும் ஒரு அற்புதமான நிவாரணி' யாரோ சொன்னதை இவரும் நம்பினார். அப்படியே மதுவிடம் தஞ்சம் கோரினார். அவர் எதிர்பார்த்த நிம்மதி கிடைத்ததோ இல்லையோ, அதனிடம் சரண் புகுந்துவிட்டார் தன்னை மறந்து. அரச அலுவலகம் ஒன்றில் மதிப்பான பதவி, அதற்கேற்ற ஊதியம். அழகான மனைவி, ஆசைக்கொன்று ஆஸ்திக்கொன்றாய் இரண்டு குழந்தைகள் இவை எல்லா வற்றையும்விட இனியென்ன வேண்டும்? அவரைத்தான் கேட்க வேண்டும்.

வயது நாற்பது நாற்பத்திரண்டுக்கு மேல் தேறாது.

ஒல்லியான உடல் வாகு, சதா சிரித்த முகம், துர்ப்பழக்கங்கள் என்று எதுவுமேயில்லை. அனைவருடனும் கனிவாகக் குழைந்து பேசும் பண்பு. இப்படிப்பட்டவர் கடந்த மூன்று மாதங்களாகவே தனது பழக்கங்களையும் கோலங்களையும் மாற்றிக்கொண்டு விட்டார். இவைகளுக்குரிய காரணகாரியங்களை யாராலும் அறிய முடியவில்லை. ஒரு வேளை அவரின் மனைவி, பிள்ளைகளுக்குப் புரியுமோ என்னவோ!

கனகசுந்தரத்தின் பிள்ளைகளில் மூத்தது ஆண். அடுத்தவள் பெண். மூத்தவன் படித்த குறையில் திரைகடலோடித் திரவியம் தேடவென லண்டனுக்குப் போய்விட்டான். மாதா மாதம் ஏதோ சம்பாத்தியத்தில் அனுப்புகின்றான். அடுத்தவள் லக்சிகா சாதாரண தரத்துடன் படிப்புக்கு 'குட்பாய்' சொல்லிவிட்டாள். தனக்குச் சாதாரண படிப்பே போதுமென்பது அவள் வாதம். மேலும், படிக்கும்படி தந்தை வற்புறுத்தினார். அவள் மசியவில்லை தாயாரோ இதைப்பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. லக்சிகா "லச்சறி" வாழ்க்கையிலேயே ஓடிக்கொண்டிருந்தாள்.

வீட்டு முற்றத்து பூஞ்செடியில் அழகான இரண்டு வண்ணத்துப் பூச்சிகள் பறந்தோடி விளையாடி மகிழ்ச்சியில் லயித்திருந்தன. அவைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த லக்சிகா அப்போததான் சுயநினைவு வந்தவளாகப் பரபரப் படைந்தாள்.

"எணே அம்மா! நேரம் ஆறு ஐம்பதாய்ப் போச்சு கெதியாய் வாணை!" குரலெடுத்துக் கத்தினாள். "ஓமடி நான் வாறன் நீ ரிவி யைப் போடடி"

கழிப்பறைக்குள்ளிருந்து பம்பரமாய் ஓடி வந்து கொண்டிருந்தாள் மாலதி. இவள்தான் கனகசுந்தரத்தின் வாழ்க்கைத் துணைவி. கதிரையில் அமர்ந்திருந்தபடி ஈரக்

கைகளைச் சட்டையிலே தேய்த்துத் துவட்டிக் கொண்டாள். இன்னும் நாடகம் ஆரம்பமாகப் பத்து நிமிடங்கள் இருக்கின்றன. அப்படியிருந்தும் அதைப் பார்ப்பதற்கு இத்தனை அவசரம்.

"பாரடி! ஐயோ கடவுளே! உவன் காவேரியை கைககழுவிப்போட்டுக் கயல்விழியோடைதான் சேரப்போறான் போலை! கெட்ட ராசுக்கோல்! உப்படி நம்பிக்கைத் துரோகம் செய்யுறவங்களையெல்லம் 'வெட்டித் தள்ளவேணும்'.

"ஓமம்மா! உவனிலை எனக்கு அப்பவே ஒரு சமசியம்" அவன்ரை மூஞ்சையைப் பாத்தாலே ஒரு மாதிரித்தான் கிடக்கு.

"பொறடி பொறு கத்தாதை! என்ன நடக்குது எண்டு பாப்பம்"

மாலதிக்குக் கையுமோடவில்லைக் காலுமோடவில்லை. இந்த சீரியல் மிக விறுவிறுப்பாக போய்க்கொண்டிருக்கிறது. எப்படி முடியப்போகுதோ என மனமடித்துக் கொண்டிருந்தது.

மாலதிக்கும் மகள் லக்சிகாவுக்கும் இப்போதுள்ள பெரிய பிரச்சினை இதுதான். இது முடிய இனி எட்டு மணிக்கு நினைத்தாலே இனிக்கும் தொடர். அருமையான காதல் கதை அதை நினைத்தாலே லக்சிகாவுக்கு இனிக்கும். ஏன்! தாய் மாலதிக்கும் தான்.

"அம்மோய்! நீ பொய்யெண்டால் இருந்து பார்! சுமன் அந்தக் கார்த்திகாவைத்தான் கலியாணம் செய்யப்போறான். அவளைச் செய்தாற்தானெணை அவளின்ரை குடும்பத்தைப் பழிவாங்கலாம். ஏற்கனவே அவன் இப்பிடித்தான் திட்டம் போட்டிருக்கிறான். பொய்யெண்டால் கதை எப்பிடிப் போகப் போகுது எண்டு நீ பாரன்."

லக்சிகா கதையின் எதிர்வுகளை சரியாக அனுமானித்துச்

சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவர்களுடைய ஊகங்கள் என்றைக்குமே தவறிப் போனது கிடையாது. எத்தனை காலமாக எத்தனை விதமான நாடகத் தொடர்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் இருவரிடமுமிருக்கும் அனுபவங்களைக் கொண்டு அவர்களும் இனிவரும் காலங்களில் சீரியல்களை தயாரித்துவிட்டாலும் அதிசயப்படுவதற்கு ஒன்றுமில்லை. அந்தளவுக்கு நாடகத் தொடர்களையே தமது முழுநேரப் பணியாக்கி கொண்டவர்கள்.

நேரம் இரவு பதினொன்றைத் தாண்டிவிட்ட நள்ளிரவுப் பொழுது எங்கும் நிசப்தமாயிருந்தாலும் எங்கேயோ ஒரு சில தெரு நாய்களின் சில்மிசங்களும் இல்லாமலில்லை. அவைகட்கு ஒத்தூதுவது போலச் சண்முகலிங்கம் வாத்தியாரின் இரண்டு நாய்க்கடுவன்களும் போட்டி போட்டுக் குரைத்துக் கொண்டிருந்தன. அவைகளிரண்டும் பொல்லாத சூரன்கள் நாய்க்கென்றொரு குரைப்பு. பேய்க்கென்றொரு குரைப்பு. பாம்புக்கென்று ஒருவிதக் குரைப்பு, வீம்புக்கென்று ஒன்று. ஆனால் இப்போது குரைக்கும் குரைப்பு மனிதருக்குரியது. சண்முகலிங்கம் வாத்தியார் சரியாக அனுமானித்துக் கொண்டார். சேவையிலிருந்து ஓய்வு பெற்ற வாத்தியாருக்கு இரவில் சரியாகத் தூக்கம் வருவதில்லை.

எங்கேயோவெல்லாம் அலைந்துலைந்து ஏராளமான புத்தகங்களைக் கொண்டு வந்து விடிய விடியக் கண்விழித்துப் படித்துக் கொண்டேயிருப்பார்.

இரவு வேளைகளில் அந்தத் தெரு வழியாகப் போகின்றவர்கள் யாருமே அவர் பார்வையிலிருந்து தப்பவே முடியாது.

"கடவுளே! உந்த மனிசனுக்கு ஏன் இப்பிடியொரு நிலைமையோ! மிதிச்ச இடத்துக்குப் புல்லு சாகாது.

குடிவெறியெண்டால் என்னவெண்டு தெரியாது. இப்ப இப்பிடியொரு கேடுகெட்ட குடிகாரனாய்ப் போச்சுதே!" கவலைப்பட்டு உச்சுக் கொட்டினார் வாத்தியார்.

வீட்டின் வெளி விறாந்தை ஜன்னலுக்குள்ளால் கனகசுந்தரத்தின் உருவம் துலாம்பரமாகத் தெரிந்தது. கனகசுந்தரம் ஷேர்ட்டைக் கழற்றித் தோளிலே போட்டிருந்தார். "ஒரு காலில் செருப்பு, மறு செருப்பு அவர் கையில், அலுவலகப் பை அவரது வலது தோளிலே அனாயாசமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. பார்ப்பவர்கள் அவரை ஒரு அரச உத்தியோகத்தன் என்று கர்ப்பூரம் அணைத்துச் சத்தியம் செய்தாலும் நம்ப முடியாத பரதேசிக் கோலத்தில் தள்ளாடிய நடையில் போய்க்கொண்டிருந்தார்." அவரைப் பார்த்த சண்முகலிங்கம் வாத்தியார் மீண்டும் நீண்டதொரு பெருமூச்சைப் பிரசவித்துத் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திக் கொண்டார்.

இரவு பதினொரு மணிக்கு முடிவடையும் நாடகத்தொடர் இப்போது முடிந்திருக்கும். மனைவியும் மகளும் தூக்கத்தில் விழுந்திருப்பார்கள். கனகசுந்தரமும் போய்த் தன்பாட்டிலே படுக்கையில் விழ வேண்டியதுதான். இது தான் அவருடைய இப்போதைய வாழ்க்கை நிலை. இப்போது மட்டுமல்ல கிட்டத்தட்ட எப்போதுமே இப்படித்தான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்தார். முடியவில்லை. மெல்லத் தன்னுடைய போக்குகளை மாற்றிக் கொண்டார்.

முன்பெல்லாம் வழமையாக அலுவலகத்திலிருந்து ஆறுமணிக்கெல்லாம் வீடுசேருமவர் வந்தகையுடன் தனது துணிமணிகளைத் துவைத்துக் காய வைத்துக் கால் முகம் அலம்பி வீட்டுக்குள் நுழைபவருக்கு ஒரு தம்ளர் தேநீர் கூடக் கிடைக்காது.

தேனீர் கொடுக்க வேண்டிய மனைவியும், மகளும்

நாடகத்தில் லயித்துப் போய் இருப்பர். வெக்கத்தைவிட்டுக் கேட்டுப் பார்த்தாலும் கிடைப்பதில்லை. அதிகாலை வேளை அலுவலகத்துக்கு அரக்கப் பரக்கச் சென்று உழைத்துக் களைத்துச் சோர்வடைந்து வந்திருக்கும் கணவனுக்கு ஒரு தம்ளர் தேநீர் கொடுக்க முடியாதளவுக்கு அந்த வீட்டை தொலைக்காட்சிப்பெட்டி ஆட்சி செய்து கொண்டிருந்தது.

தாய் எப்படியோ! மகள் என்றாலும் சே! நடக்கவே நடக்காது. மகள் லக்சிகாவும் சுத்தமாகத் தாயினுடைய போக்குகளையும் பழக்க வழக்கங்களையுமே ஒத்திருந்தாள். கட்டிய மனைவியுடன் அன்பாக ஆசையாகப் பேசுவதற்கு ஒரு வாய்ப்பேயில்லை. பன்னிரண்டு மணி. அதாவது நள்ளிரவு நாடகம் முடிந்தவுடன் சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாகத் தங்களை மறந்து தூங்கிவிடுவார்கள். மீண்டும் மறுநாள் காலை ஒன்பது மணிக்குமேல் விழித்துக் கொண்டால் மாதர் சங்கம், சமுர்த்திச் சங்கம் என ஊர்ச் சோலிகள் ஏராளம் தாயுடன் கூடவே மகளும் இணைந்து கொள்வாள். கிட்டத்தட்ட இருவரும் இரண்டு தோழிகள் போன்றே காணப்பட்டனர்.

கட்டிய கணவனைவிடப் பெற்ற அப்பனைவிட தொலைக் காட்சித் தொடர்களிலே அவர்கள் ஆர்வமாயிருக்க இங்கே ஆதரவில்லாத நிலையில் கொம்பு கொழுவில்லாத செடியொன்று திசைமாறிப் போகின்றது. அன்பு மழையின்றிப் பயிரொன்று பாழ்பட்டுப் போகின்றது. நிஜவாழ்வை மறந்து நிழல் வாழ்வைப் பற்றி நிற்கும் மாலதி போன்ற மதியிழந்த பெண்களினால் கனகசுந்தரம் போன்ற எத்தனை அப்பாவிகள் இப்போதும் எம்மண்ணிலே... ஏனிந்தக் குருட்டு வாழ்க்கை!

* * *

06

## ஐயர் கடைத்தோசை

மாலை நேரத்து வியாபாரம் வழமைபோல் நன்றாகக் களைகட்டியிருந்தது. ஐயர் கடையின் தோசைப் பிரியர்களும் அன்றாட வாடிக்கையாளர்களும் நீயோ நானோ எனப் போட்டி போட்டு ஐயரின் கடையை ஈக்களாக மொய்த்துக் கொண்டிருந்தனர். இன்று மட்டுமல்ல எப்போதுமே இங்கே இப்படித்தான். இத்தனை காலமாய் மனதில் தேக்கி வைத்திருந்த ஆசையொன்று இன்றுதான் நிறைவேறப் போகின்றது என்பதில் மட்டில்லாத மகிழ்ச்சி எனக்கு.

எட உப்பிடியொரு தோசையை நான் வாழ்க்கையிலை சாப்பிட்டதேயில்லை. என்ன ருசி! என்ன வாசம்! தோசை மட்டுமே! அதுக்குத் தோதான பொரிச்ச மிளகாய்ச் சம்பல், பருப்பு, தக்காளி எல்லாம் சேர்த்த அருமையான சாம்பார். மூண்டு தோசையும் ஒரு உளுந்து வடையும் நூறு ரூபா தானே! ஒரு நாளைக்குச் சாப்பிட்டுப் பாரெடாப்பா! அப்பதான் உனக்கு ஐயர் கடைத் தோசையைப் பற்றி விளங்கும். அன்றொரு நாள் அரிசிக்கடை அம்பலவாணி இப்படிப் புழுகித் தள்ளினான்.

அவன் சாப்பிட்டால் சாப்பிட்டு விட்டுப் போக வேண்டியதுதானே! அதை இருந்தாலும் அவரது குலத் தொழிலான பூசை செய்வதில் அவருக்கு ஆசை கிடையாது. அவருடைய ஆசை எல்லாம் தோசை வியாபாரத்தின் மீதே! ஊரிலே தனது வீட்டுக்கருகில் ஒரு சிறிய உணவகத்தை அமைத்துத் தோசையுடன், இட்லி, உப்புமா, பூரி, வடை என்று

வகை வகையான சிற்றுண்டிகளைத் தயாரித்து விற்பனை செய்து வந்தார். எத்தனை வகை வகையான உணவு வகைகளிருந்தாலும் அவருடைய தோசைக்கே பெரும் மவுசு உண்டாகியிருந்தது. பொதுவாக எல்லோருமே தோசைக்கடை என்றே அழைப்பர் அவரின் உணவகத்தை.

நீண்ட நாள்களாக வேலை ஒன்றும் கிடைக்காது நாயாகப் பேயாக அலைந்து திரிந்த எனக்கு இன்றுதான் உருப்படியாக ஒரு கூலி வேலை கிடைத்திருந்தது. சங்கக்கடைச் சண்முகத்தாரின் புண்ணித்தால் ஓர் ஆயிரம் ரூபாத்தாளைக் கைப்பற்றிக் கொண்ட நான், வீட்டுக்குத் தேவையான அரிசி மரக்கறி போன்ற முக்கியமான பொருள்களெல்லாவற்றையும் வாங்கியாயிற்று எல்லாம் திருப்தி. அப்போதுதான் கவனித்தேன் என்றுமில்லாதவாறு ஒரு நூறு ரூபா நோட்டு சட்டைப் பையில் மீதியாகக் காணப்பட்டது. புதுமையோ புதுமை! ஐயர் கடைத் தோசையின் நினைவு வந்துவிட வெற்றி நடை போட்டு இங்கு வந்து விட்டேன்.

இன்றுதான் அந்தத் தோசையைத் தின்று அனுபவிப்பதற்கு எனக்கும் திருவருள் பாலித்திருக்கின்றது. அந்த நூறு ரூபாவும் பத்திரமாகச் சட்டைப் பையிலிருக்கின்றதா என்று எதற்கும் எனது சட்டைப் பையைத்தட்டிப் பார்த்தேன். நல்லவேளை அதை யாருமே தட்டிக்கொண்டு போய்விடவில்லை. சந்தோசம், அப்படியென்றால் தோசைக்கு ஒருவித தடங்கல்களும் உண்டாகப் போவதில்லை. ஐயர் கடையில் அந்தப் பெரிய நெரிசல் கூட்டத்தில் எனக்கும் ஒருவாறு இருக்கையொன்று கிடைத்துத்தான்விட்டது.

தோசைக்கு ஓடர் கொடுத்துவிட்டேன். ஆனால் அது என்னுடைய கையில் கிடைக்க எப்படியும் பத்துநிமிடங்களாவது ஆகும். அதையும் அந்த ஐயர் கடைச் சிப்பந்தி சொல்லி

விட்டுக் காணாமற் போயிவிட்டான். பக்கத்து மேசையிலிருப்பவர்கள் தோசையைப் பிய்த்துச் சாம்பாரில் தொட்டுச் சம்பலையும் தடவிச் சுவைத்துக் கொண்டிருந்தனர். அவர்களையும் தோசையையும் மாறி மாறி அங்கலாய்ப்புடன் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு ஆசையை அடக்க முடியவில்லை. என்னையுமறியாது இரண்டு சொட்டு எச்சில் கீழே வீழ்ந்து தெறித்தது. நல்லவேளை! எவருமே பார்த்திருக்கவில்லை. பார்த்திருந்தால் நான் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கும் தோசையையும் தின்னவிடாது என்னை ஓடஓட விரட்டியிருப்பார்கள்.

எப்படியோ எனது மேசைக்கு வந்து விட்டது தோசை. பளிச்சென்ற வெள்ளித் தட்டில் தோசைகள். அதற்கு மேல் ஓர் அழகான வடை, தட்டை ஆவலுடன் எடுத்து முதலில் தோசைகளை எண்ணிக் கணக்குச் சரிபார்த்துக் கொண்டேன். அம்பலவாணி சொன்னதுபோல் மூன்றும் சரியாக காணப்பட்டன. ஐயர் ஒருவித ஜில்மாலும் செய்யாது நூறு ரூபாவுக்குரிய மூன்று தோசைகளையும் வடையையும் தந்துவிட்டார்.

இனிக் காசு கொடுப்பது என் கடமை. கோதுமை மாத் தோசையாக இருந்தாலும் மிக மென்மையாக மல்லிகைப் பூப்போல இதமாகவிருந்தது. தோசையின் வாசனையுடன் போட்டி போட்டுச் சம்பலும் சாம்பாரும் எழுந்து நின்று வீராப்புப் பேசின. தோசையைப் பிய்த்து மளமளவெனச் சாப்பிட்டு முடித்துவிட்டுக் காசு கொடுப்பதற்குச் சட்டைப் பைக்குள் கையை வைத்துத் துளாவி அதை வெளியில் எடுத்தேன். நூறு ரூபா கொடுக்க வேண்டும். அது ஏற்கனவே தெரிந்த சங்கதிதான். அதுதான் கணக்காக நூறு ரூபாவுடன் வந்திருந்தேன்.

இதென்னடா இது! நூறு ரூபா எப்பிடி இருபதாய் மாறினது! சட்டைப் பொக்கெற்றில் நூறுதானே கிடந்தது. இப்ப

இருபதுதானே கிடக்குது! என்ன நடந்தது! காசு துலையவுமில்லை. அப்படியே இருக்குது. அப்ப என்ன மந்திரமோ தந்திரமோ! ஓகோ! இருபது ரூபாவும் நூறு ரூபாவும் கிட்டத்தட்ட ஒரே மாதிரித்தான். நான்தான் கோதாரி! இருபதை நூறு எண்டு பிழையாய் விளங்கிப் போட்டன். இப்ப என்ன செய்யுறது..! கடவுளே!

"ஏய் காசை எடப்பா! மூக்கு முட்டச் சாப்பிட்டிட்டு என்ன பேய்க்காட்டுறாய்." ஐயர் இப்படி மூர்க்கமாகக் கதைப்பார் என்று நான் கனவிலும் நினைத்திருக்க வில்லை. கடையிலிருந்தவர்களனைவரும் என்னை ஏளனமாகப் பார்த்தார்கள். ஐயர் சுடு சாம்பார் போலக் கொதித்துக் கொண்டிருந்தார். ஏய்! காசைச் சரியாய்ப் பாராமல் ஏனப்பா சாப்பிட்டனி! இப்ப என்ன செய்யப் போறாய்! விறகும் கொத்த வேண்டாம். காஸ் அடுப்பிலைதான் சமைக்கிறனாங்கள். உளுந்தரைக்கவும் தேவையில்லை. கிறைண்டரிலைதான் அரைக்கிறம். பேய்க்கதையை விட்டிட்டுக் காசை எடு! மீண்டும் ஐயர் என்னைப் பயமுறுத்திக் கொண்டிருக்க சாப்பிட்ட தோசை கணப்பொழுதில் சீரணமாகிவிட்டது.

கடையில் நின்றவர்களைவிட வீதியில் போவோர் வருவோர் எல்லோருமாக வந்து நின்று என்னை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். சற்று முன் நான் ஐயரின் தோசையைப் பிய்த்துத் தின்றேன். இப்போது அதே கடையில் வெட்கம் என்னைப் பிய்த்துத் தின்று கொண்டிருந்தது. சே! ஐயர் சொல்லுறதும் சரிதானே! பொக்கெற்றுக்கை கிடந்த காசை வெளியிலை எடுத்து வடிவாய்ப் பார்த்திட்டுச் சாப்பிட்டிருந்தால் இப்ப இப்படியொரு அவமானம் வந்திருக்காதே! பொக்கெற்றிலை வைச்சுப் பாக்க அந்தப் புது நோட்டு சரியாய் நூறு ரூபா மாதிரித்தானே கிடந்தது. ஆர் நினைச்சது இப்பிடியொரு பரிசுகேடு வருமெண்டு.. மனதுக்குள் அழுதேன். வாய்விட்டழ

வெட்கம் தடுத்தது. வாயில் வந்தவைகளை எல்லாம் வார்த்தைகளாக்கிச் சன்னதமாடிக் கொண்டிருந்தார் ஐயர்.

எனக்கிருந்த கொஞ்ச மரியாதையும் என்னை விட்டுப் பறந்தோடிக் கொண்டிருந்தது. கடவுளே முருகா! நான் என்ன ஏமாத்துக்காரனே! இருபதை நூறெண்டு நினைச்சிட்டன். வேறை என்ன! உந்தப் பாழ்பட்ட ஐயர் இதைப் பெரிசுபடுத்தாமல் என்னை விட்டிருந்தாரென்றால் நாளைக்கோ நாளையண்டைக்கோ அந்த எண்பதையும் நான் கொண்டு வந்து குடுப்பன்தானே! ஊருக்கை இருக்கிற என்னை இப்படி நம்பாமல் மரியாதை கெடுத்துக் கொண்டிருக்குதே இந்த மனிசன் முருகா! பாரய்யா! என்ரை நிலைமையை ஒரு வாய் தோசைக்கு ஆசைப்பட்டு இப்பிடியொரு கேவலமாய்ப் போய்விட்டனே! முருகா! வடிவேலா! முருகனை நினைத்து மனம் நொந்து கொண்டிருக்க எங்கேயிருந்து வந்தானோ என்னுடைய நண்பன் பாலவடிவேல்.

இவனும் முருகனின் பெயருக்குச் சொந்தக்காரன்தான். முருகக் கடவுள்தான் இந்தப் பாலவடிவேலனை என்னிடம் அனுப்பியிருந்தாரோ என்றொரு சந்தேகம் எனக்கு. கடையில் நின்று என்னை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவர்களையெல்லாம் தள்ளி ஒதுக்கியபடி உள்ளே நுழைந்தான் பாலவடிவேலு. "ஐயா! என்ன பிரச்சினை! இப்ப இவன் சிவராசன் எவ்வளவு காசு தரவேணும். நூறு ரூபாதானே. இந்தாரும் பிடியுமந்தக் காசை." முகத்தில் வீசியது போன்று கோபத்துடன் எறிந்தான்.

ஐயரின் உடல் பயத்தால் நடுங்கத் தொடங்கியது. பாலவடிவேல் ஊரிலே ஒரு மாதிரியானவன். குடிகாரனாக இருந்தாலும் நேர்மையானவன். நியாயம் தெரிந்தவன். அநீதியைக் கண்டால் எந்தக் கொம்பனையும் விட்டுவிட மாட்டான். துணிச்சலாக நியாயத்தைத் தட்டிக் கேட்பான். ஒன்றும் முடியாதவிடத்து அவர்களின் கையைக் காலை முறித்து

விடுவான். இதை நன்கறிந்த ஐயரின் நெஞ்சு திக்திக்கென அடிப்பதற்குக் காரணமிதுதான்.

"ஐயா! இப்பத்தையில் இருபது ரூபாவும் நூறு ரூபாவும் பாக்கிறதுக்கு வித்தியாசமில்லாமலேயிருக்கும் எண்டது உங்களுக்கு தெரியாதே! வடிவாய்க் கையிலை எடுத்து ஆறுதலாய் பார்த்தால்தான் அது இருபதோ நூறோ எண்டு விளங்கும். அவசரத்திலை நூறை இருபதெண்டும் இருபதை நூறெண்டும் மாறிக் குடுக்கிறது வாங்கிறது எல்லாம் ஒரு சாதாரண விடயம்.

உங்களுக்கு நினைவிருக்குதே ஐயா! அண்டைக்கு ஒரு நாள் இருவதெண்டு எனக்கு நூறு ரூபா தந்ததை மறந்து போனியளே! நான் விடயத்தைச் சொல்லித் திருப்பித் தந்தனான் எல்லே! சொல்லுங்கோ! நான் சொல்லுறது சரியோ! பொய்யோ! அது மட்டுமில்லை ஐயா. இப்ப எனக்கு நடந்தது தெரியுமே! சந்தையிலை சாமான் வாங்கினதுக்கு மிச்சம் தரயுக்கை இருபதெண்டு நூறைத்தந்திட்டாங்கள். நானுமிப்பதான் பாத்தன். அது இருபதில்ல நூறு. இஞ்சார்! பொய்யெண்டால்ப் பாருங்கோ! முந்தின காலத்துக் காசுகளைப் பார்த்த உடனை பிடிச்சுப் போடலாம். இப்பத்தையிற் காசுகள் அப்பிடியே!"

இஞ்சார்! பாலவடிவேலு! ஏன்! ஐநூறு ரூபா நோட்டைப்பார். ஏனப்பா கனக்கக் கதைப்பான் ஐயாயிரம் ரூபா தாளைப் பாருங்கோ. எத்தினை அப்பாவிச் சனங்கள் ஏமாத்துப் பட்டிருக்குங்கள். சும்மா கிடந்த காசைப் புதுப்பிளானிலை அச்சடிக்க வெளிக்கிட்டு இப்ப காசின்ரை பெறுமதியையே கண்டு பிடிக்கேலாமற் கிடக்குது. கிடந்தது மாதிரி விட்டிருக்கலாம். ஐயர் கடையில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பாலசிங்கம் வாத்தியார் பாலவடிவேலுவுக்குப் பக்க வாத்தியம் வாசித்தார். நாட்டிலை செய்ய வேண்டிய எத்தினை வேலையளிருக்க அதை

விட்டிட்டுச் சும்மா கிடந்த காசை அச்சடிக்க வெளிக்கிட்டு... சே.. சனங்களுக்கு எத்தனை பிரச்சினையள்! குழப்பங்கள்! அவமானங்கள்! ஏம்பலிப்புக்கள்!

இப்போது ஐயரும் உண்மையை தனது வாயால் ஒப்புக்கொண்டுவிட்டார். நிலைமை ஓரளவுக்குச் சுமுகமாகிக் கொள்ள நானும் அக்கடையை விட்டு மெல்ல மெல்ல எஸ்கேப் ஆகிவிடுகின்றேன். ஐயர் கடைத்தோசை! தின்ன தின்ன ஆசை! திண்டு முடியப் பூசை என்ற நிலைக்காளாகியிருப்பேன் நல்ல வேளை! பாலவடிவேலுவின் புண்ணியத்தால் நான் பூசை வாங்காது தப்பிக் கொண்டேன். அதுமட்டுமில்லை ஐயர் கடைத் தோசையால் எங்களுடைய காசைப் பற்றிய ஒரு சிறிய குழப்பமும் தீர்ந்து தெளிவு பிறந்துவிட்டது என்று நினைக்கின்றேன். எனக்கு மட்டுமல்ல என்னைப்போல இன்னும் எத்தனையோ பேருக்கு.

* * *

07

## ஒருவனுக்கு ஒருத்தி என்று .....

வெள்ளைக் கம்பளம் விரித்துவிட்டிருந்ததைப் போன்று அழகாகக் காட்சியளித்தது அந்தக் கடற்கரையின் வெண் மணற்பரப்பு. கடலின் அழகை ரசித்தபடி வெண்முத்துப் போன்ற மணலை அள்ளி அளைந்து அனாயாசமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தாள் சுமித்திரா. "என்ன சுமிக்குட்டி! நானும் கேட்டுக் கொண்டேயிருக்கிறன். பதில் ஒண்டும் சொல்லாமல் சின்னப் பிள்ளையள் மாதிரி மண் விளையாட்டில் இருக்கிறீர்."

இந்தத் தடவை நர்மதனின் வார்த்தைகள் சற்று அழுத்தமாகவும் சூடாகவுமிருந்தன. இனியும் மௌனம் காப்பது சரியாகத் தெரியவில்லை. இருந்தும் எடுத்த எடுப்பில் இதற்கு சம்மதம் தெரிவிக்கவும் அவளால் முடியவில்லை.

சுமித்திரா ஒரு தனியார் வங்கியில் கடமை புரியும் கௌரவமான தகுதியைக் கொண்டவள். பெற்றோர் அரச உத்தியோகம், படித்த குடும்பத்தைச் சேர்ந்தவள். கண்ணிய மானவள். அலுவலகத்திலும் வெளியிலும் ஏராளமான ஆண்களுடன் பழகியிருக்கின்றாள். எத்தனையோ ஐ லவ் யூக்களைக் கேட்டிக்கின்றாள். அவைகள் அனைத்தையும் தூக்கியெறிந்தவளுக்கு ஏனோ நர்மதனின் தொடர்பை மட்டும் எடுத்தெறிய முடியவில்லை.

தினமும் அலுவலகத்திலிருந்து பஸ் நிலையத்துக்கு வரும் வேளைகளில் பேசிப் பழகியதால் ஏற்பட்ட பரிச்சயமே யொழிய மேலதிகமாக அவனைப் பற்றிய விவரங்களெதுவுமே சுமித்திராவுக்குத் தெரிய வாய்ப்புக்களிருக்கவில்லை.

"நர்மதா! ப்ளீஸ்! சொல்லுறன் எண்டு கோவிக் காதையுங்கோ! நாங்களிரண்டு பேரும் நண்பர்களாகவே இருப்பம். டெய்லி கடற்கரைக்கு வாறம், பேசுறம், பழகுறம். அதோடை எங்கடை நட்புப் போதுமெண்டு நினைக்கிறன். நீங்கள் கேட்குமாப்போலை சினிமாவுக்கு அல்லது ஹோட்டலுக்கு வாற அழகில்லை 'டீப்பாய்ப்' பழகுறதும் அவ்வளவு நல்லதில்லை நர்மதன்."

"சுமி! உமக்கு என்னிலை நம்பிக்கை இல்லையோ! சும்மா கடற்கரையிலை வந்து காற்று வாங்கி மட்டும் ப்றெண்ட ஷிப்பை வளர்க்கேலாது. கொஞ்சம் குளோசாய்ப் பழகினால் என்ன! நாங்களிரண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறம். பிறகேன் பயப்படுறீர் சொல்லும் படத்துக்கு வாறீரோ இல்லையோ."

நர்மதனின் குரலில் சற்றுக் கடுமை தொனித்திருந்தது. இனியும் சுமித்திராவால் அவனைத் தாஜா பண்ண முடியவில்லை. ஏதோ ஒரு முடிவை கறாராகச் சொல்லித்தான் ஆகவேண்டும். என்னதான் இறுக்கமாக நின்றாலும் நர்மதனைப் புறந்தள்ளி விடவும் முடியவில்லை. எனவே அவள் சொல்லப்போகும் முடிவு அவனுக்குச் சாதகமாகவே அமையப்போகின்றது.

"சரி! பார்ப்பம்! இண்டைக்கில்லை. இன்னுமொரு நாளைக்கு."

எச்சில் விழுங்கி விக்கித்தக்கி எப்படியோ சொல்லி விட்டாள். அவளின் பிஞ்சு உதட்டிலிருந்து கொஞ்சு மொழிகளாக வந்த அந்த வார்த்தைகளைக் கேட்ட நர்மதன் அளவுக்கதிகமாக ஆனந்தித்தான்.

"என்ரை சுமிக்குட்டி! செல்லக்குட்டி! அவளின் பிஞ்சுக் கையை அள்ளியெடுத்துத் தன்னுடைய உதட்டில் பதித்து அழுத்தமாக ஒரு முத்தம் பதித்தான். அவனுடைய எதிர்காலத் திருவிளையாடல்களுக்கெல்லாம் இது அட்வான்சாக அமைந்து கொண்டது. சற்றுமிதை எதிர்பார்த்திராத சுமி ஒரு கணம்

ஸ்தம்பித்து விட்டாள். எனினும் இதற்காக அவனுடன் சீறிச் சினக்கவில்லை. அவனுடைய ஸ்பரிசத்தை இன்றுதான் முதல் முறை அனுபவித்திருக்கின்றாள். ஒரு ஆண் மகனின் மூச்சே படாதபடி கட்டுப்பாடாக வாழ்ந்த சுமித்திரா இன்று மட்டும் சற்று விட்டுக் கொடுத்துவிட்டாள்.

கடற்கரையில் நினைத்ததையெல்லாம் செய்ய முடிவதில்லை. தியேட்டருக்கு வந்து விட்டாள் என்றால் நர்மதனின் சில்மிஷங்கள் கட்டுக்கடங்காது போய்க் கொண்டிருக்கும். அப்பாவி சுமித்திராவுக்கு இவைகளெங்கே புரியப் போகின்றன.

சைத்தா, தேவகி, நளினி இன்னும் ஏராளமான பழைய நண்பிகள் நர்மதனுக்கு. அவர்களைக் கேட்டால் கடற்கரையில் தொடங்கி ஹோட்டல் தனியறை வரை நடந்த அத்தனை அசிங்கங்களையும் விலாவாரியாகச் சொல்வார்கள்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். நர்மதன் நினைத்தால் எந்தப் பெண்ணையும் தன்வசமிழுத்துவிடக் கூடியவன். அந்த வரிசையில் இப்போது சுமித்திரா என்னும் அப்பாவியும் அவன் வலையில் வசமாகக் சிக்கிவிட்டாள்.

கடற்கரைக் காற்று சில்லென்று பட்டு அவள் மேனியை வருடிக் கொடுத்தது. வீசிக் கொண்டிருந்த காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாது அவளின் காதோரக் கூந்தல் கலைந்து நர்த்தனமாடிக் கொண்டிருந்தது. அந்த அழகையே கண்வெட்டாது பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் நர்மதன். சும்மா சொல்லக்கூடாது சுமித்திரா மிகவும் அழகாகவும் எடுப்பாகவு மிருந்தாள்.

யாரோ தொலைபேசியில் அழைப்பு விடுத்தார்கள். பதற்றத்துடன் தூக்கினான் நர்மதன்.

“ஓம்! ஓம்! சொறி! சொறி! எக்ஸ்றீம்லி சொறி! நான்

மறந்து போனன். சரிசரி. வையுங்கோ நான் பிறகு கதைக்கிறன்."

சித்திராவின் இம்சை தாங்கமுடியவில்லை. சற்று முன்புதான் தேவிகாவும் எடுத்து ஒப்பாரி வைத்தாள். நல்லவேளை இவர்களுடன் பேசியது சுமித்திராவுக்குத் தெரியாது. தெரிந்தால் வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாளி உடைந்த கதையாகப் போயிருக்கும்.

நர்மதனும் ஒரே நேரத்தில் எத்தனை பேரைத்தான் சமாளிப்பது.

நர்மதன் அரச நிறுவனமொன்றில் இடைநிலை அதிகாரி. தலைமை நிர்வாகத்தில் ஏகபோக செல்வாக்கு என்றபடியால் அவன் பரமசிவன் கழுத்துப் பாம்பாயிருந்தான்.

"நர்மதன்! நீயோரு டீசென்ரான கவுண்மென்ற் ஒவ்விசர். ஏண்டா இப்பிடிப் பொம்பிளைப் பிள்ளையளுக்குப் பின்னாலை சுத்துறாய்! நீ ஒரு குடும்பகாரன். அழகான மனைவி. நீதானே சொல்லுவாய் உன்ரை மனிசி நல்ல வடிவு. கே.ஆர்.விஜயா மாதிரியெண்டு. பிறகேன்ரா அடுத்தவன்ரை பெண்சாதிமாரையும் ஒண்டுமறியாத அப்பாவிப் பொம்பிளைப் பிள்ளையளையும் ஏமாத்துறாய்! உனக்கு ஒரு குழந்தையுமிருக்குதெல்லே! ஏன் வீண்பாவம் செய்யுறாய்!" அலுவலக நண்பன் கேசவன் இப்படி எத்தனையோ தடவைகள் அறிவுரைகள் சொல்லி அலுத்தே போய்விட்டான்.

"போடா விசரா! உன்னாலை ஒவ்வொரு நாளும் கோழிக்கறியோடை சாப்பிட ஏலுமே! அலுத்துப் போம் என்ன! ஒரு மாறுதலுக்காக கண்டது கடியதைக் கலந்து சாப்பிடுறம் தானே. அதுபோலத்தான்ரா இதுவும் ஜஸ்ற்போர் ஓ சேஞ்!"

"அப்பிடிப் பார்த்தால் உன்ரை பெண்சாதியும் இப்பிடிச் சொல்லலாம்தானே!"

"போங்கடா! ஆம்பிளையெண்டால் இப்பிடித்தான். சேறு

கண்ட இடத்திலை மிதிச்சு தண்ணி கண்ட இடத்திலை கழுவுவான். கிளி மாதிரி மனைவியிருந்தாலும் குரங்கு மாதிரியெண்டாலும் ஒரு வைப்பாட்டி வேணும். இதெல்லாம் ஆம்பிளையினத்துக்கு எங்கடை சமூகம் குடுத்த சலுகையள். இதை அனுபவிக்கத் தெரியாதவன் ஒரு ஆம்பிளையே! ஏன் நீங்களும் அப்படித்தானே, சும்மா பழைய காலத்துச் சித்தாந்தம் பேசிக் கொண்டு.... போங்கடா!"

நர்மதனின் அலுவலகத்தில் இன்று ஒரே அமர்க்களம். மூத்த அதிகாரி விநாயகமூர்த்தியின் சேவை நலன் பாராட்டு விழா. விழா முடியச் சம்பிரதாய பூர்வமாக மதுபான விருந்தும் நடைபெற்றது. நர்மதன் மதுவைத் தொடவே மாட்டான். அவன் தொடுவதெல்லாம் மாதுவைத்தான். கேசவன், சயந்தன், விக்டர், சீலன் எல்லோருமே விருந்தில் கலந்து கொண்டார்கள்.

"மச்சான் நர்மதன்! நீ சொல்லுறதிலையும் விஷய மிருக்குதுதான்ரா. வாழ்க்கையெண்டால் ஆம்பிளையள் எல்லாத்தையும் அனுபவிக்க வேணும். இதிலை பாவபுண்ணியம் பார்க்கேலாது. சேத்திலை மிதித்துத் தண்ணியிலை கழுவ வேண்டியதுதான். இப்பதான் உன்ரை பொலிசி சரியெண்டதை நான் விளங்கிக் கொண்டன்."

சாந்தன் இப்படிக் கூறியதும் நர்மதனின் முகத்தில் ஒருவித பிரகாசம் தெரிந்தது.

"பாத்தியளேடா! இப்ப எண்டாலும் விளங்கிச்சுதுதானே! அதுசரி உனக்கெப்பிடித் திடீரெண்டு மனம் மாறியிருக்கு!"

நர்மதன் கேட்டான். சாந்தன் நிறைபோதையில் கதைப்பது போலக் கதைத்தான். ஆனால் அவன் மதுவருந்தியிருக்கவில்லை. அருந்தியதுபோல நடித்தான்.

"அதையேன் கேக்கிறாய் மச்சான்! உண்மையிலை மாற்றான் தோட்டத்து மல்லிகையிலை ஒரு விசேடமான

வாசனையிருக்கத்தான் செய்யுது மச்சான்."

"அதுசரி ! உது எனக்குத் தெரிஞ்சதுதானே! உன்ரை அனுபவத்தையும் சொல்லன்ரா! கொஞ்சம் கேட்டுச் சிரிப்பம்."

நர்மதன் சாந்தனை அவசரப்படுத்தினான்.

"மச்சான்! வேம்படிச் சந்தியிருக்குது எல்லோ! அதாலை வலது பக்கம் திரும்ப ஒரு வைரவர் கோயில் வருகுது உனக்குத் தெரியுமே!"

"ஓமடா சொல்லு! சொல்லு!

ஏனோ நர்மதன் அவசரப்பட்டான்.

"அதிலை மச்சான் கிரவல் றோட்டாலை போக ஒரு சின்ன வாசிகசாலை வருகுது. அதிலையிருந்து மூண்டாவதாய் ஒரு மதில் வீடு. நீலக்கேற் போட்ட புதுவீடு."

"ஓமடா ஓ! அங்கையென்ன!"

முன்னையதைவிட நர்மதன் இப்போது பரபரத்தான். ஏனோ அவனையுமறியாது அவனுடல் வெடவெடக்கத் தொடங்கியது.

"அந்த வீட்டிலைதான் மச்சான் ஒண்டைச் செற் பண்ணியிருக்கிறன். கலியாணம் முடிச்சு ஒண்டரை வயதிலை ஒரு குழந்தையுமிருக்குது. புருஷன்காரன் கவனிக்கிற தில்லையாம்! எட! அவளின்ரை வடிவைப் பார்த்தியெண்டால்! நீ சொல்லுவாய் உன்ரை மனிசிதான் நல்ல வடிவெண்டு. கே.ஆர்.விஜயா மாதிரியெண்டு.

இவளைப் பார்த்தியெண்டால் அசல் கே.ஆர்.விஜயாதான் அவளின்ரை பல்லும், சிரிப்பும் சொல்லி வேலையில்லை மச்சான். ஏலுமண்டால் உனக்கொரு நாளைக்குக் காட்டுறன். பிறகு சொல்லுவாய் எப்பிடி என்ரை செலக்சன் எண்டு. உண்மையிலை

நர்மதன் நீ சொல்லுற மாதிரி வாழ்க்கையை நல்லாய் அனுபவிக்க வேணும். சும்மா பாவமும்.... புண்ணியமும்....!”

“டேய் கதையை நிப்பாட்டு நீ போற வீடு ஆற்றை வீடு எண்டு தெரியுமே! அது என்ரை வீடெடா. அவள் என்ரை பெண்சாதியெடா. அடுத்தவன்ரை பெண்சாதியிலை கைவைக்க உனக்கு எப்படியெடா மனம் வந்துது! றாஸ்கல்! உனக்கு எவ்வளவு தைரியம் வரவேணும்” சாந்தனின் சேட்டைப் பிடித்து ஆவேசமாக இழுத்தான் நர்மதன்.

“பொறடா நர்மதன். உன்ரை பெண்சாதி எண்ட உடனை உனக்குத் துடிக்குது. தனக்குத் தனக்கு எண்ண சுளகு படக்குப் படக்கு எண்ணுமாம்” சாந்தன் கூறினான். “என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோடா. சாந்தன் நான் திருந்திட்டன். இனிமேல் நீ என்ரை மனிசியிலை ஆசைப்படாதை. அவளை மறந்திடு. அவள் எனக்குரியவள். தயவு செய்து இதிலை தலையிடாதை”

“போடா பேயா! உன்னைத் திருத்த வழி தெரியவில்லை. உன்ரை பெண்சாதி யின்ரை முகமே எங்களுக்குத் தெரியாது. நீ கவலைப்படாதை. இப்ப எண்டாலும் நீ திருந்தினது போதும். உனக்கு உன்ரை பெண்சாதி என்ன மாதிரியோ மற்றவர்களுக்கும் அவனவன்ரை பெண்சாதி, சகோதரிகள் அப்பிடித்தானிருக்கும். பொம்பிளையள் ஆராயிருந்தாலும் அவையளை மதிக்க வேண்டும். ஒருத்தனுக்கு ஒருத்திதான்ரா உண்மையான வாழ்க்கை.” நண்பர்கள் கூற நர்மதன் வாயடைத்துப் போய் நின்றான்.

* * *

08

## நாய் வால்கள்

பரஞ்சோதி மாஸ்டர் இப்போது "ஸ்ராஃப்" றூமிலேயே அடைந்து கிடந்து மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருந்தார்.

"கடைக்காரக் கனகற்றை மகனுக்கு குறிப்பொண்டு வந்திருக்குது. பொன்னாலையிற் பொம்பிளை! இந்தக் குறிப்புமட்டும் பொருந்தீட்டுதெண்டால்.... கடவுளே! எனக்கும் சில இலட்சங்கள் தரகுக் கூலி கிடைக்கும். பொருந்திட்டால் எப்பிடியோ அமைச்சுப் போடலாம்". கற்பனைகளை வளர்த்துக் கொண்டார் பரஞ்சோதி மாஸ்டர். கல்யாணத் தரகில் எத்தனை ஆண்டுகால அனுபவங்களைக் கொண்ட மனிதர். அத்துடன் இரு பகுதிக் குறிப்புக்களையும் ஒன்றிணைத்துப் பொருத்தம் பார்க்கக் கூடிய வல்லமையும் பெற்றிருந்தார். தரகு தம்பட்டங்களில் நெளிவு சுளிவுகளைக் கச்சிதமாகக் கற்றிருந்தபடியால் அவரின் கல்யாணத் தரகுத் தொழில் தொய்வின்றி ஓடிக்கொண்டிருந்தது.

இந்தக் குறிப்புக்களிரண்டும் அவசரமாக பார்த்து முடிக்க வேண்டியவை. எனவே தான் பாடசாலை "ஸ்ராஃப் றூமிலே"யே அவைகளை வைத்துப் பொருத்தம் பார்த்துக் கொண்டிருந்தார். ஐந்தாம் வகுப்பில் கணித பாடம் கற்பிக்க வேண்டிய நேரம் தான் இது. ஆனால் அதைப் பற்றிய கரிசனை அவருக்குக் கிஞ்சித்துமிருந்ததாக தெரியவில்லை. ஏதோ பெயருக்கு வகுப்புக்குள் நுழைந்து விட்டு இங்கே ஓடிவந்துவிட்டார்.

"டேய்! எல்லோரும் இந்தக் கணக்குகளைச் செய்யுங்கோ! ஒருத்தரையொருத்தர் பாத்துச் செய்யக்கூடாது. டேய் முகுந்தன்! பிறகு தெரியும்தானே....! முதுகுத்தோல் உரியும்.

சொல்லிப்போட்டன். எடி! மனோரஞ்சிதம் ! உவங்களைக் கவனிச்சு எனக்குச் சொல்ல வேணும். என்ன! நான் இப்ப வந்திடுவேன்" இவ்வாறு சொல்லிவிட்டு வந்தவர்தான் இங்கே ஸ்டா∴வ் ரூமிற்குள்ளிருந்து சாதகக் கட்டுக்களுடன் மண்டையை உடைத்துக் கொண்டிருக்கின்றார்.

அது இரு கிராமப் புறத்துப் பாடசாலை. அதிபர் அம்பிகைபாலனும் அவருக்கு மிக நெருங்கிய உறவு முறையைக் கொண்டவர். மனைவி வழியில் வந்த ஒரு மைத்துனன். எனவே பரஞ்சோதி மாஸ்டரை அவரும் நீளக்கயிற்றிலே விட்டிருந்தார். அவருடைய தில்லு முல்லுகளை அதிபரும் கண்டு கொள்ளாத படியால் பரஞ்சோதியர் ஒரு பரமசிவன் கழுத்துப் பாம்பாக ஆகிவிட்டார்.

பரஞ்சோதி மாஸ்டர் இதே பாடசாலையில் கிட்டத்தட்ட இருபதாண்டுகளாகச் சேவையாற்றி வருகின்றார். ஊர்ப் பாடசாலை என்றபடியால் அவருக்கு ஏகப்பட்ட செளகரியங்களிருந்தன. வயல்வேலைகள், தோட்டம் துரவுகளைப் பராமரித்தல், வீட்டு வேலைகளைக் கவனித்தல், அத்துடன் ஊரிலே அவ்வப்போது நடைபெறும் கல்யாணம், சாமத்தியம், அந்தியேஷ்டி, ஆண்டுத் திவஷம் போன்ற நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்புக்களும் நிறையவேயிருந்தன. அவருக்கு விடுமுறையென்றோ விசேடமாக விடுப்புக்கள் பெற வேண்டிய தேவைகளிருக்கவில்லை. எல்லாம் கடமை நேரத்திலேயே நிறைவேற்றக்கூடியதாயிருந்தபோது எதற்காக விடுப்புக்கள் எடுக்க வேண்டும்! நினைத்த நேரம் பாடசாலைக்கு வருவது, நினைத்த நேரம் வீட்டிற்குப் போவது, விரும்பினால் கற்பிப்பது, இல்லையென்றால் வீட்டிலிருந்துகொண்டு வரும் சாதகக்

கட்டுக்களுடனிருந்து தன்தொழில் பார்ப்பதுமாக அவருடைய ஆசிரிய சேவைக்காலம் உழன்று கொண்டிருந்தது. இவருடன் அங்கே கற்பிக்கும் சக ஆசிரியர்களுக்கு இவருடைய போக்குக்கள் எதுவுமே உடன்பாடாக இருப்பதில்லை. இருந்தும் என்ன செய்ய! அதிபரே கண்டும் காணாமல் பொறுப்பற்ற விதத்தில் நடக்கும்போது, பாவம்! இந்த ஆசிரியர்களினால் என்னதான் செய்ய முடியும்!

இப்போது பாடசாலையில் மணிச்சத்தம் கேட்கின்றது. ஒரு பாடம் முடிந்து மறுபாடம் தொடங்கப் போகின்றது. அங்கே ஐந்தாம் வகுப்பில் கணித பாடம் கொடுத்துவிட்டு வந்தவர் வந்ததுதான். அங்கே என்ன பாடோ யாரறிவர்! இனி நாலாம் வகுப்புக்குத் தமிழ் கற்பிக்க வேண்டிய நேரம். அங்கேயும் ஒரு தடவைபோய் முகத்தைக் காட்டி மாணவர்களை எப்படியோ தாஜா பண்ணிவிட்டு வந்தால், மிகுதியாயிருக்குமந்தச் சாதகக் குறிப்புக்களைப் பார்த்தெடுத்து ஏதோ ஒரு வழிவகையைச் செய்யலாம்.

நாலாம் வகுப்பிற்குள் மிகக் கம்பீரமாக நுழைந்து கொண்ட பரஞ்சோதி மாஸ்ரரைக் கண்டதும் உயரதிகாரியைக் கண்ட படைச் சிப்பாய்களாகப் பிள்ளைகளெல்லோரும் எழுந்து நின்று வணக்கம் சொல்லி மரியாதை செய்தனர். அவருடைய கையில் பாடப் புத்தகங்களில்லாது போகலாம். ஆனால், கையில் ஒரு கொய்யாப் பிரம்பு இருக்காமல்விடாது. அத்தனை கண்டிப்பைக் காட்டும் அவர், ஏனோ கற்பித்தலில் மட்டும் கோட்டை விட்டுவிடுவார்.

“டேய் மதிவண்ணன்! உங்கையென்னடா செய்யுறியள்! என்ன விடுப்புப்பாக்கிறியள்! டேய்! மணியத்தின்ரை மோன்! உவன்ரை பேரும் வராதாம்! என்ன சசிக்குமாரோ!

“இல்லை சேர் சதீஸ்குமார்.”

"என்ன இழவோ! அது சரி! நான் இஞ்சை வந்திருக்கிறன். உங்கை நீங்கள் என்ன பிராக்கிலை இருக்கிறியள்!" மிகுந்த கடுப்புடன் கேட்டார் பரஞ்சோதி மாஸ்டர்.

"சேர்! உவன் மனோகரன் பொன்வண்டு வைச்சிருக்கிறான்."

"என்னடா பொன்வண்டோ! அது என்னடா பொன்வண்டு! கொண்டாருங்கோடா இஞ்சை பாப்பம்!"

அந்தப் பொன்வண்டு கொண்டு வந்து அவருடைய மேசையில் விடப்பட்டுவிட்டது. மாணவர்களெல்லோரும் சூழ்ந்து நிற்கப் பொன்வண்டென்னுமந்த புதுமையான வண்டு எல்லோரினதும் கண்காட்சிக்கு விடப்பட்டிருந்தது.

"இதென்னடா இது! உண்மையிலை பொன்னிறத்திலை நல்ல வடிவாய்த்தானிருக்குது. இதெடா முந்தின எங்கடை காலங்களிலை வாகை மரங்களிலை இருக்கிறது. இப்ப குறைஞ்சிட்டுது. முந்தினமாதிரி பார்க்கக் கிடைக்குதுமில்லை."

மேசையில் புரட்டி வைக்கப்பட்டிருந்த பொன்வண்டு மல்லாக்காகக் கிடந்து, கால்களையடித்துத் துடித்துக் கொண்டிருந்தது. ஒரு சின்னஞ் சிறிய குழந்தை தனது கை கால்களையடித்து விளையாடிக்கொண்டிருப்பது போன்றிருந்தது. அனைத்து மாணவர்களும் சூழ்ந்து நின்று அதை வேடிக்கை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். அவர்களுடன் பரஞ்சோதி மாஸ்டரும் சேர்ந்து ரசித்து மகிழ்ந்து கொண்டிருக்க அடுத்த பாடத்திற்கான மணி ஓங்கி ஒலித்தோய்ந்தது.

அதுசரி! பொன்வண்டு பார்த்ததுடன் அன்றைய தமிழ்ப்பாட நேரம் கரைந்துவிட்டது. ஆசிரியரின் கற்பித்தற் குறிப்பில் அன்று நடாத்திய பாடம் பற்றிய குறிப்புக்கள் ஏதாவது எழுத

வேண்டுமே! எதை எழுதுவது! எப்படி எழுதுவது! மண்டையைக் குழப்பினார். முடிவொன்று வந்தது. "பூச்சியினங்கள்" என்று பாடக்குறிப்பில் எழுதிவிட்டு மீண்டும் ஸ்ரடா.:.ப் றூமை நோக்கிக் கம்பீரமாக நடந்து கொண்டிருந்தார். இனி அவருக்கு :.பிறி பீறியேட்தான். கெட்ட கேட்டிற்கு இனியுமொரு ப்பீறீ பீரியேட் வேறு!

"என்னப்பா சொல்லுறீர்! கற்பகம் வீட்டுக்காரர் இன்னும் பால் எடுக்க வரயில்லையோ! சரி என்ன செய்யுறது! வராட்டில் அவையின்ரை வீட்டை கொண்டு போயெண்டாலும் குடுக்கத்தானே வேணும். இல்லாட்டில் ஒரு போத்தில் பால் எங்களுக்குத்தானே நட்டமாய்ப் போகிடும். அது சரி! அவைக்கு வீடு தேடிக் கொண்டு போய்க் குடுக்க வேண்டிக் கிடக்கு! வேறையென்ன! அந்தச் சிவப்பிப் பசு இராராவாய்க் கத்திக் கொண்டிருந்தது. இப்ப கனத்த நாள்தானே! நாம்பனுக்கு கத்துகுது போலை..! உவன் செகிட்டுச் செல்லத்துரையிட்டைச் சொல்லி மார்க்கண்டன் வீட்டை கொண்டு போய்க் கட்டிவிடச் சொல்லும். மற்றது, இண்டைக்கு வாழைத்தோட்டம் கொத்துறதுக்கு சிவகுருவும் மணியனும் வாற எண்டவங்கள். அவன் மணியன் சரியான உழட்டி. இடைக்கிடை போய்ப் பாரத்துக்கொள்ளும். நானிப்ப வந்திடுவன். போனிலை காசு முடியுது. வையும் நான் வாறன் சரியோ!"

போனில் காசும் முடிந்துபோனது. கூடவே அவருடைய ப்றீப்பீரியேட்டும் அவமாகக் கரைந்திருந்தது. இந்த வேளையில்தான் அந்தக் குறிப்புக்களைப் பார்த்து ஒழுங்குபடுத்தலாமென்றால்....! அதற்குள் மனைவியின் தொலைபேசி அழைப்பால் எல்லாம் அம்போவாகிவிட்டது.

பாடசாலைக்கும் பரஞ்சோதி மாஸ்ரருடைய வீட்டிற்கும் ஒரு கிலோ மீற்றர் தூர இடைவெளியே இருந்தது. எனவே ஒரு நாளைக்கு எப்படியும் மூன்று தடவைகளாவது வீட்டிற்குப்

போய் தன்னுடைய சோலிகளை முடித்து வந்து விடுவார்.

"இல்லை ரவீந்திரன் சேர்! உவர் பரஞ்சோதி சேர் வலு மோசமாய் வந்திட்டார். உவற்றை போக்குகளொண்டும் சரியில்லை. கொஞ்சமெண்டாலும் பொறுப்போடை நடக்க வேணும்". கோமதி ரீச்சர் மிகவும் கொதித்துப் போயிருந்தார்.

"ஓம் ரீச்சர்! அந்த மனிசனுக்குப் பிள்ளையளின்ரை படிப்பைப் பற்றிக் கொஞ்சமும் அக்கறையில்லை. எந்த நேரமும் வீட்டை போறதும் வாறதும் தான் வேலை".

"அதுமட்டுமே சேர்! ஸ்கூலிலை நிக்கிற நேரத்திலும் வகுப்புக்கு போறாரோ எண்டால் அதுவுமில்லை. எந்தநேரமும் சாதகக் கட்டுகளோடை ஸ்ரா∴ப் றூமுக்கைதானே அடை கிடக்கிறார்."

"அது தானே சொல்லுறது, ஊரிலையிருக்கிற பள்ளிக்குடத்துக்கு ஊர் வாத்திமாரைப் போடக்குடாதெண்டு. எங்களைப் போலை வெளியிடங்களிலையிருந்து வாற ரீச்சேர்ஸ் வருகினம்... படிப்பிக்கினம்... போகினம்...! அவைக்குப் படிப்பிக்கிறதைவிட வேறை சோலியளிருக்காது. தங்கடை கடமைகளை ஒழுங்காகச் செய்யினம்."

"உண்மைதான் சரவணன் சேர்! உந்த மனிசனையும் எங்கையேன் தூர இடத்துக்கு 'ரான்ஸ்∴பர்' பண்ணினாற்த்தான் ஆள்திருந்துவார்".

மதிய இடைவேளை நேரத்தில் சக ஆசிரியர்கள் பரஞ்சோதி மாஸ்டரைப் பல்வேறு விதமாக விமர்சித்துத் தங்கள் தங்கள் கொதிநிலைகளைக் காண்பித்துக் கொண்டிருந்தனர்.

"உவர் நினைக்கிறார் போலை நெடுக உப்பிடியே தன்ரை எண்ணத்துக்கு ஆடலாமெண்டு. சரியான வேலை பாத்தால்

வன்னிப் பக்கத்திலை தண்ணியில்லாக் காட்டுப் புறத்துக்கு மாற்ற என்னாலை ஏலும்.”

கோபிகன் சேர் சற்று உறைப்பாகக் கூறினார். கடந்த பதினைந்து ஆண்டுகளாக திருகோணமலை, பண்டாரவளை, அநுராதபுரமென்று பல்வேறு மாவட்டங்களில் சேவையாற்றிவிட்டு அண்மையில்தான் சொந்த மாவட்டத்தில் இந்தப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்திருக்கின்றார். இருந்தும் தனது வீட்டிலிருந்து சுமார் பத்துக் கிலோ மீற்றர் தூரத்தை மோட்டார் சைக்கிள் மூலமாகவே பயணித்து இங்கே வருகின்றவர். அவருடைய கற்பித்தல் நடவடிக்கைகள் பற்றி யாருமே விரல் நீட்டிப் பேச முடியாது. அத்தனை கடமையுணர்வும் கண்ணியமும் கொண்டவர். எத்தனையோ சாதனைகளைக் கண்டவர்தான் கோபிகன் சேர்.

“ஓம் சேர்! உவராலை எங்கடை இந்தப் பள்ளிக்கூடத்துக்கு மட்டுமில்லை எங்கடை ஆசிரிய சமூகத்துக்கே மரியாதையில்லாமல் வரப்போகுது.”

பரஞ்சோதி மாஸ்டருக்கும் இரண்டொரு தடவைகள் இடமாற்ற உத்தரவுகள் வந்திருந்தன. எனினும் அவர் அரசியல்வாதிகளின் கையைக் காலைப் பிடித்து அந்தக் கண்டங்களிலிருந்து தப்பிக் கொண்டவர். பணமும் அரசியலும் சேர்ந்து நின்றதால் அவரை எந்தக் கொம்பனாலும் இடமாற்றம் செய்ய முடியவில்லை.

இன்னும் மிஞ்சிப் போனால் மேலும் பத்தாண்டுகள் மட்டுமே ஆசிரியத் தொழிலைத் தக்க வைக்க முடியும். இத்தனை காலமாக இடமாற்றங்களில் சிக்கிக் கொள்ளாத பரஞ்சோதி மாஸ்டருக்கு இனியொரு இடமாற்றம் வரவா போகின்றது என்றும் நம்பிக்கை உறுதியாக வேரூன்றியிருந்தது.

பரஞ்சோதி மாஸ்டருக்கு இரண்டு மகன்கள். இருவருமே வெளிநாடுகளில் கொள்ளையாகச் சம்பாதித்து மாதா மாதம் பல லட்சங்களை அனுப்பிக் கொண்டிருக்கின்றனர். மகள் நந்தாயினி அரச வங்கியொன்றில் உயர்நிலை அதிகாரி. திருமணம் முடித்துவிட்டார். கணவனும் அரச திணைக்கள மொன்றில் பணிப்பாளர். இவர்களும் மிகவும் வசதியாகவும் செல்வாக்காகவும் வாழ்கின்றனர். பரஞ்சோதி மாஸ்டருக்குப் பார்க்குமிடமெல்லம் தோட்டங்கள் துரவுகள் காணிபூமிகள் என்று ஏராளமான வசதிகளுடன் வாழந்து வருபவர். அவரிடமிருக்கும் பணத்தைக் கொண்டு எத்தனையோ தலைமுறைகளை வாழ வைக்கலாம். இருந்தும் பசு வளர்த்துப் பால் விற்பனை செய்தல், தோட்ட வேலைகள், தரகு தம்பட்டம் பார்த்தல், வயல் விதைத்தல் போன்றவைகளை அவர் தொடர்ந்து கொண்டேயிருந்தார். பணம்! பணம்! அதைத் தேடுவதற்காக எதையும் செய்வார். அவருடைய கையைக் காலைக் கட்டிப் போட்டாலும் மனிதர் ஏதோ ஒரு வழியில் பணம் சம்பாதிப்பதிலேயே குறியாயிருந்தார்.

வழக்கம்போல பாடசாலை ஆரம்பிக்கும் காலை நேரம் பாடசாலை சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்த அந்த வேளையில் கோபிகன் சேர் அவசரமாகப் பத்தாம் வகுப்பை நோக்கி விரைந்து கொண்டிருந்தார். என்றைக்குமே பேசிப் பரிச்சயமில்லாத பரஞ்சோதி மாஸ்ரரின் அழைப்புக்குரல் அவரின் கால்களைக் கட்டிப் போட்டு நடையை நிறுத்தியது..

"என்ன சேர்! என்ன விஷயம்!"

சுருக்கமாகக் கேட்டார் கோபிகன் சேர். அவருக்கு எல்லாமே புரிந்திருந்தது. பரஞ்சோதி மாஸ்டர் எதைப் பற்றிப் பேசப் போகின்றாரென்பதையும் துல்லியமாகப் புரிந்திருந்தார்.

"இல்லை சேர்! எனக்கு வன்னிக்கு இடமாற்றம் கிடைச்சிட்டுது. நாளைக்குப் போகவேணும். அதுதான்

உங்களிட்டையும் சொல்லிப் போட்டுப் போகலாமெண்டு...!"

வார்த்தைகளில் வழமையான உயிர்த்துடிப்பிருக்கவில்லை. முகம் வாடிப்போய் பொலிவிழந்து காணப்பட்டது. சிரிப்பைத் தொலைத்திருந்தார். சற்றும் எதிர்பார்த்திராதவருக்கு இந்த இடமாற்ற உத்தரவு ஒரு பேரிடி என்பதை யாரும் புரிந்து கொள்ளக் கூடியதாகவேயிருந்தது.

விடயம் காட்டுத் தீயாகப் பரவியது. ஆசிரியர்கள் மாணவர்களனைவருக்குமே இது மகிழ்ச்சியைக் கொடுத்தது. மாணவர்களில் படிப்பில் ஆர்வமில்லாத பொழுது போக்குக் காகவும், சத்துணவுக்காகவும் பாடசாலை வரும் ஒரு சிலருக்கு மட்டும் பரஞ்சோதி மாஸ்டரின் இடமாற்றம் நீங்காத கவலையைக் கொடுத்தது. அவர் இருந்தால் கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டியதில்லையே! இதுதான் அவர்களின் கவலைக்குக் காரணமானது.

எப்படியோ பரஞ்சோதி மாஸ்டர் வன்னிப் பிரதேசப் பாடசாலை ஒன்றுக்குப் போய்விட்டார். காலமும் போய்க்கொண்டிருந்தது. ஆனால் அவரைப் பற்றிய பேச்சுக்கள் மட்டும் எங்கேயும் போய்விடவில்லை. அடிக்கடி அவரின் நினைவுகளை இங்கே மீட்டுக் கொண்டிருந்தனர் ஆசிரியர்கள்.

"மெய்யே சரவணன் சேர்! எங்கடை பரஞ்சோதி சேரும் ட்ரான்ஸ்ப.:ரிலை போய் ஏழெட்டுமாதம் வரும் என்ன உங்கை என்ன செய்யுறாரோ! என்ன பாடோ! பாவம்!"

"ஓம் சேர்! எட்டு மாதமாகுது. இப்பதான் அவருக்கு எல்லாக் கஷ்டமும் விளங்கும். இனி எப்பிடியும் பிள்ளையளுக்கு ஒழுங்காய்ப் படிப்பிப்பார். இருக்கிற மிச்சக் காலத்திலை யெண்டாலும் கொஞ்சம் சேவை செய்து போட்டுப் பென்சன் எடுக்கட்டும்."

"வேறையென்ன சேர்! இனி அவருக்கு வேறை சோலியளிருக்காது தானே! படிப்பிக்கிறதைத் தவிர வேறை என்ன வேலையிருக்கப் போகுது." அப்ப படிப்பிக்கத்தானே வேணும்."

"ஓம் ரீச்சர்! ஊர்ப்பள்ளிக்குடத்திலை படிப்பிக் கிறவைக்குப் பொதுவாய் இப்பிடியொரு சிக்கல் வாறதுதான். மாடு கண்டு, காணிபூமி, குடும்பமெண்டு தங்கடை பிரச்சினை பார்க்கத்தான் அவைக்கு நேரம் சரி. பிறகெங்கை பள்ளிக்குடம் ஒழுங்காய்ப் போறது! படிப்பிக்கிறது! அப்பிடித்தான் பரஞ்சோதி மாஸ்டரும் என்ன செய்யுறது!"

"உண்மைதான்! பரஞ்சோதி சேர் இனியெண்டாலும் விஸ்வாசமாயப் படிப்பிப்பர். பாவம்! அவற்றையிடத்திலை ஆர் இருந்தாலும் உப்பிடிப் பிரச்சினையள் வரத்தான் செய்யும். சரி! இனி அவர் திருந்திடுவர். அங்கை பெல் அடிக்குது எனக்கு எட்டாம் வகுப்புக்கு இங்கிலிஷ் சரிபோவமே!"

கோமதி ரீச்சர் சொல்லியபடி இருக்கையைவிட்டெழுந்தாள். மதிய உணவை முடித்துவிட்டுச் சற்று நேரம் பலதும் பத்தும் பேசிக் கொண்டிருந்த ஆசிரியர்கள் அனைவரும் எழுந்து தங்களின் வகுப்புக்களை நோக்கி விரைந்துகொண்டிருந்தனர்.

வன்னிப் பிரதேசத்தில் மிகவும் பிற்போக்கான சூழலில் அமைந்திருந்தது அந்தச் சின்னஞ் சிறிய பாடசாலை. எட்டாம் வகுப்புவரைக்கானது. ஆறு ஆசிரியர்களைக் கொண்டது. வெளி மாவட்ட ஆசிரியர்கள் தங்குவதற்கென்று பாடசாலைக்கண்மையில் நூறு யார் தூரத்தில் ஒரு சிறிய விடுதிக் கட்டிடமும் அமைக்கப்பட்டிருந்தது. அங்கேதான் பரஞ்சோதி மாஸ்ரரும் சமைத்துச் சாப்பிட்டு முடங்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

பாடசாலையும் விடுதியும் ஓரளவுக்குக் காட்டுப் பிரதேசமாகவே காணப்பட்டது. வசதிகள் குறைந்த பகுதி. பன்றிகள், மான்கள், மரைகள் கொடிய விஷப் பாம்புகளைக் கொண்ட பிரதேசம். அவ்வப்போது யானைகளின் பிரசன்னங்களையும் காணக்கூடியதாயிருக்கும். இருந்தாலும் இந்தச் சூழலையண்டிய பகுதிகளில் பெருவாரியான வயல் நிலங்களும் காணப்பட்டன. அத்தனையும் நீர் வளம் கொண்ட பசுமையான வயல்கள்.

வாரமொரு தடவை ஊருக்கு வந்து போவார் பரஞ்சோதி மாஸ்டர் சில வேளைகளில் சற்றுத் தாமதமாகி இரண்டு வாரங்களுக்கொரு தடவையும் வருவதுண்டு. முன்னைய ஊர்ப்பாடசாலையில் எத்தனை வசதிகளை அனுபவித்து எத்தனை அடாவடிகளைப் புரிந்தவர் இப்போது இவ்வாறு அடங்கிக் கொண்டமையை எண்ணி ஊரவர்களும் ஊர்ப்பாடசாலைச் சமூகத்தினரும் வியப்படைவதுண்டு. அவர்மீது பரிதாபப்படுபவர்களுமுண்டு.

பரஞ்சோதி மாஸ்டரின் ஊர்ப்பாடசாலையில் காலை நேரத்து ஆரம்பம் சூடு பிடித்துக்கொண்டிருந்தது.

"சரவணன் சேர்! இஞ்சை வாங்கோ ஒரு பெரிய புதினம் சொல்லுறன்."

மதன் சேரின் அவசரக் குரல் கேட்டு சரவணன் சேர் ஆடாது அசையாது அதே இடத்தில் நிற்க, அங்கே போய் வந்து கொண்டிருந்த ஆசிரியர் குழாமும் மதன் சேர் சொல்ல விருக்குமந்தப் புதினத்தை அறிவதற்காக அங்கே ஒன்று கூடினர்.

"எங்கடை பரஞ்சோதி மாஸ்டர் இந்த முறை லொறியிலை எல்லே வீட்டை வந்து நிற்கிறார்!"

"ஓம் சேர்! அவற்றை பள்ளிக்கூடம் ஒரு போக்குவரத்து வசதியளில்லாத பள்ளிக் கூடமாம். அதுதான் ஆற்றையோ லொறியிலை ஏறிவந்திருக்கிறராக்கும். பாவம்!"

'அதில்லை சேர்! லொறி நிறைய நெல்லு மூடையள் ஏத்திக் கொண்டு வந்திருக்கிறார். நான் விசாரிச்சுப் பாத்தன். அவர் அங்கை குத்தகைக்கு வயல் எடுத்துப் பெரிய எடுப்பிலை வெள்ளாண்மை செய்யுறதுதானாம் அவற்றை தொழில். அவர் விதைச்ச நெல்லைத்தான் லொறியிலை ஏத்தி வந்திருக்கிறாராம்."

"கடவுளே! உந்த மனிசனைத் திருத்தவே ஏலாது. ஒரு நாளும் திருந்தாது"

"ஓம் சேர்! எங்கடை வீட்டு நாயின்ரை வாலையும் நான் எத்தினையோ முறை நிமிர்த்திப் பார்க்க முயற்சி செய்தன். அது நிமிரவே இல்லை."

நாய்வால்கள் என்றைக்கும் நிமிர்வதில்லை. இதை விட அவர்களால் வேறு என்னதான் சொல்லமுடியும்!

***

09

## குடும்ப வாழ்க்கை

ஏதோ ஒரு வேகத்தில் வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டேன். இனிமேல் எனது வீட்டு முற்றம் மிதிக்கப் போவதுமில்லை. மனைவியின் முகத்தில் விழிக்கப் போவதுமில்லை. திடசங்கற்பம் பூண்டு விட்டேன். எத்தனை நாள்கள்தான் சமாளிப்பது! எத்தனை காலம் தான் அனுசரித்துப் போவது! தினமும் சண்டையும் சச்சரவுமே எனது வாழ்க்கையாக மாறிவிட்டது. கட்டிய மனைவி ஏறுமாறாக நடந்தால் கூறாமல் சன்னியாசம் கொள் என்பார்கள். நான் அப்படியொன்றும் சன்னியாசம் கொள்ளப் போவதில்லை.

நாற்பது வயதானால் வீட்டிற்கு நாய் தேவையில்லை என்பதும் ஊர்ப்பழமொழி நூற்றுக்கு நூறு உண்மையானதே! மனைவிக்கு நாற்பது எனக்கு நாற்பத்தைந்து. சதா சண்டையும் வாய்த்தர்க்கமுமாக எப்படிக் குடும்பத்தை ஓட்டுவது! எனவே தான் மனைவியை விட்டுப் பிரிந்து விட்டேன். நல்ல வேளை! எங்களின் குணமறிந்துதான் இறைவன் புத்திரபாக்கியத்தைத் தரவில்லைப் போலும். நானில்லையென்றாலும் அவளுக்கு அது பெரிய இழப்பாக இருக்கப் போவதில்லை. அவளைத் தாய் வீடு அரவணைத்துக் கொள்ளும். ஆனால் என்பாடுதான் திண்டாட்டமாக இருக்கப் போகின்றது. எனினும் என்னுடைய ரோஷம் என்னை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டது. இனிக் கறந்தபால் முலைக்கேறாது. வீட்டுப்பக்கம் தலைவைத்தும் படுக்க முடியாது. உரைத்துப் பார்க்கக் கூடச் சல்லிக் காசும் கிடையாது. பார்ப்போம்! படைத்தவன் படியளப்பான். நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு நடையைக் கட்டினேன். இப்போது முதலாவது பிரச்சினை! படுத்தெழுந்து கொள்ள ஒரு இடம் வேண்டும். ஊரிலே எங்கேயும் தங்கமுடியாது. தங்கவும்

கூடாது. அயலூர்களுக்குச் சென்றால் எங்கேயாவது கோயில் மடங்கள், வாசிகசாலைகள், கடைத்தாழ்வாரங்கள் கை கொடுக்காமலா போய்விடும்! துணிவே துணை! துணிச்சலை வரவழைத்துக் கொண்டேன்.

அது ஒரு அம்மன் கோயில், அதற்குத் தென்திசையில் ஒரு சிறிய மடம் காலியாகவிருந்தது. மகிழ்ச்சியோ மகிழ்ச்சி எனக்கு. அன்றைய இரவுப் பொழுதை அங்கேயே கழித்து விடலாம் என்று மெல்லப் படுத்துறங்கி விட்டேன். நள்ளிரவு வேளையில் யாரோ வந்து என்னைத் தட்டி எழுப்பினார்கள்.

"ஏய்! ஆரப்பா நீ! ஆரைக் கேட்டு இங்கை வந்து படுத்திருக்கிறாய்!" கையில் பொல்லொன்றுடன் ஒரு தடித்த மனிதன் பயமுறுத்தினான்.

"என்னடா! கோயில் விக்கிரகம் உடைச்சுக் கொண்டு போகத்தானே வந்திருக்கிறாய்"

இப்படி இரண்டாமவன் கேட்டுக் கொண்டிருக்க முன்னையவன் கையில் வைத்திருந்த பொல்லினால் மண்டையில் ஒரு போடு போட்டான். தலையெங்கும் சிவப்புச் சமாச்சாரம். குய்யோ முறையோ என்று அலறியடித்து எனது நிலைப்பாட்டை அவர்களுக்குப் புரிய வைப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது.

"கட்டினவளை விட்டிட்டு இப்பிடிக் கண்டபடி நடக்கிற உனக்கு வெட்கமில்லையே! இனி மேல் இந்தப் பக்கம் வரக் கூடாது. விடிஞ்சதும் ஓடித் தப்பு! இல்லாட்டில் நடக்கிறது வேறை"

சொல்லிவிட்டுப் போய்க்கொண்டிருந்தனர். கட்டினவளைக் கைவிட்டிட்டு வந்ததிற்கு இது முதலாவது தண்டனை போல் உணர்ந்தேன். இருந்தும் ரோஷம் விடவில்லை. எத்தனை

சோதனைகள் வந்தாலும் மனைவியிடம் போய் மண்டியிடப் போவதில்லை. மீண்டும் மனத்தில் உறுதியை ஏற்படுத்திக் கொண்டு மற்றுமொரு புகலிடத்தைத் தேடிப் பிடிப்பதில் முனைப்பாயிருந்தேன்.

எல்லாம் சரி. வயிற்றுப் பசிக்கு வழி தேட வேண்டுமே! நல்லவேளை. பக்கத்தில் ஒரு கோயிலில் பத்து நாள்கள் திருவிழா ஆரம்பமாகின்றது. அந்தப் பத்துத் தினங்களும் அன்னதானம் கொடுப்பார்கள். சமாளிக்கும் வழியைக் கண்டு பிடித்துவிட்டேன். கோயில்களில் அன்னதானங்கள் கிடைக்காத வேளைகளில் திருமணம், பூப்புனிதம், பிறந்தநாள் என்று ஏதோ ஒன்று என்னுடைய வயிற்றுப் பசிக்கு வழி காட்டின. வேற்றூரில் எனக்கென்ன திருமணவிழா! என்னை யார் அழைக்கப் போகின்றார்கள். அழைக்காவிட்டால் என்ன! அழையா விருந்தாளியாக நுழைய வேண்டியதுதான். ஏராளமான மக்கள் குழுமியிருக்கும் கொண்டாட்டத்தில் நானும் ஒருவனாகப் போய் ஓரிடத்தில் அமர்ந்து கொள்ள வேண்டியதுதான். நன்றாக உடை உடுத்தி நல்ல இடத்து மனிதனாகப் பிறர் மதிக்கத்தக்க வகையில் போய்க் கொண்டால் பொல்லாப்பு எதுவும் வந்து விடாது. பிச்சைக்காரக் கோலத்தில் போக முடியாது. போனால் வயிற்றுச் சாப்பாட்டுக்குப் பதிலாக வேறு ஏதாவது சாப்பாடுதான் கிடைக்கும்.

தினமும் பத்திரிகைகள் பார்க்க வேண்டிய தேவை எனக்கு. காசு கொடுத்துப் பத்திரிகை வாங்க முடியாது. எங்கேயாவது நூல் நிலையங்களில் பார்த்துக் கொள்ளலாம். அன்றுமொரு நாள் இப்படித்தான் திருமண அழைப்பிதழ்! இருவீட்டார் அழைப்பு. தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும் என்றிருந்தது. போனேன் எதுவித பயமுமின்றி. ராஜ உபசாரம்! மண்டபத்திற்குள் நுழைந்த நேரம் முதல் எதை எதையோ பரிமாறினார்கள். குளிர் பானம், கேக், லட்டு என்று

மாறி மாறி நானும் ஓயாது வாயசைத்துக் கொண்டிருந்தேன். மதியம் பிரியாணிச் சோறு. வசதியான பார்ட்டி. சொல்லவா வேண்டும். பயப்பட வேண்டியதில்லை. காரணம் தனிப்பட்ட அழைப்பாம். மூக்குமுட்டச் சாப்பிட்டுவிட்டேன்.

அன்றுபோல் இப்படி என்றைக்கும் இருக்க முடியாது. மற்றுமொருநாள் பத்திரிகையைப் பார்க்காமலே மண்டபத்தை நோக்கிப் பறந்தேன். மண்டபத்து வழியால் வரும்போது அங்கே கொண்டாட்டம் ஏதோ நடந்து கொண்டிருந்தது. எதுவித விசாரிப்புக்களுமின்றி உள்ளே நுழைந்து விட்டேன். எல்லோரும் அவசரமாகச் சாப்பாட்டுப் பந்திக்குப் பறந்தடித்தார்கள். அவர்களிலொருவனாக நானுமிணைந்து கொண்டேன். எனக்கும் நல்ல பசி. தட்டு நிறையச் சோற்றைப் போட்டு அத்தனை கறிகளையும் அள்ளி ஊற்றி ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தேன்.

“உங்களை ஆரேண்டு தெரியவில்லை. நீங்கள்...!

பக்கத்தில் என்னுடனிருந்து உணவருந்திக் கொண்டிருந்தவன் என்னை நோண்டத் தொடங்கினான்.

“போச்சடா! இவன் ஆரடா! சாப்பிடுற நேரம் பாத்துச் சிவபூசைக் கரடிமாதிரி”

“நான் மாப்பிளை பகுதி. மாப்பிளைக்கு ஒண்டைவிட்ட மாமா”

சொல்லியபடி தொண்டைக்குள்ளிருந்த சோற்றை விழுங்கினேன். முடியவில்லை. உணவு புரைக்கேறியது. தண்ணீரை விழுங்கிப் பார்த்தேன். அதுவும் முடியவில்லை.

அவன் என்னைப் பார்த்த பார்வையில் வெட்கமும் பயமும்

என்னைப் பியத்தெடுப்பது போன்றதொரு பிரமை எனக்கு.

"ஆரப்பா மாப்பிளை! இது சாமத்திய வீடெல்லோ நடக்குது. என்ன பேய்க்கதை கதைக்கிறாய்! நீயொரு ஏமாத்துக்காரன் போலை கிடக்கு. இஞ்சை உன்னை ஆர் கூப்பிட்டது. உள்ளதைச் சொல்லு" இப்போது அவனுடைய பேச்சுக்களில் மரியாதையென்பது கிஞ்சித்துமில்லாதிருந்தது.

"உவன் கள்ளனடா" சங்கிலியறுக்க வந்து நிக்கிறான். கலியாண மண்டபங்களிலை இப்ப களவுகள் நடக்குது. சாப்பிடட்டும். சாப்பிட்டு முடிய அறைக்குள்ளை கொண்டு வாருங்கோ! நாலு சாத்துச் சாத்த உண்மை வெளியிலை வரும்."

பக்கத்திலிருந்த மற்றுமொருவனின் பயமுறுத்தல் என்னுடைய வயிற்றைக் கலங்க வைத்தது.

"ஐயோ தம்பியவை என்னை ஒண்டும் செய்து போடாதேங்கோ! உள்ளதைச் சொல்லுறன்".

நன்றாக மாட்டிக் கொண்டேன். மனைவியுடன் தகராறுபட்டு வீட்டைவிட்டு வெளியில் வந்த அத்தனையையும் ஒன்றும் தவறாது சொல்லிவிட்டேன்.

"சே! நீ என்ன மனிசனப்பா! புருஷன் பெண்சாதிச் சண்டையில்லாமல் உலகத்திலை ஆர் இருக்கிறான்." அம்மி மிரிச்சு அருந்ததி பாத்து சபையோர் சாட்சியாகச் சத்தியம் செய்து தாலி கட்டின ஒரு பெம்பிளையை இப்பிடி விட்டிட்டு வந்திருக்கிறியே! இத்தினை வயது வந்தும் உனக்கு அறிவில்லையே! நீ ஒரு மனிசனே உனக்கு மனச்சாட்சி வெக்கம் மானம் ஒண்டுமில்லையே!

கேட்டார்கள். என்னுடைய மனத்தைத் துவம்சம் செய்தார்கள். அப்படி என்னுடைய மனைவி என்னதான் தவறு செய்துவிட்டாள்! அவள் என்மீது எத்தனை அன்பு பாராட்டியவள்.

வயது முதிர்ச்சியின் காரணமாக ஏதாவது முரண்பட்டுக் கொள்வது சாதாரண விடயமல்லவா! அதைப் போய்த் தகராறாக்கிப் பெரிய விவகாரமாக்கியது நான்தானே. படுக்க இடமின்றி வீதியிலும் கடைத் தாழ்வாரங்களிலும் படுத்துப் பிச்சைக்காரனைவிட மோசமாகச் சோற்றுக்காக அலைந் துலைந்து வெட்கம் மானமில்லாமல் இப்படி வாழத்தான் வேண்டுமா! மனச்சாட்சி உறுத்த என் வீடு நோக்கி மனைவியிடம் செல்லத் தொடங்கின எனது கால்கள். மீண்டும் குடும்ப வாழ்க்கையில் இணைந்து கொள்வதற்காக.

* * *

10

## காகிதக் கப்பல்கள்

குளிப்பதற்காகக் கிணற்றடிக்குப் போன ஆரணி வந்த வேலையை மறந்து கிணற்றுக் கட்டிலே இலேசாக அமர்ந்திருந்து எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தாள். இப்போது இரண்டொரு வருடங்களாக அவளிப்படித்தான். எதிலுமே பற்றற்ற நிலையில் எதையோ பறிகொடுத்தவள்போல சதா சிந்தனையிலே மிதந்து கொண்டு சித்தன் போக்குச் சிவன் போக்காகவே யிருந்தாள். அவளைப் பார்ப்பவர்களின் மனங்களில் அவள் ஒரு பரிதாபத்துக்குரியவளாகவே காணப்பட்டாள்.

"ஏனடி பிள்ளை! உதிலையிருந்து யோசிச்சுக் கொண்டிருக்கிறாய்! நேரத்துக்குக் குளிச்சுட்டுப் போய்ச் சாப்பிடனெடி!"

தாய் செல்வமலர் எத்துணை இலகுவாகச் சொல்லிவிட்டுப் போகின்றாள். ஆனால் ஆரணியின் வாழ்க்கையில் புகுந்து கொண்ட தவிப்புக்கள், சஞ்சலங்கள், மனக் குமுறல்களை அவள் யாரிடம் சொல்லி ஆறுதல்பட்டுக் கொள்ள! ஒரு பெண்ணின் உணர்வுகளை ஒரு பெண்ணினால்தான் உணர முடியுமென்பார்கள். ஆனால் ஒரு பெண்ணாக மட்டுமல்லாது பெற்றெடுத்த தாயாகவுமிருக்கும் செல்வமலரால் மகளின் சோகமான நிலைமைகளைப் புரிந்து கொள்ள முடியாமலிருப்பது போன்றிருப்பது விந்தையிலும் விந்தையாகவே பட்டது.

தாய் மட்டுமா! ஏன்! தந்தை மனோகரனும் கூட ஒரு படித்த முட்டாளாகவும் நினைத்ததைச் சாதிக்க விழையும் அவசரக் குடுக்கையாகவுமிருந்தபடியால்தான் இன்று ஆரணி

இவ்வாறானதொரு நரக வாழ்க்கைக்காளாகியிருந்தாள். பெற்ற பிள்ளையைச் சிறப்பாக வாழவைக்க வேண்டிய பெற்றோர்களே அவளின் மகிழ்ச்சியான எதிர்காலத்தைச் சிதைத்துச் சின்னா பின்னப்படுத்தியிருப்பதை நினைக்க நினைக்க அவளுக்கு இனியும் வாழவே பிடிக்கவில்லை. வாழ்க்கையே சூன்யமாகிவிட்டது.

கிணற்றுக் கட்டிலமர்ந்திருந்த ஆரணிக்குத் தாயினுடைய வார்த்தைகளெதுவும் செவிகளில் ஏறவில்லை. இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்பு அவள் வாழ்க்கையில் அனுபவித்த அந்தப் பசுமையான சம்பவங்களெல்லாம் இன்று வற்றிக் காய்ந்து கீலங்கீலங்களாகச் சிதறிக் கிடந்தன.

அன்றைய நாள்களின் நினைவுகள் அத்தனையும் கல்லெறிபட்ட தேன் கூட்டிலிருந்து கலைந்தலையும் தேனீக்களாக வந்து அடிக்கடி அவளை அலைத்துக்கொண்டிருக்கும். அன்றைய இன்பமான அந்த வாழ்க்கை இன்று திக்குச் திசை தெரியாது உருமாறிச் சின்னாபின்னப்பட்டுவிட்டதை அவளால் சீரணிக்க முடியவில்லை.

காண்டீபன்! கட்டுடலும் காருண்ய சிந்தையும் கண்ணியமான பழக்கவழக்கங்களையும் கொண்ட ஒரு இருபத்தைந்து வயது வாலிபன். எப்படியோ ஆரணியின் மீது காதல் கொண்டுவிட்டான். ஒருதலைக் காதல் அல்ல. ஆரணியின் பூரண விருப்புடனே அவர்களின் காதல் ஒரு தெளிந்த நீரோடையாக ஓடிக்கொண்டிருந்தது. இரு வீட்டாருக்கும் விடயம் தெரிய வந்ததும் யாருமே இவர்களின் காதலுக்குச் சிகப்புக் கொடி காட்டவில்லை. அதற்காகப் பச்சை கொடி காட்டியிருந்தார்களென்றும் அர்த்தப்பட முடியாது. இரண்டுக்கு மிடைப்பட்ட மஞ்சள் சமிக்ஞையில் ஏதோ ஒருவிதமாக அவர்களின் காதல் வண்டி ஓடிக்கொண்டிருந்தது.

செக்கச் செவேலென்ற மேனி. சுத்தமாகச் சவரம்

செய்யப்பட்டிருந்த பளிச்சென்ற முகம். ஆறடிக்குக் குறையாத ஆஜானுபாகுவான தோற்றம். இத்தனைக்கும் அதிபதிதான் காண்டீபன். ஆரணியை ஒன்றும் அழகியென்று வர்ணிக்க முடியாது. குட்டையான உயரம், கறுப்பு நிற மேனியில் ஒரு சுமார் ரகமாகவேயிருந்தாள். உண்மையைச் சொல்லப்போனால் ஒப்பீட்டளவில் காண்டீபனும் ஆரணியும் இந்து சமுத்திரமும், இரணைமடுக் குளத்தையுமே ஒத்திருந்தனர். இருந்தும் எவ்விதமான வேற்றுமைகளுமின்றி மிக மகிழ்ச்சியுடன் காதலெனும் சமுத்திரத்தில் மூழ்கி முத்துக்குளித்தனர். உண்மையான காதலுக்கு அழகின்மையென்பது ஒரு பொருட்டல்ல. உள்ளங்களிரண்டும் ஒன்றையொன்று உளமார நேசித்துச் சங்கமித்துக் கொண்டால் அதுவே போதும்.

ஆரணியின் காதல் கிடைத்து இரண்டொரு மாதங்களில் காண்டீபனுக்கு ஆசிரியத் தொழிலும் கிடைத்துவிட்டதில் இருவருக்குமே இரட்டிப்பு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி. எல்லாமே ஆரணியின் அதிஷ்டம்தான் என நினைத்துக் கொண்ட காண்டீபனுக்குக் கூடவே ஒரு நம்பிக்கையும் பிறந்துவிட்டது. இனிமேல் தங்களுடைய காதலுக்கு எவ்விதமான இடையூறுகளு மேற்படாது என்பதுதானது.

“இந்தக் காலத்திலை வாத்தியார் வேலையும் ஒரு வேலையே காணும். ஒரு வாத்தியாருக்கு என்ன சம்பளம் வரப்போகுது! அதை வைச்சு சந்தோஷமாய் குடும்பம் நடத்தேலுமே! பட்டும் கெட்டும் எங்கையேன் ஒரு வெளிநாட்டுக்கார மாப்பிளையைப் பிடிச்சுப் போட்டீரெண்டால் உம்மடை பெட்டையின்ரை வாழ்க்கை ஆகாயமளவுக்கு உயர்ந்து போயிடும். அது மட்டுமில்லை உங்கடை பிள்ளையோடை சேர்ந்து உங்கடை குடும்ப கௌரவம் செல்வாக்கெல்லாம் ஓகோ எண்டு மேலை போயிடும். விரும்பினாற் சொல்லும். ஒரு வாத்தியாரைக் கட்டிப் போட்டுக் காலமெல்லாம் உம்மடை பிள்ளை கண்கலங்கி வாழுறதுதான் விருப்பமெண்டால் உம்மடை விருப்பத்துக்கு நான்

குறுக்கை நிக்கயில்லை. அப்பிடியில்லை வெளிநாட்டு மாப்பிளையைச் செய்ய விரும்பினால் இப்பவே சொல்லும். கைவசம் ஒரு வெளிநாட்டு மாப்பிளையிருக்குது. இப்பவே செய்து வைக்கலாம். யோசிச்சுச் சொல்லும்".

புறோக்கர் புண்ணியமூர்த்தியினால் நன்றாக மூளைச் சலவை செய்யப்பட்டிருந்தார் மனோகரன். அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். இங்கே மனோகரன் என்னும் அம்மி நகர்ந்துவிட்டது. வசதியான வாழ்க்கைக்கும், ஆடம்பரங்களுக்கும் கௌரவத்திற்கும் யாருக்குத்தான் ஆசை வராமல் போகும்! புறோக்கர் புண்ணியமூர்த்தி என்ன இலேசுப்பட்ட தரகனா! எத்தனை பேரைத் தனது வழிக்கெடுத்துக் கல்யாணம் செய்து வைத்து இலட்சம் இலட்சமாகப் பணம் சம்பாதித்திருக் கின்றான். இங்கே மட்டும் விடுவானா!

மனோகரன், ஆரணியிடம் விடயத்தை நாசூக்காகச் சொல்லிப் பார்த்தார். அவளோ குய்யோ முறையோ என்று கத்திக் குழறி அடம்பிடித்தாள். முடித்தால் காண்டீபன். இல்லையெனில் முடிப்பேன் வாழ்க்கையை என்று முடிவாகச் சொன்னாள். நாகமாகப் படம் விரித்துச் சன்னதமாடினாள்.

பெற்ற மகளை அடக்கும் வழி அப்பனுக்குத் தெரியாததா! சாமபேததான தண்டங்களத்தனையையும் அடுக்கடுக்காகப் பிரயோகித்தார். பொதுவாகப் பெண்களைப் பேதைகளென்று சொல்வது இதற்காகத்தானோ என்று எண்ணும் வகையில் எத்துணை உறுதியாகவிருந்தவள் எப்படியோ அப்பனின் வழிக்கு இறங்கித்தான் வந்துவிட்டாள். வரவேண்டித்தானிருந்தது. பாவம் அவள் ஒரு கன்னிப்பெண். பெற்றோரின் அனுசரணையில்லாது காண்டீபனுடன் ஓடிப்போய்க் கள்ளத் தாலிகட்டி.... சே! இவையொன்றும் உருப்படியாகத் தெரியவில்லை. காண்டீபனுடைய ஆசிரியத் தொழிலுக்கு இந்தக் கள்ளத்தாலி இரகசியத் திருமணம் போன்ற சங்கதிகள் கிஞ்சித்தும்

ஒத்துவராது. எந்த வழிகளும் சாத்தியப்படவில்லை. ஆரணி யென்னும் ஆடிய நாகம் படத்தைச் சுருக்கிக்கொண்டது. தனித்து நின்று இனியும் போராடிக் குடும்பத்திலே வேண்டாத விபரீதங்களை ஏற்படுத்தி ஊரார் வாய்களுக்குத் தீனிபோட்டு உசுப்பேற்றாது நல்ல பிள்ளையாக அடங்கிக் கொண்டாள் ஆரணி. வேறு வழிகளொன்றும் தெரியவில்லை.

ஆரணியின் ஊரிலிருந்து இருபது கிலோ மீற்றர் தூரத்தில்தான் ராகுலனின் வீடு. இவன் தானிப்போது ஆரணியின் சங்குக் கழுத்தில் உரிமையுடன் மாங்கல்யமேற்றி மணமகனாகிக் கொண்டவன். இருபது வருடங்களாகப் பிரான்ஸ் நாட்டில் சம்பாதித்துக் கொண்டிருந்தவன். இப்போது மிக அவசரமாக வந்து அவசரமாகத் தாலியை ஏற்றி அதே அவசரத்தில் மீண்டும் பிரான்சுக்குப் பறந்துவிட்டான். எல்லாமே அவசரங்களிலேயே முடிந்துகொண்டன. பத்து நாள் தாம்பத்தியம். அதுவும் மிக அவசரத்தில் முடிந்த ஒன்றுதான். இது யானைப் பசிக்குச் சோளன் பொரியாகவிருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படுவதற் கதிகமாக ஒன்றுமில்லை. இன்னும் ஆறுமாதங்களிற்குள் ஆரணியைத் தன்னுடன் பிரான்சுக்கு அழைத்து விடுவான் ராகுலன். அதற்குப் பின்பு அவர்கள் வட்டியும் முதலுமாக மனம்போல மகிழ்ச்சியாக வாழத்தானே போகின்றார்கள்.

“எடி ஆரணி! ஒண்டுக்கும் யோசிக்காதை! கடவுளே யெண்டு உனக்கு ஒரு நல்ல புளியங்கொப்புத்தான் கிடைச்சிருக்குது. நீ நினைச்சது மாதிரி காண்டீபன் வாத்தியாரைக் கலியாணம் முடிச்சிருந்தால் எவ்வளவு கஷ்டப்பட வேண்டி வந்திருக்கும்! இனி மட்டும் பிரச்சினையில்லை. வெளிநாட்டு மாப்பிளை. லட்சம் லட்சமாய் உழைக்கிறார். உன்னையும் கெதியிலை கூப்பிடுவர்தானே! பிறகென்ன! எவ்வளவு சந்தோஷமாய் வாழலாம். இனிமேல் காலம் ஊரிலை உத்தியோகம் பாக்கிறவையை ஆர்முடிக்கப் போறாளவை! வெளிநாட்டு மாப்பிளையெண்டால் அவங்களுக்குக் கியாதிதான்.

எல்லாருக்கும் உன்னைப் போலை அதிர்ஷ்டம் கிடைக்குமோ"

வாய்க்கொருதடவை வெளிநாட்டு மாப்பிள்ளையின் புகழ்பாடி மகிழ்ந்து கொண்டிருப்பார் மனோகரன்.

"என்னங்கோ! நான் கதைக்கிறதொண்டும் விளங்க வில்லையோ! அப்ப கவரேஜ் பிரச்சினையாக்கும். நான் பிறகு எடுக்கிறன் வையுங்கோ!"

அப்பாவித்தனமாகச் சொல்வாள் ஆரணி. இது ஆரம்ப காலத்தில். எப்போது ரெலிபோன் எடுத்தாலும் அவள் பேசுவதொன்றும் தெளிவில்லையென்று போனை எரிச்சலுடன் வைத்து விடுகின்றான் ராகுலன்.

"என்னங்கோ! ஆறு மாதத்துக்கை என்னைக் கூப்பிடுறன் எண்டியள். ஒரு வருஷத்துக்கு மேலையாய்ப் போச்சுது. ஏன் இன்னும் கூப்பிடயில்லை"

"ஆரணி! நான் இஞ்சை சும்மாயிருக்கயில்லை. உம்மடை விசாவுக்கு 'ற்றை' பண்ணிக்கொண்டதானிருக்கிறன். சரி பாப்பம் வையும் பிறகு எடுக்கிறன்."

ராகுலன் மறுமுனையில் பேச்சைத் துண்டித்துவிட இங்கே ஆரணியின் நெஞ்சம் ஏமாற்றத்தினால் துவண்டு கொண்டிருந்தது.

பக்கத்து வீட்டுப் பாமாக்காவும் லண்டனில் வசிக்கும் அவளுடைய கணவன் பரந்தாமனும் தொலைபேசியில் உரையாடுவதை அடிக்கடி ஆரணியும் அவதானித்திருக்கிறாள்.

"என்னடா பாமாக்குட்டி! எப்படியிருக்கிறீர்! சாப்பிட்டாச்சே! சந்தோஷமாயிருங்கோ! நான் என்ன செய்யுறது! உம்மைப் பிரிஞ்சிருக்கிறது எவ்வளவு கவலையாயிருக்குது என்ரை பாமாக்குட்டி."

தினமும் கணவனும் பாமாவும் செல்லமாகக் குழைந்து பேசும் இவர்களைப் பார்க்க ஆரணிக்கு ஒரு வகையில் பொறாமையாகக் கூட இருக்கும். பரந்தாமனின் அழைப்பில் பாமா லண்டனுக்குச் சென்று ஒரு வருடம் அவனுடன் வாழ்ந்தவள்தான். இருந்தும் இந்தப் பாழாய்ப்போன லண்டன் குளிரை அவளால் தாங்க முடியவில்லை. ஓடோடி வந்துவிட்டாள் ஊருக்கு. வரும்போது சும்மா வரவில்லை. துஷியென்னும் ஓர் ஆண் குழந்தையையும் பெற்றுக்கொண்டுதான் வந்தாள். இப்போது பாமாவுக்கு ஒரேயொரு குறை. கணவன் கூடவே இல்லாதது. இருந்தும் தினமும் அவனுடன் அன்பாக ஆனந்தமாகத் தொலைபேசியில் பேசும்போது அந்தக் கவலைகளை மறந்துவிடுவாள்.

ஆரணியுமிப்படித்தான் நம்பியிருந்தாள். தன்னுடைய கணவன் ராகுலனும் தன்னுடன் இப்படி அன்பாகக் கெஞ்சலாகக் குழைந்து குழைந்து பேசுவான் என்று. ஆனால் அவனோ ஆரணியின் அழைப்புக்களைக் கணக்கெடுப்பதாயில்லை. அபூர்வமாக ரெலிபோனைத் தூக்கிவிட்டாலும், அன்பாக அக்கறையாக ஒரு வார்த்தை பேசுவது கிடையாது. வெடுசுடு என்று ஏதாவதை மிகச் சுருக்கமாகப் பேசிவிட்டுப் பொத்தென வைத்துவிடுவான் தொலைபேசியை.

"மெய்யே! வருஷம் ஒண்டரைக்கு மேலையாய் போச்சுது. என்ன! இன்னும் விசா சரிவரயில்லையே."

அழாக்குறையாகக் கேட்டாள் ஆரணி. "இஞ்சையென்ன! என்ரை சித்தப்பன் பெரியப்பனே இருக்கிறான் கேட்ட உடனை விசாத்தாறதுக்கு. நானிஞ்சை வேலையிலை நிக்கிறன். பிறகு எடுக்கிறன் வையும்."

புடையன் பாம்பாகச் சீறிவிட்டுத் தொடர்பைத் துண்டித்து விடுவான்.

ஆரணியால் இனியும் பொறுக்க முடியவில்லை. நடப்பது நடக்கட்டுமென மனத்தில் துணிவை வரவழைத்துக் கொண்டு அடிக்கடி அழைப்பினை விடுத்துக் கொண்டிருந்தாள். வேறு என்னதான் செய்ய முடியும் அவளால்!

"ஆரணி! கதையைக் கேளும். இஞ்சையிப்ப முந்தின மாதிரியில்லை. சட்டங்களையெல்லாம் மாத்திப் போட்டாங்கள். விசா எடுக்கிறது சரியான கஷ்டமாயிருக்கு. அது தான், நானும் உங்கையே வந்து ஊரிலை ஒரு சொந்தத் தொழிலைச் செய்து கொண்டிருக்கலாமெண்டு திட்டம் போட்டிட்டன். இனியெண்டாலும் சும்மா ரெலிபோன் எடுத்து ஆய்க்கினை தராதையும். கெதியிலை நானுங்கை வந்திடுவன்தானே சரியே!"

ஆரணியின் வாயை மூடுவதற்கு அவன் கொடுத்த கடைசி மருந்துதானிது.

"ஆரப்பா உந்த லூஸ்! என்னவாம்!"

ஏனோ பதற்றத்தில் ரெலிபோனை அணைக்க மறந்து விட்டான் ராகுலனின் தொலைபேசியிலிருந்து அங்கேயிருந்து கேட்ட பெண் குரல்தானிது. அவள் வேறு யாருமல்ல ராகுலனின் சட்டபூர்வமான மனைவி காயத்திரி. பிரான்சில் ஐந்து வருடங்களுக்கு முன்பு திருமணமாகிக் கொண்டவள். இரண்டு குழந்தைகளுக்கும் தாயாகிவிட்டவள்.

ஆரணிக்கு இப்போது எல்லாம் புரிந்துவிட்டன. ராகுலன் அங்கே ஒரு மனைவியுடன் வாழ்ந்துகொண்டு இங்கே வந்து பெற்றோரைத் திருப்திப்படுத்துவதற்காக ஆரணியை அவசரமாகக் கைப்பிடித்து அவளிடமிருந்து சீதனமாக இருபது லட்சங்களையும் கைப்பற்றிப் பெற்றோரிடம் கொடுத்துவிட்டு அவன் பறந்து போனதெல்லாமே நன்றாகப் புரிகின்றது ஆரணிக்கு.

கையில் கிடந்ததைக் காற்றோடு பறக்க விட்டு காற்றில் பறந்து வந்த குப்பைக் காகிதத்தில் கப்பல் செய்து பயணிக்க ஆசைப்பட்டது. யார் செய்த குற்றம்! அவளா! அவளின் பெற்றோரா! விதியா! பதிலைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை, அவளால்.

இப்போதும் கிணற்றுக் கட்டினிலே சிலையாக அமர்ந்திருந் தாள் ஆரணி. சவுக்கடிபட்ட குதிரையின் வேகத்தில் ஓடிக் வெளிநாட்டுக் கப்பல்களென்று அவைகளிலே பயணிக்க ஆசைப்பட்டு இறுதியில் அவைகள் வெறும் காகிதக் கப்பல்கள் தான் என்பதை ஆரணி மட்டும்தான் உணர்ந்துகொண்டவளல்ல. நம்மூர்களில் ஏற்கனவே எத்தனையோ காகிதக் கப்பல்களை நம்பி ஏமாந்தவர்களு மிருக்கின்றார்கள். இன்னும் ஆரணியைப் போல எத்தனை அபலைகள் இதுபோன்ற காகிதக் கப்பல்களால் கவரப்பட்டுக் கண்ணீர் வடிக்கப்போகின்றார்களோ.

நினைத்த ஆரணி தன்னையுமறியாது நீண்ட பெரு மூச்சொன்றைப் பிரசவித்தபடி கிணற்றுக் கட்டிலிருந்து மெல்ல எழுந்தாள். குளிப்பதற்கல்ல. கிணற்றில் குதிப்பதற்கு.

* * *

## 11

# நம்பிக்கைகள்

குழி விழுந்த கண்கள். நரை விழுந்து பஞ்சாகிப் பறந்து கொண்டிருக்கும் தலைமுடி, வற்றி வாடிப்போன கன்னங்கள். தளர்ந்து தள்ளாடுகின்ற சோர்வு கொண்ட நடை. சிரிப்பைத் தொலைத்த முகம். இவைகள் எல்லாவற்றுக்கும் அதிபதிதான் பாறுப்பிள்ளை அக்கா.

அவளுடைய சொந்தப் பெயர் இதுவல்ல. பார்வதிப் பிள்ளையென்று அவளின் பெற்றோர் அழகாகப் பெயர் சூட்டியிருந்தும் ஏனோ பாறுப்பிள்ளையென்று அவளின் பெயர் மருவிவிட்டது.

வன்னி! இது பண்டார வன்னியன் ஆண்ட சுதந்திரபூமி. அன்னியரை எதிர்த்த வன்னியர்கள் வாழ்வாங்கு வாழ்ந்த மண். ஆறுகளும் குளங்களும் வஞ்சனையின்றி தண்ணீரைத் தந்து பசுமையைப் பரப்பிய மண். காலபோகம். சிறுபோகமென்று இரண்டு வகையான விளைச்சல்களைக் கொடுத்து கோவணக் குண்டியனையும் குபேரனாக்கியவூர். மீன், இறைச்சியென்று எதுவித குறைவுகளுமின்றி மிக நிறைவாகச் செழித்தோங்கிய வன்னி. வந்தாரை வாழ வைத்த வஞ்சனையற்ற தாய்மையுள்ளம் கொண்ட பூமி. காடுகள் செடிகொடிகள் என்று அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்டது வன்னிப் பெருநிலப்பரப்பு. பெருநிலப்பரப்பு என்ற விஷேட பெயரினைக் கொண்ட ஒரேபகுதி இந்த வன்னி மண் ஒன்றேதான்.

செல்வநாயகம் மாஸ்டர். இவர் வேறு யாருமல்ல. பாறுப்பிள்ளை அக்காவின் பாசமிகு பத்தா. யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். புதுக்குடியிருப்புக்கு ஆசிரிய சேவை நிமித்தம் வந்தவர். பாறுப்பிள்ளை அக்காவைத் திருமணம்

முடிக்க வேண்டுமென்று அந்த ஆண்டவன் எழுதியிருந்தாரோ என்னவோ! எப்படியோ: செல்வநாயகமும் பாறுப்பிள்ளையும் சந்தித்துக் கொண்டனர். கண்கள் கலந்தன. காதலாய் ஆகிட இருவருமே சதிபதிகளாகிக் கொண்டனர். ஊரறிய உலகமறிய ஆன்றோர் சாட்சியில் அம்மி மிதித்து அருந்ததி பார்த்து ஆயிரம் காலத்துப் பயிராம் அந்தத் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டனர். ஆனால் என்ன துரதிர்ஷ்டமோ! செல்வநாயகமென்னும் அந்தச் செல்வத்தை அனுபவித்துச் சதிபதிகளாக நீண்ட காலம் வாழப் பாறுப்பிள்ளைக்கு விதி அனுமதி கொடுக்கவில்லை. திடுதிப்பென்று வந்த இரண்டு நாள் காய்ச்சலில் பொசுக்கென்று போய்விட்டார் செல்வநாயகம். அவருக்கென்று மிஞ்சியது அவருடைய வாரிசாகச் சரவணன் மட்டுமே.

பாறுப்பிள்ளை பதறினாள், கதறினாள், தணலிடைப் புழுவாகத் துடித்தாள், துவண்டாள், எத்தனை நாள்களுக்குத்தான் இப்படி ஆர்ப்பரிக்க முயும். கட்டிய கணவனுடன் உடன் கட்டை ஏறுவதற்கு அவளென்ன அந்தக் காலத்தைய கண்ணகியா சீதையா! சாமானியமானவள்தானே!

சரவணன் என்றொரு வாரிசு அவளின் அரவணைப்புக்கும், அன்புக்குமாக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்க, பாறுப்பிள்ளை யினால் என்னதான் செய்ய முடியும்? வாழத்தான் வேண்டும். அந்த ஐந்து வயதுப் பிஞ்சுப் பாலகனை வளர்த்தாளாக்க வேண்டும். அதனுடைய நிழலிலே நிம்மதியாக வாழ வேண்டும். சராசரியாகவே ஆசையை வளர்த்துக் கொண்டாள்.

ஆண்டொன்று போக வயதொன்று போகும். இது இயற்கையின் நியதி. சரவணனின் வயதுமட்டும் அப்படியே நின்று விடுமா? ஓடியோடி அப்படியே பதினெட்டில் போய் காத்திரமாக நின்று கொண்டது. தந்தையொடு கல்விபோம் என்று அந்த ஔவை சொன்னது என்ன வெறும் வார்த்தையா! சரவணனால் படிக்க முடியவில்லை. பாறுப்பிள்ளையால் அவனைப் பலவந்தப்படுத்திப் படிக்க வைக்கவும் முடியவில்லை.

திணவெடுக்கும் தோள்கள், தீட்சண்யமான கண்கள், பூரண சந்திர வதனம் என்று இராமபிரானை வர்ணனை செய்த கம்பர் இன்று உயிரோடிருந்திருந்தால் நிச்சயமாகச் சரவணனை நோக்கியும் இப்படிப் பாடியிருப்பார்.

சரவணன் பதினெட்டு வயதிலே பளிச்சென்றிருந்தான். அவனழகைப் பார்க்கப் பதினாறு கண்கள் வேண்டும். அரும்பு மீசை, குறும்பு மொழிகள், தன்னைவிட அன்னையை நேசித்த அரும் பண்பு, அந்த ஊரிலேயே ஒரு வித்தியாசமான, ஓர் அவதாரமாகவே அனைவரின் பார்வைகளிலும் பதிவு செய்யப்பட்டான் சரவணன்.

வீட்டுப் படலையை நோக்கிப் பாறுப்பிள்ளையின் நாய்க் கடுவன் வெகு ஆக்ரோஷமாகக் குரைத்துக் கொண்டிருந்தது. "எட வீமா! வாடா இஞ்சாலை! சும்மாயிரு கொஞ்சம்!" வீட்டு நாயைக் கட்டுப்படுத்த அவளும் படாதபாடுபட்டாள்.

"உவங்கள் கிளிநொச்சிக்கு வந்திட்டாங்களாம்" இல்லையப்பா பூநகரியை விட்டு ஓர் அங்குலம் கூடி நகரயில்லை". அங்கையிருந்து ஒரு கவடு தூக்கி வைக்க அவையாலை ஏலுமோ!" "எங்கடை பெடியங்களென்ன விட்டிடுவாங்களே! முந்தியும் உப்பிடித்தான் பெரிய எடுப்பிலை வந்தவை. எங்கடை பிள்ளையள் அடிச்ச அடியிலை பாத்துப் பாத்து ஓடினவை எல்லே!"

பாறுப்பிள்ளையின் வீட்டுப் படலைக்குள் பேச்சுக் குரல்கள். பக்கத்து வீட்டுப் பரமலிங்கத்தாரும் செவிட்டுச் செல்லையரும் பரபரப்பாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர்களின் உரையாடல் களில் எத்தனை நம்பிக்கைகள் பொதிந்திருந்தன. எல்லாமே நம்பிக்கை!

பொழுது சாயும் மம்மல் வேளை, வெடிச்சத்தங்களும், மின்னல் வெளிச்சங்களும் வான வீதியூடாக உலாவந்து

எல்லோரின் செவிகளையும் நிறைத்துக் கொண்டிருந்தன. அப்பாவித்தனமாக அவைகளை மின்னல், முழக்கங்களென்று நம்பியிருந்த புதுக்குடியிருப்பு வாசிகளுக்கு இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக புரியத் தொடங்கியது. பராவெளிச்சமும் ஷெல்களும்தான் அவையென. விஸ்வமடு, உடையார்கட்டுப் பகுதிகளிலும் மெல்ல மெல்லப் பயங்கர வெடியோசைகள் ஒலிக்கத் தொடங்கப் புதுக்குடியிருப்பு வாழ் மக்களின் குலைகளும் நடுங்கத் தொடங்கின. போதாதற்கு கிளிநொச்சி, பரந்தன், முரசுமோட்டையில் தங்கியிருந்த மக்கள் அனைவரும் ஆற்றுநீராகப் புதுக்குடியிருப்பை நோக்கிப் படையெடுக்கத் தொடங்கினர். பாறுப்பிள்ளைக்கும் விடயம் புரிந்துவிட்டது.

“சே! பொய்யெண்டாற் பாருங்கோ! எங்கடை பக்கம் ஆமியை வரவிடமாட்டாங்கள். எங்கடை பெடியள் பதுங்கிப் பாய்வாங்கள்” நம்பிக்கைகள் வார்த்தைகளாயின.

அந்த நம்பிக்கைகள் அதிக நேரம் நின்று பிடிக்கவில்லை. காரணம் ஷெல்லடியின் வேகமும் அதன் தாக்கங்களும் மெல்ல மெல்ல அண்மைப் பிரதேசங்களிலும் ஊடுருவத் தொடங்கின.

பாறுப்பிள்ளை ஓடோடிச் சென்று படுக்கையிலிருந்து சரவணனை வாஞ்சையுடன் தொட்டுத் தடவி வருடிக்கொடுத்தாள். “கடவுளே இஞ்சை ஆமி வந்தால் என்ரை ஒரேயொரு ஆம்பிளைக் குஞ்சுக்கு என்ன ஆபத்து வருமோ!”

பாறுப்பிள்ளை பயந்து நடுங்கினாள். அவளுடைய சந்தேகம் பொய்க்கவில்லை. அழுகுரல்கள், கூக்குரல்களுடன் ஏராளமான மக்கள் பயப் பீதியுடன் புதுக்குடியிருப்பை நோக்கி வந்து கொண்டிருக்க அவர்களை முந்தி ஷெல் அடிகளின் கர்ண கொடூரமான ஓசைகள் காதுகளைச் செவிடாக்க எங்கும் சாவின் ஒலி!

இப்போது நின்ற வெள்ளத்தை வந்த வெள்ளம் கொண்டு போன கதையாகப் புதுக்குடியிருப்பு வாழ் மக்களும் அவர்களுடன்

இணைந்து கொண்டு புதுமாத்தளன், முள்ளி வாய்க்கால் என்று கால்கள் போன திசைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களுடன் பாறுப்பிள்ளையும் மகன் சரவணனும் கலந்தனர். இப்போது நிலைமை முன்னையதைவிட சற்றுத் தீவிரமடைந்து கொண்டது.

கடல்போன்றதொரு வானர சேனையைக் கொண்டு இராமன் இலங்காபுரியைச் சூழ்ந்து நின்று இராவணனைத் தாக்குவதற்குத் தயாரானது போல ஏராளமான படையினர் புலியழிப்புக்கு ஆயத்தமான வகையில் பரவி நின்றனர். அழிக்க வேண்டியது புலிகளைத்தான். புலிகள் சிக்காமல் விட்டால் அங்கிருக்கும் பூனைகளையாவது வதம் செய்ய வேண்டும். இல்லையெனில் அவர்களின் வீரத்துக்கு இழுக்காகிவிடும் அல்லவா!

வானத்திலே இராட்சத இயந்திரங்களின் உறுமல்கள். அது இராமாயண காலத்துப் புஷ்பக விமானமல்ல. புக்காராக்கள், கிபிர்கள், அன்ரனோக்கள்.

இப்பொழுது வந்த வெள்ளம் நின்ற வெள்ளம் எல்லாமே முள்ளி வாய்க்கால் என்னும் இறுதிக் கடலில் சங்கமமாகிக் கொண்டன.

சரவணன் இயல்பாகவே ஒரு பயந்தாங்கொள்ளி. தாயின் முந்தானையைப் பற்றியபடி ஏக்கத்துடன் பரிதாபமாக நின்றான்.

எங்கேயிருந்து வந்தார்களோ! ஏராளமான படையினர்கள் பொதுமக்கள் பலரை அழைத்து வந்து கொண்டிருந்தனர்.

"தம்பி வாங்க! பயம் வாணாம். விசாரிச்சுட்டு இப்ப விட்டிடுவம். அம்மா! பயம் வாணாம்." சொல்லியபடி வந்தான் ஒரு படை அதிகாரி. அவனுடைய சீருடையின் தோள் பகுதியில் மூன்று நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. நிச்சயமாக அவன் ஓர் உயர்நிலை அதிகாரியே. வாட்ட சாட்டமாகச்

செக்கச் செவேலென்று அழகாகவிருந்தான். புன்னகை மாறாத முகத்தில் குழைவாகப் பேசினான்.

"உவனைப் பாக்க எங்கடை நல்லாம்பிக் குஞ்சியப்பற்றை சிறிப்பெடியன் மாதிரிக் கிடக்கு. அவன்ரை முகத்தைப் பாக்க நல்லவன் மாதிரியிருக்கு. சரவணா! நீ போட்டு வாமோனை, பயப்புடாதை, அவை விசாரிச்சுப் போட்டு விடுவினம். ஒரு பிரச்சினையும் வராது." மிகுந்த நம்பிக்கையுடன் மகனை அனுப்பி வைத்தாள். அவள் மட்டுமல்ல அங்கிருந்த அனைவருமே படையினருடன் போய்க்கொண்டிருந்தனர். விசாரித்து விட்டு இரண்டொரு மணித்தியாலங்களுக்குள் திரும்பி வரலாம். இது ஒரு நம்பிக்கை.

"பொடியங்கள் எங்களைக் கைவிடாங்கள்" இது அன்றைய நம்பிக்கை. அது நலிந்துவிட்டது. "எங்கடை பிள்ளையை விசாரிச்சுப் போட்டுத் திருப்பியனுப்புவினம்." இதுவும் ஒரு நம்பிக்கை. இதுவும் தகர்ந்து விட்டது.

கடைசிப் போரின்போது காணாமற் போனவர்கள் கொல்லப்பட்டவர்களை யாரும் நினைவு கூர முடியாது என்பது மிகக் கண்டிப்பான ஒரு சட்டமாயிருந்தது அன்றைய ஆட்சியில்.

காணாமற்போனவர்கள். படுகொலை செய்யப்பட்ட வர்களை எவரும் நினைவு கூரலாம். எதுவித தடைகளுமில்லை. நினைவேந்தல்களை நடத்தலாம். இது இன்றைய நல்லாட்சியின் உத்தரவாதம். இதையும் நம்பத்தான் வேண்டும்.

பாறுப்பிளையைப் போன்றோருக்கும் இது மூன்றாவது நம்பிக்கை. நம்பிக்கைதானே வாழ்க்கை நம்பித்தான் ஆகவேண்டும். வேறு வழி.....

* * *

# 12

## பயாக்கா

பார்ப்போரை வியக்கவைக்கும் வகையில் வினோதமான வடிவமைப்பினைக் கொண்டிருந்தது அந்தச் சுவர்க்கடிகாரம். தனஞ்சயனின் தாய் மாமன் பிரதாப் சுவிஸ்சிலிருந்து அவனுக்கென்று அனுப்பியது. புத்தம் புதிய மேசை மின் விசிறி. அது தந்தையார் அன்பாக வாங்கிக் கொடுத்தது. படிப்பதற்கென்று விசாலமான இரண்டு லாச்சிகளைக் கொண்ட மேசை. அதுவும் போதாதென்று சுழல் நாற்காலி வேறு! இத்தனை சௌகரியங்களைத் தனக்குரித்தாக்கிக் கொண்டவன்தான் தனஞ்சயன்.

கனகலிங்கம் மாஸ்ரரின் மூன்றாவது மகன் தானவன். அண்ணன்மார் இருவரும் பல்கலையில் மருத்துவத்துறையில் கற்றுக்கொண்டிருக்கின்றனர். தங்கைகளிருவர். அவர்கள் பாடசாலைக் கல்வியில் தங்களை வளர்த்துக் கொண்டிருக்கின்றனர். அடுத்த ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் தோற்ற இருப்பவன்தான் தனஞ்சயன். அவனை ஊக்குவிப்பதற்காகவே இத்தனை வசதிகளையும் வாய்ப்புக்களையும் அள்ளி அள்ளிக் கொடுத்தனர் பெற்றோர்.

ஏதேதோ பாடப்புத்தகங்கள் மேசை மீது பரவிக் கிடக்கின்றன. விதம்விதமான பென்சில், பேனாக்கள், அடிமட்டம், ரிப்பெக்ஸ் என்னும் எழுத்து அழிக்கும் பேனா இப்படி விதம் விதமான பாடசாலை உபகரணங்களெல்லாமிருந்தென்ன! அத்தனையும் தீண்டத்தகாதவைகள் போல அலங்கோலமாகச் சிதறிக்கிடந்தன.

தனஞ்சயன் மட்டும் தனக்கும் இவைகளுக்கும் எதுவித சம்மந்தமுமில்லையென்பது போல இவைகளை விட்டு அன்னியப்பட்டு ஏதோ ஆழ்ந்த சிந்தனையிலமர்ந்திருந்தான்.

தனஞ்சயனின் உள்ளம் அறுந்துபோன பல்லியின் வாலாகத் துடித்துக் கொண்டிருந்தது. நேரம் இரவு ஏழுமணி. அந்த இரவுப்பொழுதிலும் நெற்றிப் பரப்பிலிருந்து வியர்வைத் துளிகள் வழிந்தோடி வந்து கன்னங்களை ஈரப்படுத்தின. உடுத்தியிருந்த சாரத்தின் ஒரு தலைப்பினை எடுத்து ஈரத்தை ஒற்றியெடுத்துக் கொண்டான். மனமோ ஒரு நிலையில் நில்லாது தாமரை இலைத் தண்ணீராக ஏய்த்துக் கொண்டிருந்தது. தனஞ்சயன் என்றைக்குமில்லாத வகையில் பயந்து போயிருந்தான்.

கனகசிங்கம் மாஸ்டர் அந்த ஊரைப் பொறுத்தவரையில் ஒரு கண்ணியவானாகவேயிருந்தார். அவரையொரு கனவானாகவே ஊரவர் கருதினர். அவருடைய பழக்க வழக்கங்களும், அமைதியான சுபாவமும், அதிகமாகக் கற்ற கல்வியும் அவருக்கு இப்படியொரு அபரிமிதமான கௌரவத்தைக் கொடுத்தது. யாருடனும் வளவளாப் பேச்சுக்கள் வைத்துக் கொள்ளவோ, வீண்வம்பு தும்புகளில் மாட்டிக் கொள்ளவோ, அடுத்தவர் வீடுகளிற்குள் அழையாவிருந்தினராக நுழைந்து இங்கிதம் தெரியாது பழகுவதோ அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. தன்னைப் போலவே தனது மனைவி, பிள்ளைகளையும் வாழப் பழக்கிக் கொண்டார். இருந்தாலும் முன் வீட்டு தவச்செல்வத்துடனும் மனைவி பவதாரணியுடனும் மட்டும் பழகாமலிருக்க முடியவில்லை. இது ஒரு விதிவிலக்காகவே அமைந்திருந்தது.

தவச்செல்வம் ஒரு உறவு முறையைக் கொண்டிருந்தவனல்ல. இருந்தும் சுற்றிச் சுற்றிப் பார்த்தால் என்னும் வழக்கிற்கிணங்கப் பார்க்கப்போனால் ஏதோ ஒரு தூரத்து உறவாம். ஆனால் அந்தத் தொட்டகுறை, விட்டகுறை

யெதையுமே இருதரப்பினரும் பேணிக்கொள்ளவிட்டாலும் "ஐயோ என்றால் அயலவன்" என்னும் நியதிக்கிணங்க அவர்களுடன் கொஞ்சம் ஊடாடித்தான் வாழவேண்டியிருந்தது.

தவச்செல்வம் அந்த ஊர்க்கிராமசபையில் ஒரு சிற்றூழியன். கிராமசபைத் தலைவர் பாலசிங்கம் ஐயாவின் கையைக் காலைப் பிடித்துக் கெஞ்சி மன்றாடி இந்த உத்தியோகத்தைப் பெற்றுக்கொண்டான். அவனுடைய ஐந்தாம் தரத்துப் படிப்புக்கு இது கிடைத்தது ஓர் யோகம்தான். கோழி மேய்த்தாலும் கோறணமேந்திலையல்லவா மேய்க்கின்றான்.

இன்றைய தனது கடமையைச் செவ்வனே முடித்த திருப்தியுடன் மேற்கு வானை நோக்கி மறைந்து கொண்டிருந்தான் கதிரவன். இருட்டுமில்லாத வெளிச்சமுமற்ற ஒரு மைம்மற் பொழுது. அந்தச் சின்னஞ் சிறிய மணல் ஒழுங்கைக்குள் நடந்து வந்து கொண்டிருந்தாள் பவதாரிணி. இவளை யாரும் இந்தப் பெயர் சொல்லி அழைப்பதில்லை. சாதாரணமாக எல்லோருடைய வாய்களிற்குள்ளும் நுழைய முடியாத ஒரு வில்லங்கமான பெயர். ஊரவர் எல்லோருமே 'பபா' என்றே அழைப்பர். மூத்தவர், இளையவர் என்ற வயது வேறுபாடின்றி இவள் எல்லோருக்கும் பபாக்காதான்.

தோட்டத்திலிருந்து கொண்டு வந்திருந்த நுங்குக் குரும்பைகளை அரிவாளால் வெட்டிக் கொண்டிருந்தாள். இரண்டு ஆடுகளைச் செல்லமாக வளர்க்கின்றாள். அவைகட்குரிய இரவுத் தீனியைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தாள். அடிக்கடி வானத்தை வேடிக்கை பார்ப்பதும் நுங்கை அறுப்பதுமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தாள். பிள்ளை பெற்று வளர்க்கக் கொடுத்து வைக்கவில்லை. இந்த வாயில்லாப் பூச்சிகளையாவது வளர்த்துக் காலத்தை ஓட்டுவோம் என எண்ணிக் கொண்டாள்.

தவச்செல்வம் வரும் நேரமாகின்றது. அவன் வந்தென்ன!

வராமல் விட்டென்ன! காலையில் புறப்பட்டவன் வேலை முடித்துக் கிராமசபைத் தலைவரின் சொந்த வேலைகள் ஊழியங்களெல்லா வற்றையும் முடித்துவிட்டு இரவு எட்டு எட்டரையளவில் சாவகாசமாக வீடு வந்து சேர்வான். வந்ததும் சட்டியிலிருப்பதைச் சாப்பிட்டுவிட்டுச் சிவனேயென்று படுத்துவிடுவான். பபாக்கா வானத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டு பரிதாபமாக அமர்ந்திருப்பாள். இதுதான் அவர்களின் அன்றாட வாழ்க்கையாயிருந்தது.

பரந்த நெற்றி, சுருள் சுருளான கட்டைக் கூந்தலை அனாயசமாக அள்ளி முடிந்திருப்பாள். பெண்களுக்கான அளவான உயரம். கறுப்புமல்லாத சிவப்புமல்லாத நடுத்தர நிறம். அவளையொரு அழகியென்றால் அது ஆகாசப் புழுகாயிருக்கும். அழகற்ற அவலட்சணமானவள் என்றாலும் அதுவும் கடவுளுக்கு ஏற்காது. இத்தனைக்கும் வயது முப்பத்தைந்தைத் தாண்டவே தாண்டாது. பிள்ளை பெறாத தேகம். கன்னிப் பெண்ணின் மேனிக்கு நிகராக மதாளிப்பாயிருந்தது. பார்ப்பவரைச் சற்றுக் கிறங்கச் செய்யும் தோற்றம். ஆனால் தவச்செல்வனை மட்டும் இவைகள் உறங்கச் செய்தன.

பொழுது சாய்ந்துவிட்டால் கனகசிங்கம் மாஸ்டர் வீடு கிட்டத்தட்ட ஒரு பாடசாலை போலவே தோற்றமளிக்கும். பிள்ளைகள் மூவரும் தனித்தனியாக அமர்ந்திருந்து தீவிரமாகப் பாடங்களைப் படிப்பர். தனஞ்சயனுக்கு மட்டும் படிப்பதற்கென்று பிரத்தியேகமாக அறை ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது.

தனஞ்சயனின் வீட்டு ஹோலில் பக்கத்து வீட்டு பபா அக்காவின் பேச்சுக் குரல் கேட்டது. தனஞ்சயனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. அவனுடைய வாய்க்குள் இப்போது தேமாமீட்டரை வைத்துப் பார்த்தால் நூற்று மூன்றுக்கு மேல் காய்ச்சலைக் காட்டும். பாண் போறணையிலிருந்து வெளியேறுமஉஷ்ணம் அவனுடலைத் தகித்துக் கொண்டிருந்தது.

"கடவுளே என்ன நடக்கப் போகுதோ! தூக்குப் போட்டுச் சாகத்தான் வேணும்."

தனஞ்செயன் அளவுக்கதிகமாகப் பயந்து போயிருந்தான். அவனையுமறியாது உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

"டேய் தனஞ்சயன்!" யாரை நினைத்துப் பயந்து கொண்டிருந்தானோ! அதே பபாக்காவின் குரல். குரல் மட்டுமல்ல அவனுடைய அறைக்கே வந்துவிட்டாள் பபாக்கா.

"டேய்! நடந்தது நடந்து போச்சுது. நான் வடிவாய் யோசிச்சுப் பாத்தன். உன்னிலை ஒரு பிழையுமில்லை. என்னிலைதான் முழுக் குற்றமும். நீ ஒண்டுக்கும் கவலைப்படாதை"

கிசு கிசு குரலில் கூறினாள் பபாக்கா. ஹோலில் அமர்ந்திருக்கும் கனகசிங்கம் தம்பதிகளுக்கோ தனஞ்சயனின் தங்கைக்கோ கேட்டு விடக் கூடாதென்ற எச்சரிக்கை உணர்வில்தான் இந்தக் கிசுகிசுப்பு.

நடந்தவைகளை நினைத்துப் பார்த்தான் தனஞ்சயன்.

"டேய்! என்ரை மனிசனைக் கலியாணம் முடிச்சு என்ன சந்தோஷத்தைக் கண்டிருக்கிறன். ஒரு பிள்ளையோ குட்டியோ! உந்தப் பேய் மனிசனிட்டைப் போய் அம்பிடாட்டில் நானும் உன்னைப் போலை ஒரு வடிவான பெடியனைக் கட்டிப் பிள்ளை குட்டியும் பெற்று எவ்வளவு சந்தோஷமாயிருந்திருப்பன்."

பபாக்கா சொல்லச் சொல்ல தனஞ்சயனின் ஆண்மை நரம்புகள் முறுக்கேறிக் கொண்டன. உணர்ச்சிகள் எங்கே புதைந்திருக்கின்றன என்று புரியாத சிறுவனாக வாழ்ந்து கொண்டிருந்தவனுக்கு ஏதோ ஒரு பொறி தட்டியது. புற்றுக்குள் பதுங்கியிருந்த பாம்பைத் தடிகொண்டு தட்டிக் கிளறி வெளியிலே

எடுத்து விட்டது போன்ற ஒரு தீவிரமான நிலைமை. சப்த நாடி நரம்புகளும் சங்கொலியெழுப்பி நின்று சன்னதமாடின. வெறிகொண்டெழுந்தவன் எதைப்பற்றியும் அலட்டிக் கொள்ளாது ஒரே அணைப்பில் பபாக்காவைத் தன்னுடலுடன் கட்டியணைத்துக் கன்னத்தில் இச் சென்று ஒரு முத்தத்தையும் பதித்து விட்டான்.

"வடுவா றாஸ்கல்! என்னை ஆரெண்டு நினைச்சாய். துலைச்சுப் போடுவன் தெரியுமே!"

கோபம் கொண்ட கருநாகமாகச் சீறியவள் தனஞ்சயனின் கன்னத்தில் பளார் என ஓங்கி அறைந்து விட்டாள்.

இதுதான் நடந்தது. தனஞ்சயனின் அளவுக்கதிகமான பயத்திற்கிதுவே காரணம்.

"நான் உனக்கு மட்டுமில்லையடா, உன்னைப் போல எல்லாருக்கும் என்ரை புருஷனைப் பற்றி கேவலமாய்த்தான் கதைக்கிறனான். அவரையொரு விசரன் எண்டுதான் செல்லுறனான். அப்பிடிக் கட்டின புருஷனைக் கேவலமாய்ச் சொன்னால் ஆரெண்டாலும் என்னை வித்தியாசமாய்த்தான் நினைப்பினம். எல்லாம் என்ரை தலைவிதி எண்டிட்டுப் புருஷனை மதிச்சு எங்கடை குடும்பப் பிரச்சினையளைச் சொல்லாமலிருக்க வேண்டும். அப்பிடியென்றால் நீ என்னைத் தப்பாய் நினைச்சிருக்க மாட்டாய். இப்பிடி நடந்திருக்காது. பிழை என்னிலை. கவலைப்படாதை." பபாக்கா போய்க்கொண்டிருந்தாள். போன உயிர் வந்துகொண்டிருந்தது தனஞ்சயனுக்கு.

* * *

## 13

# குரங்குமனம்

நேரம் மாலை ஐந்து மணியாகிக் கொண்டிருந்தது. சரியாக ஐந்தரை மணிக்கெல்லாம் சுகந்தன் வீட்டில் நிற்க வேண்டும். இப்படித்தான் ஏற்பாடு இன்றைக்குத் தவற முடியாது. சொன்ன சொல்லைக் காப்பாற்றியே ஆகவேண்டும்.

"இஞ்சாருங்கோ! நான் ஒருக்கால் வெளியிலை போயிற்று வாறன். பிள்ளையளைப் பார்த்துக் கொள்ளுங்கோ!" என்னுடைய அனுமதிக்குக் காத்திராமல் கையில் பையொன்றுடன் நடையைக் கட்டினாள் எனது அருமை மனைவி மனோரஞ்சிதம். இன்று எனக்குச் சம்பள நாள். அலுவலகத்திலிருந்து வந்த கையோடு சம்பளம் முழுவதையும் பறித்தெடுத்துவிட்டாள். இனிச் சும்மாயிருப்பாளா! வீட்டுப் பொருட்கள் வாங்குவது, கடைக் கணக்கைத் தீர்ப்பது, சீட்டுக்காசு, மாலா அக்காவின் வட்டிக்காசு இப்படி ஏராளமான பிரச்சினைகளெல்லாம் அவள் தலையில்தானே! பாவம்! அவள் தானே குடும்ப நிர்வாகத்தை முன்னின்று நடாத்துபவள்.

அதுசரி நேரம் ஓடிக்கொண்டிருக்கிறது. எனக்குக் கையும் ஓடவில்லை காலுமோடவில்லை.

"சே! எங்கை வைச்சனான்! சம்பளக் காசிலை மனிசிக்குத் தெரியாமல் மூவாயிரம் எடுத்து வைச்சனான். இப்ப எங்கை வைச்சது எண்டதை மறந்து துலைச்சுப் போட்டனே! எல்லா இடமும் தேடியாச்சு. சாமிப்படத்தட்டு, தலைவாசல் கப்பு, குசினிப் பிளேட் எல்லாம் தேடியாச்சு. எங்கை!

அவசரத்திலை வைச்சது! மனிசிக்குத் தெரிஞ்சு தெண்டால் நடக்கிறது வேறை ... அதுக்குப் பயந்துதானே ஒளிச்சுப் பதுக்கி எங்கையோ வைச்சிட்டன். வைச்ச இடம் நினைவில் இல்லை"

கடந்த மாதம் பத்தாம் திகதி எனது பிறந்தநாள். பிறந்தநாள் 'பார்ட்டி' வைக்கின்றதாக நண்பர்களுக்கு சொல்லிவிட்டேன். கொடுத்த வாக்குறுதியை மீறவே முடியாது. எனது வறுமை மிக்க குடும்ப நிலைமையில் சம்பளக்காசில் "பார்ட்டி" வைப்பதற்கு மனைவி சம்மதிக்கவே மாட்டாள். அது தானிந்த ஒளிப்பும் மறைப்பும். வேறென்ன செய்ய! நண்பர்களையும் சமாளிக்க வேண்டும். இல்லையேல் அலுவலகத்தில் என்னை யாரும் மதிக்க மாட்டார்கள். இதற்குள் குடும்பக் கஷ்டம் வேறு.

இப்போது பிள்ளைகள் மூன்றையும் கவனிக்க வேண்டும். மனைவி வீட்டுக்குத் திரும்பும்வரை கவனமாகப் பார்க்க வேண்டும். மூத்தவள் நிசா. வயது ஐந்து. அவள் அவ்வளவு குழப்படியில்லை. அடுத்தது ஷர்மிலா. வயது மூன்று மகா துரு துரு. ஓரிடத்தில் நிற்கமாட்டாள். ஷாமினி கடைக்குட்டி! ஆறு மாதம் கூட ஆகவில்லை. இப்போது பிரச்சினை கொடுப்பவள் மூன்று வயது ஷர்மிலா. மெல்லத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டேன். ஐயோ! கடவுளே! பிள்ளையைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அந்தக் குழந்தையின் காதுகளிலிருந்த தோடுகளைக் கழற்றி மூவாயிரம் ரூபாவுக்கு அடகு வைத்தது. இப்போது ஞாபகம் வந்து மனதைக் கறையான்களாக அரித்தெடுத்தன. வீட்டு வாடகைப் பணம் செலுத்த வேண்டும். வீட்டுக்காரி கமலாக்கா வந்து உயிரை வாங்கினாள். வேறு வழியின்றிப் பிள்ளையின் காதுத் தோடு வைத்தாயிற்று. மூத்தவள் நேசறிக்குப் போவதால் அவளின் தோடுகள் தப்பி விட்டன. இவளின் தோடுகளை எப்படியும் மீட்டுக் கொடுக்க வேண்டும். பாவம்! குழந்தையல்லவா!

"கடவுளே ! வைச்ச மூவாயிரத்தையும் காணவில்லை. உங்கை தேடாத இடமுமில்லை. ஒரு வேளை ஒளிச்சு

வைச்சதை மனிசி கண்டு கிண்டு எடுத்துப் போட்டாளோ! எதுக்கும் கேட்டுப் பார்ப்பம். சே! விசர் வேலை! அவள் எடுக்கவில்லை யெண்டால் வீணாய் மாட்டுப்பட வேண்டி வந்திடும். பொல்லைக் குடுத்து அடி வாங்கினமாதிரிப் போய்விடும். வேண்டாம். பிள்ளையாரே! இப்ப இந்த மூவாயிரமும் கிடைச்சுதெண்டால் இந்தப் பிள்ளையின்ரை தோட்டுக் குச்சியை எண்டாலும் எடுத்துக் குடுக்கலாம். "பார்ட்டி"யும் வைச்ச பாடில்லை. இந்தப் பிள்ளையின்ரை தோடு எடுக்காமல் விட ஏலுமே! "பார்ட்டி"யைப் பிறகொரு நாளைக்கு வைக்கலாம். ஒண்டுக்கும் இப்ப வைச்ச இடத்திலை காசைக் காணவில்லையே! மனிசிக்குப் பயந்து அவசரத்திலை எங்கையோ வைச்சுப் பொரிஞ்சு போனன். மறதி! மறதி! கண்டறியாத மறதி!

"பார்ட்டி"க் கென்று அங்கே சரவணனும் சுகந்தனும் மட்டும் தான் வருவார்கள். ஆனந்தனும் வருவான். வந்தால் ஒரு சோடா மட்டும் போதும். அவன் "ட்ரிங்ஸ்" எடுக்க மாட்டான். என்னையும் சேர்த்தால் மூவாயிரம் ரூபா போதும். எனக்கும் "ட்ரிங்ஸ்" அடிக்க வேண்டும் என்று பெரும் ஆசையாக இருக்கின்றது. ஒரு சதுரமும் இரண்டு "ரின்னும்" வாங்கிக் கோபாலு கடையிலை கோழிப்பொரியலும் ஒரு 'டிஸ்' றாலும் வாங்கினால் எல்லாம் திருப்தியாயிருக்கும். கோபாலு கடைக் கோழிப் பொரியல்.... நினைத்தாலே வாயூறும்.... அடிக்கப் போகும் 'தண்ணி'க்குத் தோதாகப் பொரிப்பான் மனிதன். எப்போது இதைச் சுவைத்துத் தண்ணியையுமடிக்கலாமென்று என்னுடைய மனமும் ஆலாய்ப் பறந்தது. உண்மைதான் ஆனால் வைத்த இடத்தில் காசைக் காணவில்லை. தண்ணியாவது.... வென்னியாவது... ! பிள்ளையின் வெற்றுக் காதுகளும் மனச்சாட்சியை குடைந்தெடுத்துக்கொண்டிருந்தன.

கையில் அரிசிப்பையுடனும் மரக்கறி வகைகள், எண்ணெய்ப் போத்தல் இன்னும் ஏதேதோ பொருள்களைச் சுமக்க முடியாது சுமந்து கொண்டு தெருப் படலைக்குள்ளால் வந்து விட்டாள் மனைவி. நேரத்தைப் பார்த்தேன். இன்னும் ஐந்தரையாகவில்லை. அது சரி ஆகியென்ன ஆகாமல் விட்டென்ன! வைத்த இடத்தில் பணமில்லையே! பார்ட்டிக்கும்

போக முடியாது. பிள்ளையின் தோட்டை எடுத்துக் கொடுக்கலாம் என்றால் ஒரு இழவுக்கும் காசில்லையே! பைத்தியமே பிடித்துவிடும் போல இருந்தது.

வழக்கமாகக் கொடுக்கும் சம்பளக்காசில் மூவாயிரம் ரூபா குறைத்துக் கொடுத்ததுக்கு மனைவி என்னைச் சும்மா விட்டிருப்பாளா!

'எடி விசர் மனிசி! என்ரை ஒவ்வீசிலை வேலை செய்யுற ஒரு கூட்டாளியின்ரை பெண்சாதிக்கு ஏதோ வருத்தம் கடுமையாம். கடனாய்க் கேட்டான். வாற சம்பளத்திலை திருப்பித் தருவான். எல்லாரும் பாவம் தானே! மனிசருக்கு மனிசர் உதவி செய்ய வேணும்தானே! அருமையானதொரு கற்பனையை உருவாக்கி அவிழ்த்து விட்ட புரளியைப் பாவம்! அப்படியே நம்பி விரித்தாடிய படத்தைச் சுருக்கி அடங்கிக் கொண்டாள் மனோரஞ்சிதம்.

"பிள்ளையாரே! இந்த மூவாயிரமும் எங்கை போயிருக்கும். இப்ப கிடைச்சுதெண்டால் பிள்ளையின்ரை தோட்டை எடுத்துக் குடுக்கலாம். "பார்ட்டி"யைப் பிறகு ஒரு நேரம் பார்ப்பம். அது சரி எங்கை வைச்சனான் மனம் அறுத்து வைத்த ஆமை இறைச்சியாக நேரம் கடந்தும் துடித்துக் கொண்டிருந்தது. தேடுகின்றேன். தேடித்... தேடித்... "அடக் கடவுளே இஞ்சை கிடக்குது! நானும் ஒரு மடையன். அம்மிக்குக் கீழை வைச்சிட்டு உவடமெல்லாம் தேடி....!"

நேரம் இன்னும் ஐந்தரையாகவில்லை. சரியான நேரம். நண்பர்கள் காத்துக் கொண்டிருக்கப் போறார்கள். சைக்கிளை எடுத்தேன் போவதற்கு, வெற்றுக் காதுகளுடன் மூன்று வயதுச் ஷர்மிலாவும் முன்னே வந்து நின்றாள். கோபாலு கடைக் கோழிப் பொரியல்! மனம் கேட்கவில்லை. நான் போகின்றேன். தோடு பின்பும் எடுக்கலாம்தானே!

* * *

14

## தாமரை இலைத் தண்ணீர்

அந்த அழகான திருமண மண்டபத்தில் விருந்தினர்கள் கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. சரியான சுபமுகூர்த் தத்தில் சடங்கு நிகழ்வுகள் அனைத்தும் வெகு நேர்த்தியாகவே நிறைவேறியிருந்தன. இருந்தும், இப்போதும்கூட ஏராளமானவர்கள் மணமக்களுக்கு அறுகரிசி போட்டு வாழ்த்துக்கள் தெரிவித்து கையில் கொண்டு வந்திருந்த என்வலப்புக்கள், அன்பளிப்புக்கள் அனைத்தையும் அக மகிழ்ந்து கொடுத்துக் கொண்டிருந்தனர்.

எல்லோரையும் அப்படிச் சொல்லமுடியாது. சிலர் வயிறெரிந்தும் கொடுத்துக் கொண்டிருந்தனர் போலவே தெரிந்தது. என்னைப்போல அவசரமாக வீடு போக வேண்டியவர்கள் அங்கே மேல்மாடி விருந்து மண்டபத்திலே அலைமோதிக்கொண்டிருந்தனர்.

சே! சும்மா சொல்லக்கூடாது. அருமையான சாப்பாடு! சம்பா அரிசிச் சோத்துக்கு அந்தக் கடலைப் பிரட்டல்கறி என்ன சோக்காயிருக்குது! வெங்காயச் சம்பல்! எட! உங்கை எல்லாரும் தான் வெங்காயச் சம்பல் போடுகினம். இப்பிடி ஆராலும் போட ஏலுமே! எல்லாம் அருமை! உண்ணானை! அந்தச் சமையல்காரன்ரை கையுக்கு ஒரு மோதிரமடிச்சுப் போடலாம்.

செல்ஃப் சேவீஸ் என்னும் புதிய நடைமுறை விருந்தினர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பாகிப் போய்விட்டது. ஏன்! எனக்கும்தான். வெள்ளித்தட்டு நிறையச் சம்பா அரிசிச் சோற்றை

அள்ளிப் போட்டு பிடித்தமான கறி, குழம்பு, பொரியல் வடை அத்தனையையும் ஒன்றாகப் போட்டுக் குவித்தபடி ஒரு மூலைக்குள் முடங்கிக் கொண்ட எனக்கு அவசர உணர்வு பிடரியைப் பிடித்துத் தள்ளியது.

"கவனமப்பா! பஸ் பிரயாணம்! காசைத் துலைச்சுப் போடாதேங்கோ. கெதியாய் அலுவலை முடிச்சுப்போட்டுக் கவனமாய் வாருங்கோ. காசு கவனம். நீங்கள் ஒரு மறதி பிடிச்ச அறணை. உங்களைத் தனியவிட எனக்குப் பயமாய்க் கிடக்குது. மறக்காமல் காசைப் போட்டிடுங்கோ. வரேயுக்கை ஒரு பணியாரப்பையும் மறந்திடாமல் கொண்டு வந்திடுங்கோ!"

மனைவி அகிலா திரும்பத் திரும்ப என்னிடம் சொல்லிவிட்ட ஆலோசனைகள் நெஞ்சிலே வந்து இரை மீட்டுக் கொண்டிருந்தன.

எல்லாம் சரிதானே! ஒரு பயந்த சீவன். எடுத்ததுக் கெல்லாம் பயப்புட்டுப் பயப்புட்டு ...... சே! அறுகரிசி போடுறபோதே கையோடை என்வலப்பையும் குடுத்திட்டன். இனியென்ன பிரச்சினை! சாப்பிட்டுமாச்சுது. ஒரு பணியாரப்பை! ஏலுமெண்டால் இரண்டு மூண்டைக் கூட எடுத்துக் கொண்டு நடையைக் கட்ட வேண்டியது தானே.

பன்னிரண்டரைக்கு ஒரு மன்னார் பஸ் இருக்குதாம். அதிலை போனால்தான் கமலாக்கா வீட்டுச் சாமத்திய வீட்டுக்கும் பின்னேரமெண்டாலும் போகலாம். வடிவாய்ச் சாப்பிட்டாச்சுது. பின்னையென்ன! ஆயிரம் ரூபா சுளையாய் என்வலப்பிலை வைச்சுக் குடுத்தனான்தானே! அப்ப வடிவாய்த்தானே சாப்பிடவேணும். உங்கை என்னைப்போல ஆயிரம் ரூபாவை ஆர் குடுக்கப்போறான்! எல்லாரும் முன்னூறும், ஐநூறும் எண்டு குடுத்திட்டு மூக்கு முட்டச் சாப்பிட்டிட்டு போவினம். என்ரை சித்தியின்ரை மகள்! என்ரை ஒண்டைவிட்ட தம்பி! அவனுக்கு

ஆயிரம் போடத்தானே வேணும். இல்லாட்டில் நாளைக்கு மதிப்பினமே! எனது தாயாரின் தங்கை மனோகரியின் மகனுக்குத்தான் இன்று திருமணம் நடந்துகொண்டிருக்கின்றது. அம்மாவும் சித்தியும் நீண்ட காலமாகப் பகைமை பாராட்டி வருகின்றார்கள். இருந்தும் மனோகரிச் சித்தி எனக்கு மட்டும் விசேடமாக அழைப்பு விடுத்திருந்தாள். சித்தியையும் சித்தப்பாவையும் தவிர எனக்கு அவர்களின் பிள்ளைகளைத் தெரியாது. அம்மாவின் பகைமை காரணமாக நாங்கள் யாருமே யாழ்ப்பாணப் பக்கம் வருவதேயில்லை. அன்று எதிர்பாராத வகையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு நான் வந்த வேளையில் பஸ் நிலையத்தில் என்னைக் கண்டு கொண்ட சித்தி எப்படியோ அடையாளம் கண்டுவிட்டாள். எதேச்சையான தொரு சந்திப்பு!

"என்ரை ராசா! நீ என்ரை சின்னக்காவின்ரை சதீஸ் எல்லே! கடவுளே! கொம்மாதான் தேவையில்லாமல் என்னோடை பழிப்பிடிச்சுக் கொண்டிருக்கிறா எண்டால் நீங்களும் அப்பிடியே மோனை! யாழப்பாணத்திலை சித்தியெண்டு ஒருத்தி இருக்கிறாள் எண்டு நினைச்சு நீயெண்டாலும் ஒரு நாளைக்கு வீட்டை வந்திருக்கலாமே!"

பஸ் நிலையமென்றும் பாராது என்னைக் கட்டியணைத்துக் கண்கலங்கினாள். எனக்கும் கண்கள் பனித்துவிட்டன.

"இந்தாடா! உனக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். என்ரை மூத்தவன் பானுவுக்கு வாற புதன்கிழமை கலியாணம். காட்டைப்பிடி, கொம்மாவுக்குக் காட்டாதை. தெரிஞ்சால் மனிசி உன்னையும் மறிச்சுப்போடும். அது ஒரு பிடிச்சிராவி. இல்லாட்டில் இப்ப முப்பது வருசமாய் என்னோடை பறையாமலிருக்குமே! நீயெண்டாலும் வா மோனை! உனக்கும் என்ரை மூத்தவனைத் தெரியாது. அவனுக்கும் நீயொரு அண்ணையெண்டு தெரியாது. எப்பிடியும் வா. என்ரை அக்காவின்ரை இடத்துக்கு நீயெண்டாலும்

வந்திடு.'' மீண்டும் கெஞ்சிக் கலங்கினாள் சித்தி. என் மனமும் ஐஸ்கட்டியாகக் கரைந்து விட்டது. தூர்ந்து போயிருந்த உறவைப் புதுப்பிக்க வேண்டும். அதற்கு என்னைத் தயார்ப்படுத்தியிருந்தேன்.

நேரம் நண்பகல் பன்னிரண்டு மணியென்று எனது கைக்கடிகாரம் என்னை எச்சரித்தது. இப்போது நடக்கத் தொடங்கினால்தான் பஸ்நிலையம் சென்று பன்னிரண்டரை மன்னார் பஸ்ஸைப் பிடிக்க முடியும்.

அதுசரி! என்வலப்பை மாப்பிளையிட்டைக் குடுத்திட்டன்தானே!

என்னை நானே பரிசீலித்துக் கொண்டேன். ஒரு நெருடல்! மாப்பிள்ளையிடம் என்வலப் கொடுத்த ஞாபகம் இல்லவே இல்லை. மாப்பிள்ளைக்கு கைலாகு கொடுத்தேன் மணப்பெண்ணிடம்தான் என்வலப்பைக் கொடுத்திருந்தேன். செக்கச் செவேலென்ற மிக அழகாக அனுஷ்கா போன்று சிரித்தபடி யிருந்தாள். நான் என்னை மறந்து அவளிடமே கொடுத்து விட்டது இப்போதுதான் எனது மரமண்டைக்கு ஞாபகத்தில் வந்தது.

கடவுளே இப்ப என்ன செய்யுறது! சித்தியின்ரை மகனுக்குக் குடுக்க வேண்டியதை எங்கையோ கிடந்தவளுக்குக் குடுத்திட்டனே! என்னெண்டு திருப்பிக் கேக்கிறது! மரியாதை கெட்ட வேலையாய்க் கிடக்கு வேறை காசிருந்தாலும் பறவாயில்லை. திரும்பவும் ஒருக்கால் மாப்பிள்ளையிட்டைக் குடுக்கலாம். அதுக்கும் வழியில்லை. இதென்ன சோதனை!

நெருப்புக்குள் கால் வைத்த நாய்க்கடுவனாகத் துடித்தேன். சித்தியும் சித்தப்பாவும் என்னைக் கண்டு கதைத்துமிருந்தார்கள். இந்த நிலையில் நான் வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு மாப்பிள்ளைக்கு என்வலப் கொடுக்காது போக முடியுமா! ஒரேயொரு வழி! கொடுத்த என்வலப்பை யாரையாவது பிடித்துத்

திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும். இது எப்பிடிச் சாத்தியமாகும்.

நெற்றி நிறைய விபூதி. பெரிதாக ஒரு சந்தனப்பொட்டு, வெள்ளை வேட்டி, நாஷனல் சட்டையில் ஒரு வயோதிபர் பார்ப்பதற்கு ஒரு ஓய்வு நிலைத் தமிழாசிரியர் போலக் காணப்பட்டார். பெண்வீட்டுக்காரருடனே நின்று ஏதேதோ காரியங்களில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவரையும் விட்டால் வழியில்லை.

லபக்கென அந்த மனிதனைப் பிடித்தேன். எனது பரிதாப நிலையை விலாவாரியாகக் கூறியும் விட்டேன். என்னை ஒரு மாதிரியாகப் பார்த்தார். வெட்கத்தால் உடல் கூசியது. இனிக் கூசியென்ன! மூசியென்ன. எனக்குக் காரியம் நடந்தாக வேண்டுமே. மணப் பெண்ணிடமிருக்கும் என்வலப்பை மாப்பிள்ளையிடம் கொடுத்து விட்டால் எனது பிரச்சினை தீர்ந்துவிடும்.

கொஞ்சம் பொறுக்க வேணும் தம்பி. இப்ப உதுக்கை போய் ஒண்டும் செய்யேலாது. ஆக்கள் நெருக்கடி குறையட்டும் தேடிப்பாப்பம் சொல்லிவிட்டு மனிதர் சுடுகஞ்சி குடித்த நாய்போல ஓடியாடித் திரிந்து கொண்டிருந்தார். அவருடைய ஆறுதல் வார்த்தைகள் ஒருவித தெம்பைக் கொடுத்தன.

பன்னிரண்டரை மணிக்குப் புறப்பட வேண்டிய நான் இப்போது இரண்டு மணியாகியும் வீடு போகக்கூடிய சூழ்நிலையில்லை சனங்களும் குறைந்தபாடாயில்லை. அந்த வயோதிபரையும் பார்க்க முடியவில்லை. அறுந்து விட்ட பல்லியின் வாலாக என்னிதயம் துடித்துக் கொண்டிருந்தது. இந்தக் கேவலத்தில் சூழ்நிலை புரியாது மனைவி தொலை பேசியில் ஓயாது அழைத்துக் கொண்டிருந்தாள்.

“என்னப்பா செய்யிறியள்! இன்னும் கலியாண வீடு முடியவில்லையே! என்வலப்பை மறக்காமல் குடுத்திட்டியளே! நீங்கள் ஒரு மறதி பிடிச்ச மனிசன்தானே! அதுதான் கேட்டனான். கெதியாய் வெளிக்கிட்டு வாருங்கோ. சாமத்திய வீட்டுக்கும் போக வேணும். என்ன! பொம்பிளை மாப்பிளை மணவறையை விட்டு எழும்பும் வரைக்கும் உங்கை நிண்டு வாய்பாத்துக் கொண்டு நில்லாமல் கெதியாய் வாருங்கோ. பணியாரப்பையை மறந்து போகாதேங்கோ. எல்லாமிந்த மனிசனுக்குச் சொல்ல வேணும்.”

நனைந்துபோன சீறுவாணமாக மெல்லிய ஒரு சீறலுடன் ஃபோனை வைத்துவிட்டாள்.

நாசமறுந்தவளே! நானிஞ்சை பானையுக்கை தலை யோட்டின ஆட்டுக் குட்டியின் நிலை மாதிரி ஒண்டும் செய்யேலாமல் நிண்டு அவதிப்படுகிறது உனக்குத் தெரியுமோ! திட்டினேன். அதுவும் மனதுக்குள்தான்.

நேரம் மூன்று மணியாகிக் கொண்டிருந்தது. அந்த வயோதிபரும் புன்சிரிப்புடன் என்னை நோக்கி ஓடிவந்தார். நான் கொடுத்த அதே என்வலப்பை ஒருவித சிரிப்புடன் எனது கைக்குள் திணித்துவிட எனக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.

திருவிழாவில் தொலைந்து போன குழந்தையைத் தேடிப் பிடித்துக் கையில் கொடுத்துவிட்ட ஆனந்தம். இனிப் பிரச்சினையில்லை. தலை நிமிர்ந்து போய் நின்று மாப்பிள்ளையிடம் என்வலப்பைக் கொடுத்து என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு போக வேண்டியதுதான். நல்லவேளை பணியாரப் பையை மறக்கப் பார்த்தேன். அதில்லாமல் போனால் மனைவியிடம் ஏச்சுக்கள் திட்டுக்கள் வாங்க வேண்டிவரும். நான் மறக்க மாட்டேன். மனைவி சொல்வதுபோல நான் ஒன்றும் மோசமான மறதிக்காரனல்ல.

ஏனோ அவள்தான் என்னை அப்படிச் சொல்லித் திட்டுகின்றாள் தினமும்.

"தம்பி பானு! இவரை ஆரெண்டு தெரியுதே! உவன்தான்ரா உன்ரை மன்னாரிலை இருக்கிற பூமணிப் பெரியம்மாவின்ரை மகன். உன்ரை அண்ணை. எங்கை! உன்ரை பெரியம்மாவின்ரை பிடிவாதக் குணத்தாலை அண்ணன் தம்பியையும் தெரியாது. இனசனங்களையும் தெரியாத நிலைமையாப் போச்சுது."

மாப்பிள்ளைக்கு என்னை முழுமையாக அறிமுகப்படுத்தி வைத்தாள் சித்தி. நாங்களிருவரும் ஒரவரையொருவர் வாஞ்சையுடன் கட்டித் தழுவிக் கொண்டோம். சரி இனி நடையைக் கட்ட வேண்டியதுதான். நேரம் போய்க் கொண்டிருந்தது. இனி பஸ் பிடித்து மன்னாருக்குப் போய்ச் சேரக் குறைந்தது நான்கு மணித்தியாலங்களாவது பிடிக்கும் கமலாக்காவின் சாமத்திய வீட்டுக்குப் போகவேண்டும். இப்போதைய பிரச்சினை அது ஒன்றுதான்.

மன்னார் பஸ்ஸில் ஏறிவிட்டேன். கொண்டக்டர் மிக மெதுவாகவே ரிக்கற் எழுதிக் கொண்டிருந்தார். எனக்கு ஆத்திரமாகவிருந்தது.

உவன் பாவியென்ன ஆக்களின்ரை வீட்டு விலாசம், அடையாள அட்டை நம்பர் எல்லாம் கேட்டெழுதுறானோ!

மனதுக்குள் சினந்து கொண்டேன். ஒருவாறு ரிக்கெற் போடும் படலம் முடிந்ததும் பஸ்ஸும் புறப்பட்டது. சாரதி நல்ல வாட்டசாட்டமான இளைஞனாயிருந்தான். படு வேகமாகத்தான் பஸ்ஸை ஓட்டுவான் போலத் தெரிந்தது. ஆனால் நான் நினைப்பது ஒன்றுமே எனது வாழ்க்கையில் நடப்பதில்லையே! மிக மெதுவாகவே நகர்ந்து கொண்டிருந்தது

பஸ் வண்டி. உந்த ஓட்டம் ஓடி உவன் பாவி எப்ப எங்களைக் கொண்டு போய்ச் சேர்க்கப் போறான்! உந்த றைவர் முந்தி லான்ட் மாஸ்ரர் ஓடியிருப்பானோ! அல்லது றோட்டிலை கல்லு நெரிக்கிற மிசின் கிசின் ஓடியிருப்பானோ! அப்பிடித்தான் நினைக்க வேண்டிக் கிடந்தது. உவன்ரை ஓட்டத்தைப் பார்க்க அது சரி மாப்பிள்ளையிட்டை நேரடியாக என்வலப் குடுத்தாச்சு அதுவும் ஆயிரம் ரூபா. எனக்கு அங்கை நல்ல மரியாதையாயிருக்கும். எல்லாம் சரி! எங்கை பணியாரப்பை! கடவுளே நான் அதை எடுக்காமல் வந்திட்டன். உவள் பாவி இண்டைக்கு கொல்லப் போறாள்.

உடம்பில் உதறலெடுத்தது. வீடு போய்ச் சேர்வதற்குள் ஏதாவதொரு பொய்யைத் தயார்படுத்த வேண்டும்.

அப்பாடா! ஒருவாறு வீடு சேர்ந்துவிட்டேன். முதலில் சேட்டை கழற்றினால்தான் நிம்மதி. அதைக் கழற்றிக் கொடியில் போடும் போது புத்தம் புதிய ஒரு ஆயிரம் ரூபாத்தாள் மடிந்தபடி கீழே விழுந்தது.

இதென்ன இது ஆயிரம் ரூபா!

அடக்கடவுளே! என்வலப்புக்குள் இதை வைக்காமல் வெறும் என்வலப்பைக் கொடுத்துவிட்டேன். தலை சுற்றிக் கொண்டு வருகின்றது. தாமரை இலையில் தண்ணீர் தங்காததைப்போல் என்னுடைய மனத்திலும் ஏனோ எதுவுமே தங்கி நிற்குதில்லையே!

* * *

15

## கடவுளே கைவிட்டாள்....!

"உண்ட களை தொண்டனுக்குமுண்டு" மதிய உணவுக்குப் பின்பு ஒரு குட்டித் தூக்கத்துக்காக ஏங்கித் தவித்த கண்களை மெல்லக் கைகளினால் தடவி ஆசுவாசப்படுத்திக் கொண்டார் சிவபெருமான். இருந்தாலும் தன்னையறியாத தூக்கக் கலக்கத்தில் இரண்டொரு தடவைகள் தூங்கி வழிந்து உமையம்மையின் மடிமீது சாய்ந்து எழுந்த கொண்டதையும் மறக்கவில்லை, இனியும் முடியாது. சற்றுத் தூங்கியெழுவோம் என்று எண்ணிக்கொண்டிருக்கையில் புள்ளி மயில் மீது மிக அவசரமாக வந்திறங்கினார் முருகப்பெருமான். முருகனின் திடீர் வருகையானது அம்மைக்கும் அப்பனுக்கும் சிறு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"அம்மை அப்பனே வணக்கம்! நானிப்போது பூலோகத்திலிருந்து வருகின்றேன்."

"அப்படியா முருகா! நல்லது. பூவுலகத்தில் என்ன விஷேசம்! கோயில்களில் கிரமமாகப் பூசைகள் நடைபெறு கின்றனவா! மக்கள் சேமமாக வாழ்கின்றார்களா!" சிவனாரின் வார்த்தைகள் சம்பிரதாய பூர்வமாக அமைந்திருந்தன. "ஆமாம்! பேச்சில் மட்டும் குறைச்சல் இல்லை. மக்களின் நலன்களில் அக்கறையே இல்லை தங்களுக்கு." "முருகா! என்ன வார்த்தை பேசுகின்றாய்! யாருடன் பேசுகின்றாய் என்ற ஞாபகத்துடன்தான் பேசுகின்றாயா! தந்தையுடன் - மைந்தன் பேசுவது இப்படித்தானா?" அன்னை பார்வதி இவ்வாறு சற்றுக்

கடுந்தொனியில் பேசிவிட முருகனின் கோபவேசம் எப்படியோ தணிந்து கொண்டது. "முருகா! உனக்கென்ன பிரச்சினை! ஏன் முகத்தை உம்மென்று ஒரு மாதிரி வைத்திருக்கின்றாய்! விடயத்தை விவரமாகச் சொல்!" ஈஸ்வரனார் சற்றுக் கலவரமடைந்தார்.

"தந்தையே! நான் பூவுலகிலுள்ள இலங்கையென்னும் அழகிய தீவிலிருந்து நேரடியாக வருகின்றேன். அங்கே மக்கள் படும் அவலங்களைத் தங்களுக்கு எடுத்துரைக்கலாமென்று ஓடோடி வந்திருக்கிறேன்".

"அப்படியா! சிறிலங்கா! ஆசியாவின் முத்து. மிக அழகான தேசம். அது சரி அங்கேயுள்ள மக்கள் என்ன அவலப்படுகின்றார்களா! ஒரு காலத்தில் அவர்கள் அல்லற்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால், இப்போது அங்கே நல்லாட்சி நடக்கின்றதே! இனியுமென்ன அவலம்! இனியுமேன் அச்சம்!"

"அப்பனே! நான் கூறுவதையும் கொஞ்சம் தயவு செய்து கேளுங்கள். எங்கும் நிறைந்தவன், எல்லாம் வல்லவன், எல்லாம் தெரிந்தவன்தான், தாங்களென்று எண்ணிக் கொண்டிருக்கும் உங்களுக்கு உங்களின் அருளாட்சியில் நடந்து கொண்டிருக்கும் சில குறைபாடுகளைக் கண்டுபிடிக்க முடியவில்லையே" "வேலா! வேண்டாத கற்பனைகளைவிட்டு விடு. வீணாகச் சினம் கொள்ளாதே! விடயத்திற்கு வா."

அடிக்கடி அன்னை பரமேஸ்வரியும் இவர்களின் இந்தச் சச்சரவுக்குள் மூக்கை நுழைத்துக் கொண்டிருக்க வேண்டி யிருந்தது. இல்லையெனில் தந்தைக்கும் மைந்தனுக்குமிடையில் விபரீதங்கள் ஏதாவது நிகழ்ந்து விடுமோ என்னும் அச்ச உணர்வுதான் அவரும் கதைக்க வேண்டிய நிலைமைக்குக் காரணமாயிருந்தது. முருகனுக்கு ஏனோ தெரியாது சதா மூக்கு

நிறையக் கோபம். முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க ஏராளமாக உணர்ச்சி வசப்பட்டிருந்தார். முன்பும் இப்படித்தான் ஒரு மாங்கனிக்காகத் தந்தையுடன் தகராறுபட்டுக் கொண்டார். சிவனேயென்று தன்பாட்டுக்குப் போய்க்கொண்டிருந்த பிரம்ம தேவனை வம்புக்கழைத்துப் பிரணவத்தின் பொருள் கேட்டு அவனைக் குட்டிக் கேவலப்படுத்தினார். அத்துடன் நிற்காது தந்தை சிவனாரைத் துரத்திப் பிடித்து ஓம் என்னும் பிரணவப் பொருளின் கருத்தை விளக்கி அவருக்கு ஞானோபதேசம் செய்து, அவரை மட்டம் தட்டினார். இப்படி முருகனின் லீலைகளை அன்னை பரமேஸ்வரியும் ஆணித்தரமாக நினைவில் வைத்திருந்தார்.

"சுவாமி! அங்கே பாருங்கள்! எங்கள் மூத்தவன் விநாயகனுமிங்கே வந்து கொண்டிருக்கின்றான். இவர்கள் இருவரும் ஏதோ திட்டம் தீட்டித்தான் ஒரே சமயத்தில் இங்கே வந்திருக்கிறார்கள். எனக்கென்னவோ பயமாக இருக்கின்றது நாதா!" உமையம்மை அளவுக்கதிகமாகப் பயந்திருந்தார். அதிலும் நியாயமில்லாமலில்லை என்பதை ஈசனுமறியாமலில்லை. முருகன் இளையவன், சிறுபிள்ளை, எத்துணை வேகமாகச் சினம் கொள்வானோ! அத்துணை வேகமாக அவனைச் சமாதானப்படுத்திவிடலாம். ஆனால் மூத்தவன் விநாயகனுக்குக் கண்டபடி கோபம் உண்டாவதில்லை. ஆனால் வந்தால் வந்ததுதான். அவனுடைய கோபமும் நியாயமாகவே இருக்கும். அவனைச் சமாதானப்படுத்துவதற்குள் அம்மைக்கும் அப்பனுக்கும் போதும் போதுமென்றாகிவிடும். முருகன்தான் ஏதாவது சிறுபிள்ளைத்தனமாக வந்து சீண்டிக் கொண்டிருக்கின்றான் என்று வைத்துக் கொண்டாலும் பிள்ளையாரின் வருகையானது மிக மிக முக்கியமான தொன்றாகவே அமையப்போகின்றது. என்னவோ! ஏதோ! ஈஸ்வரனின் புலித்தோலாடை அவரையு மறியாது ஈரமாகிவிடும் போன்றதொரு அபாய நிலைமையை உணர்ந்த பரமசிவன்! உடலெங்கும் வியத்துக் கொட்ட அவசரமாக வந்திறங்கிய கணபதிக் கடவுள்

"அம்மையே அப்பனே இருவருக்கும் வணக்கம்" என்றபடி அவர்களை அணுகினார்.

"நல்லது வினாயகா! என்ன! சொல்லாமற் கொள்ளாமல் அண்ணனும் தம்பியும் ஒரே சமயத்தில் ஒருமித்து வருகை தந்திருக்கின்றீர்கள். என்ன விசேசம்?"

"தந்தையே! அதைப்பற்றி தம்பி முருகன் விவரமாகக் கூறியிருப்பானே! பூவுலகிலுள்ள இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் நாளும் பொழுதும் ஏராளமான சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். அவர்களின் துன்பங்களைத் தங்களுக்குக்கெடுத்தியம்பவே நாங்கள் தங்களிடம் வந்திருக்கின்றோம்". "கணபதியே! முன்னைய காலங்களில் தமிழ் மக்கள் ஏராளமான துன்பங்களை அனுபவித்திருக்கின்றார்கள் என்பதை ஒப்புக் கொள்கின்றேன். ஆனால் சமீபத்தில் புதிய ஆட்சி ஒரு நல்லாட்சியாக அமைந்தது மட்டுமல்ல வடக்குக் - கிழக்குத் தமிழ் மக்களுக்குப் போதிய சேவைகளையும் சலுகைகளையும் செய்து வருகின்றது.

அப்படியிருக்கும்போது தமிழர்களுக்கு என்னதான் பிரச்சினைகள்! எனக்கு ஒன்றுமே புரியவில்லை." "உண்மையைச் சொல்லப்போனால் தங்களுக்கு ஒன்றுமே புரியவதில்லை. அடிக்கடி அன்னையுடன் சச்சரவுபட்டுக் கொள்வதும், வேண்டாத காரியங்களில் ஈடுபடுவதும், நஞ்சருந்துவதும்தான் தங்களின் வேலைகள் என்றாகிவிட்டன. இந்த நிலைமையில் மக்களின் துன்ப துயரங்களைத் தீர்ப்பதற்குத் தங்களுக்கெங்கே நேரம்." இத்தனை நேரமும் அமைதியாகவிருந்த முருகன் ஒரே பாய்ச்சலில் சீறியெழுந்தார். "முருகா! வடிவேலா! கொஞ்சம் அமையாய்ப் பேசு. உன் அண்ணன் விநாயகனைப் பார்! எத்துணை அடக்கமாகவும், அன்பாகவும் பேசுகின்றான். நீ மட்டும் இப்படித் துள்ளி விழுந்து பேசலாமா!" "அன்னையே! பூவுலகில் அதுவும் இலங்கைத் தீவில் பார்க்குமிடமெல்லாம் கோயில்கள். அதிலும்

வடக்குக் - கிழக்குப் பகுதி வாழும் தமிழர்கள் கூடுதலாக என்னையும் அண்ணனையும் வைத்தே கோயில்களில் வழிபடு கின்றார்கள். எங்களையே தமிழ்க் கடவுள்களாக எண்ணுகிறார்கள். எனவே அவர்களின் குறைகளைத் தீர்ப்பது எங்களிருவரின் பெரிய கடமைகளாகின்றன. எனவேதான் நாங்களிருவரும் தங்களிடம் உதவி நாடி வந்திருக்கின்றோம் தந்தையே!" இப்போது முன்னையது போலன்றி முருகனுடைய குரலில் ஒருவித பணிவு இழையோடியிருந்தது.

"ஆம் தந்தையே! தம்பி கூறுவது முற்றிலும் சரி! தாங்கள் கூறுவதுபோல் இலங்கையில் நல்லாட்சி நிலவுவதும் தமிழர்களுக்குச் சில சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதெல்லாம் உண்மையானவைதான். ஆனால், தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஏராளமான பிச்சல் பிடுங்கல்கள் பிரச்சினைகளே நிறைந்திருக்கின்றன."

"சரியாகச் சொன்னாய் விக்னேஸ்வரா! தமிழர்கள் எப்போதுமே இப்படித்தான். அவர்கள் என்றைக்குமே ஒற்றுமைப்பட்டது கிடையாது. சிறுபான்மையினமாக வாழும் அவர்கள் தங்களுக்குள்ளே தாங்கள் தகராறுபட்டுக் கொண்டிருப்பதினால் அவர்களால் உறுதியாக உரிமைகளைப் பெறவோ தனித்துவத்துடன் நிம்மதியாக வாழவோ முடிவ தில்லை." "ஆமாம் தந்தையே! தாங்கள் கூறுவதை நானும் ஒப்புக்கொள்கின்றேன். குறைந்த எண்ணிக்கையில் வாழும் அவர்களுக்குள் ஆளாளுக்கொரு கொள்கைகள் ஏராளமான கட்சிகள் பலவிதமான அமைப்புக்கள் உண்டு. அதனால் சிதறுண்டு போயிருக்கின்றனர். இதன் காரணமாக ஓர் உறுதியான போராட்டத்தையோ நல்ல தீர்மானங்களையோ எடுக்க முடியாது அல்லாடுகின்றனர்." விநாயகப் பெருமானின் இந்த கூற்றை சிவனார் மட்டுமல்லாது அங்கிருந்த பார்வதியாரும் ஏகமனதாக ஒப்புக்கொண்டார்.

"ஆமாம் நாதா! நானும் அவர்களைப் பற்றி அறிந்தவைகளைச் சொல்கின்றேன். இயல்பிலேயே ஏனைய இனங்களைவிடத் தமிழர்களே கல்வியிலும் - வீரத்திலும் - செல்வத்திலும் சிறப்பாக இலங்கையில் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். எனினும் அவர்களிடம் காணப்படும் பொறாமை, போட்டி மனப்பான்மைகள், குரோத உணர்வுகள் போன்றவைகள் அவர்களுக்கே எதிரிகளாகிவிடுகின்றன. அவர்கள் தலை தூக்க முடியாது இன்னமும் பெரும்பான்மையினத்துக்கு அடிபணிந்து வாழ்வதற்கு இதுவும் ஒரு காரணம்".

"அடேயப்பா! உமா! நான் உன்னை ஏதோ என்று நினைத்திருந்தேன். உனக்கு இத்தனை விடயங்கள் தெரிந்திருக்கின்றதா!" செல்லமாகவும் மகிழ்ச்சியாகவும் உமையம்மையைக் கட்டியணைத்தார் பரமேஸ்வரன். "போதும் விடுங்கள்... சீ... பக்கத்தில் வயது வந்த இரண்டு ஆண்பிள்ளை களையும் வைத்துக்கொண்டு கட்டியணைத்து ஆட்டம் போடுகின்றாராம்! ஆட்டம்!" செல்லமாகக் கடிந்து கொண்ட அன்னை உமாவை எப்படியோ கவனித்துக் கொண்ட விநாயகரும் முருகனும் வெட்கத்தினால் செய்வதறியாது பார்வையை மறுபக்கம் பதித்தார்கள். "பிள்ளைகளே இதை நன்றாகக் கேளுங்கள்! இலங்கையில் நடந்தேறிய கொடிய போரில் ஏராளமான அப்பாவிகள் கொல்லப்பட்டார்கள். போரில் ஈடுபட்ட தமிழர் தரப்பினர் அழித்தொழிக்கப்பட்ட பின்னர் அரசியல் ரீதியாக ஓர் உறுதியான நிலையை அடைய வேண்டும் என மக்கள் விரும்பினர். அதன் பிரதிபயனாக தமிழ்த் தலைவர்கள் ஒன்றிணைந்த ஒரு கட்சியை உறுதிப்படுத்தி அதன் மூலம் உலகநாடுகள், புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வாயிலாக ஈழத்தமிழரின் இருப்பை உலகுக்குக் காட்டினர். இவ்வாறு தமிழர்கள் ஒருவாறு வளர்ச்சிப் போக்கைக் காணத் தொடங்கினர்".
"இனி நான் கூறுகின்றேன் தந்தையே! இந்த வளர்ச்சியை விரும்பாத சில துரோகிகள் இந்தக் கட்சி என்னும் பெரு விருட்சத்தைத் தறித்துத் துண்டாடிவிடத் திட்டமிட்டனர். இதன்

மூலம் சூழ்ச்சிக்காரர், வஞ்சகர்கள் போன்றோரின் வலையில் சிக்கிக் கொண்ட தமிழ்த் தலைவர்களின் கட்டமைப்பு நாளும் பொழுதும் ஆட்டம் காணத் தொடங்கியது. போட்டி பொறாமை, உட்பூசல்களால் பல சாதனை படைக்கவிருந்த தலைவர்களை வீழ்த்திச் சோதனைக்கு ஆளாக்கி கொண்டிருக்கின்றன. தமிழர்களின் ஒற்றுமையீனமே அவர்களின் இனத்துக்கு எதிரியாகிக் கொள்ளப்போகின்றது." முருகன் வார்த்தையை முடிக்க முன்பு அன்னை பராசக்தி தனக்குத் தெரிந்தவைகளைக் கூறத் தொடங்கினார். "இது இலங்கைத் தமிழர் வரலாற்றில் காலம் காலமாக நடந்து வரும் கசப்பான நிகழ்வு." "சரி இப்போது உங்களுக்கு என்ன செய்ய வேண்டும். விக்னேஸ்வரா நீ சொல்லு"

"தந்தையே ! முதலில் இந்தப் பெயரை விடுத்து என்னை வழமை போல விநாயகா என்றே அழையுங்கள். இந்தப் பெயரில் என்னை அழைப்பது ஏனோ எனக்கு ஒரு மாதிரியாக இருக்கின்றது."

"சரி, முருகா! நீ என்ன வரம் கேட்கப் போகின்றாய். நீ சொல்லு?"

"ஆமாம் பிள்ளைகளே! சும்மா வளவளவென்று இனியும் பேசிக்கொண்டிருக்காது வந்த விடயத்தை முடித்துக் கொண்டு உங்கள் அப்பரைக் கொஞ்சம் உறங்க விடுங்கள். பாவம்! உணவருந்திய நேரம் முதல் தூக்கக் கலக்கத்தில் கொட்டாவி கொட்டாவியாக விடுத்துக் கொண்டிருக்கின்றார். "பராசக்தி சற்றுக் கேலி கலந்த குரலில் உண்மையையே சொல்லியிருந்தார். "ஐயனே ஈசனே! வடக்கிலும் - கிழக்கிலும் வாழும் தமிழ் மக்கள் எப்படியோ எல்லாம் வாழலாம் என நம்பிக் கொண்டிருந்தனர். அவர்களின் தலைமைகளெல்லாம் தலைக்கொருவராய் தனக்குத் தனக்கென ஒருவிதமான தலைக்கனத்துடன் தறிகெட்டுத் திரிந்து கொண்டிருப்பதினால்

அவர்களின் கற்பனைகள் ஆசைகளெல்லாம் நிராசையாகி விட்டதெனப் புலம்பியழுகின்றனர் தமிழ் மக்கள். அவர்கள் எல்லோரும் தமது தமிழ்த் தலைமைகளின் பச்சோந்திப் போக்குக்களினால் மிகவும் நொந்து போயிருக்கின்றார்கள். தமிழர்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென உறுதிபடக் கூறுகின்றார்கள். அதுதான் தங்களிடம் வந்தோம். அவர்களைக் காப்பாற்றுவதற்காக", "நாதா! தங்களுக்கு நினைவிருக்கின்றதா! இந்த வார்த்தையைச் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ஒரு மிகப் புகழ் பெற்ற தமிழ்த் தலைவரும் அகிம்சை வாதியுமான ஒருவர் சொல்லிவிட்டு இறந்துபோனார். அதே வார்த்தையை இப்போதைய தமிழர்களும் கூறுகின்றார்கள் எனின் உண்மையில் இலங்கைத் தமிழரின் தலைவிதியை என்னவென்று சொல்வது? "

"ஆமாம் தேவி! இந்தத் தமிழர்கள் முதலில் ஒரே தலைமைத்துவத்துக்குள் ஒன்றுபடட்டும். அன்றே இவர்களின் இந்தச் சாபக்கேடு ஒழிந்துவிடும். அதுவரைக்கும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று என்னை இரந்து வேண்டினாலும் கூட தலைமைகள் திருந்தும்வரை - தலைவர்களின் மனங்கள் மாறும்வரை தலை கீழாக நின்றாலும் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. அவர்களின் தலை விதியின்படியே நடக்கும்". "ஐயனே! இதுதானா உங்கள முடிவு?" விநாயகரும் முருகனும் ஒருமித்த குரலில் வினயமாகவும் விசனமாகவும் கேட்டபடி அவரவர் வாகனங்களிலேறிப் புறப்பட்டுக்கொண்டிருந்தனர். சிவபெருமானும் உமையம்மையும் தங்களின் இயலாமையின் வெளிப்பாடாகப் பெருமூச்சுக்களை மட்டுமே பிரசவித்து விட்டு மௌனமாகினர்.



சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலத்திற்கு முன்பே மண்ணில் சிறுகதை இலக்கியம் அறிமுகம் ஆயிற்று ஆரம்ப காலங்களில் மேலைத்தேய நாடுகளில் விதைக்கப்பட்டு, அதன் பின் தமிழகத்தில் வேரூன்றி, இறுதியில் எம் தாய்த்திரு மண்ணிற்கும் வியாபித்துக் கொண்டது தான் இச்சிறுகதை இலக்கியம். இது அவ்வப்போது தனது வீரியத்தைக் காட்டி எமது இலக்கிய உலகில் ஒரு கலக்குக் கலக்கியிருந்ததை யாரும் மறப்பதற்கில்லை. ஏராளமான இலக்கிய ஜம்பாவான்கள் சிறுகதை ஊடாக தமது எழுத்து வன்மையைப் பறைசாற்றியிருக்கின்றார்கள். சிறுகதைக்கென்று ஒரு தனி அந்தஸ்தினைப் பெற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனாலும் இப்போதைய காலகட்டத்தில் பிரசவமாகும் சில சிறுகதைகள் முன்னய படைப்பாளிகளின் படைப்புத் தரத்துடன் இணைத்துப் பாராட்டக் கூடிய வகையில் அமைவதில்லை என்பது என்னைப் போன்ற வாசகர்களிடத்தில் காணப்படும் மிகப்பெரிய குறைபாடாகவே உள்ளது. இருந்தும் விதிவிலக்காக ஒரு சில சிறுகதை எழுத்தாளர்களும் இன்றுவரை நம்முடன் வாழ்ந்து கொண்டு ஆரோக்கியமான படைப்புக்களை வழங்கி வருகின்றார்களென்பதும் மறுக்கப்படவொண்ணாததே!

அந்த வகையில் இன்றுவரை இலக்கியம் சமைத்துக் கொண்டிருக்கும் படைப்பாளிகளில் திரு.மிருசுவில் தமிழ்தாசன் சிறப்பாகப் பாராட்டப்பட வேண்டியவர். சிறுகதை, நாவல், கவிதை, நாடகமென்று இலக்கியப் பயணத்தில் பல்வேறு தடங்களைப் பதித்துச் சோர்வின்றி எழுதிக் கொண்டிருப்பவர். யதார்த்த நடையும், சிக்கலற்ற மொழியாட்சியும், சிறந்த நகைச்சுவையும், சமூகத்திற்கு வேண்டிய காத்திரமான கருப்பொருளும் இவரின் எழுத்துக்கு மெருகூட்டி நிற்கின்றன. அண்மையில் உதயன் வாரமலரில் தொடர்ச்சியாக 16 வாரங்கள் வெளிவந்த "ராசியில்லா ராசா" நகைச்சுவைத் தொடர் இவரின் திறமைக்கு மற்றொரு சான்று இத்தனை பன்முகத்திறன் கொண்ட மிருசுவில் தமிழ் தாசன் இன்னும் பல்லாண்டு காலம் எம்முடன் வாழ்ந்து பலநூறு படைப்புக்களைப் படைத்து வெளியிட எல்லாம் வல்ல சித்திரவேலாயுதப் பெருமானருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

978-955-42283-1-3

**இவ்வண்ணம்**
**க.சண்முகலிங்கம்**
(ஓய்வுநிலை முகாமையாளர்,
மக்கள் வங்கி, சாவகச்சேரி.)

9 789554 228313

சக்தி பதிப்பகம், மீசாலை. - 0773160464